
Vol.2, Issue 12 | Annual Subscription ₹ 420

@NewsRotary /RotaryNewsIndia

மே 2020

# ரோட்டரி நியூஸ்

INDIA
www.rotarynewsonline.org



Rotary




தென்னிந்தியாவிலிருந்து வந்துள்ள பட்டறைத் தொழிலாளர் குடும்பங்களை RC மன்னார்குடி, RID 2981, ஒரு கல்லூரியில் தங்க வைத்து, அவர்கள் சமைத்து சாப்பிட உணவுப் பொருட்கள் மற்றும் காய்கறிகளை சங்கத்தினர் அளித்துள்ளனர்.

# உள்ளே


**10** **கொரோனா ஊரடங்கில் கூலித்தொழிலாளர்களின் பசியாற்றிய மும்பை குயீன்ஸ் ரோட்டரி சங்கம்**
ஊரடங்கின்போது 60 லட்சம் ஏழைகளுக்கு உணவு வழங்கிய மும்பை குயீன்ஸ் ரோட்டரி சங்கம்.

**16** **ஊரடங்கின் போதும் தன்னுடைய உணவுச் சேவையைத் தொடரும் RC சோலாப்பூர்**
12 ஆண்டுக்காலமாக முதியோர்களுக்கு தினமும் சுடச்சட உணவளிக்கும் இந்த சங்கத்தின் அறப்பணியை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது.

**20** **இந்தியர்களின் மனம் கவர்ந்த ஆஸ்திரேலிய டாய்லெட் நாயகன்**
இந்தியாவிலும், இதர வளரும் நாடுகளிலும் டாய்லெட் கட்டித் தருவதை விருப்பமான பணியாகச் செய்துவரும் ஆஸ்திரேலியர் மார்க் பல்லாவின் கதையை படியுங்கள்.

**26** **ரோட்டரி இந்தியாவின் உதவிக்கு ஹர்ஷ் வர்தன் நன்றி தெரிவிக்கிறார்**
விடியோகான்பரன்சிங் மூலம் மத்திய அமைச்சர்களிடம் ரோட்டரியின் கொரோனா நிவாரணப்பணிகளையும், அடுத்த கட்ட செயல்திட்டங்களையும் எடுத்துக்கூறிய மூத்த ரோட்டரி தலைவர்கள்.

**48** **ஜிம்பாப்வேயில் ரோட்டரி இந்தியாவின் மருத்துவச் சேவை!**
ஜிம்பாப்வேயில் 3 ஆயிரம் பேருக்கு சிகிச்சை அளித்த VTT இந்திய மருத்துவக் குழுவினர்.

**54** **பெங்களூரின் காஃபித் தாகத்தைத் தீர்க்கும் முயற்சி**
பெங்களூரில் இருந்தால் அல்லது சென்றால் பிரபலமான பிராமின் பில்டர் காபி கடைக்குச் செல்லத் தவறாதீர்கள்.


**56** **நினைவில் நிற்கும் தைவான் விடுமுறைப் பயணம்**
சுற்றுலாப்பயணிகளை கவரும் இயற்கை எழில் கொஞ்சும் தைவான்.

**62** **வடோதரா மாணவர்கள் உயரப் பறக்க உதவும்**
குழந்தைகள் கல்வி கற்பதை ஊக்குவிக்கும் பரோடா மெட்ரோ ரோட்டரியின் சிறப்புத் திட்டம்.


















**அட்டைப்படத்தில்:** மும்பை குயீன்ஸ் நெக்லேஸ் ரோட்டரி மற்றும் அவர்களின் கூட்டாளிகள் வழங்கிய உணவு..

# மடல்கள்

## சரியான நேரத்தில் வெளியான ரோட்டரி செய்திகள் மின்-பதிப்பு




*ஏப்ரலில் மின்னிதழை வெளியிட்டதற்கு நன்றி; பெரும்பான்மை ரோட்டரியன்கள் வீட்டில் இருக்கும் நேரத்தில் இது ஒரு நல்ல நடவடிக்கையாகும்.*

*"தாய் மற்றும் சேய் நலனில் ரோட்டரி அக்கறை காட்டுகிறது" என்கிற தலைப்பில் RI தலைவர் மார்க் மலோனெ வழங்கியுள்ள கருத்துகள் ஈர்க்கக்கூடியவை; வளரும் நாடு களில் அவை ஒரு முக்கியமான தேவையாகும்.*

*அவருடைய செய்தி, ஊட்டச் சத்துக் குறைபாடு, நோய்களுக்கான காரணங்களை அடித்தள நிலை யிலிருந்தே அகற்றவேண்டும் என்கிற நோக்கத்தைக் கொண்டுள்ளது.*

*விஜய் ஹட்டிஹொளி*
RC *ஹூப்ளி நார்த்* — RID 3170

*ரோட்டரி செய்திகள் ஏப்ரல் இதழை வெற்றிகரமாகப் பதிப்பித்ததற்கும், அதை மின்னிதழாகப் பகிர்ந்து கொண்டதற்கும் வாழ்த்துகள். இந்தியாவில் ரோட்டரியின் 100 ஆண்டுகளைப்பற்றிய பதிவு, கொல்கத்தா சந்திப்புபற்றிய கட்டுரைகள் ஆகியவை மிகச்சிறப்பாக இருந்தன.*

*பாவேஷ் ஷா, தலைவர்*
RC *மெட்ராஸ் மிட் டவுன்* — RID 3232

*ஏப்ரல் இதழ் உண்மையிலேயே மதிப்பு மிக்கதாக இருந்தது. டிஜிட்டல் தளம் அச்சு வடிவத்தைவிட மேம்பட்டது என்றும், இதைத் தொடரவேண்டும் என்றும் நான் நினைக்கிறேன். ஏனெனில், இது தாள்களின் கூடுதல் பயன்பாட்டைத் தவிர்க்கும், அதன்மூலம் காடுகள் அழிக்கப்படுவதைத் தவிர்க்கும். நாம் மரத்தைக் காப்போம், அதன்வழியாக இயற்கையைக் காப்போம்.*

*பவன் பஞ்ச்வானி,* RC *கோல்ஹாபூர் சன்ரைஸ்* — RID 3170

*இந்த இதழில் படிப்பதற்கு ஏற்ற மிகச் சிறந்த கட்டுரைகள் உள்ளன. டிஜிட்டல் இதழ் ஒரு நல்ல முயற்சியாகும், அதே சமயம், அச்சு இதழையும் தொடருங்கள்.*

*நிரஞ்சன் வைச்சல்,* RC *கோல்ஹாபூர் சன்ரைஸ்* — RID 3170

*தாள் பிரதிகளை அச்சிடுவதைவிட, டிஜிட்டல் இதழை முன்னிறுத்துவது நல்லதாகும்.*

*இந்திரகுமார் கூனெடில்லெகெ*
RC *கொழும்பு நார்த்* — RID 3220

## ரோட்டரியின் நீர்த் திட்டங்கள்

மார்ச் இதழின் அட்டைப்படத்தில், தலையில் சீரியல் விளக்குகளை அணிந்த பெண்கள் சிலர் ஒரு பண்பாட்டு நடனத்தை ஆடுகிறார்கள். தலைக்கு மேலே உள்ள இந்தச் சுமையைத் தாங்கிக்கொண்டு கச்சி தமான சமநிலையுடனும் புன்னகையுடனும் நடனமாடுகிற அவர்களுடைய திறன்கள் பாராட்டப்படவேண்டியவை.

RID பரத் பான்ட்யா தன்னுடைய செய்தியில் தண்ணீரும் தூய்மையும் ஒன்றாகச் செல்கின்றன, அவை இரண்டும் முன்னேற்றத்துக்கு அவசியம் என்று சரியாகக் குறிப்பிட்டுள்ளார், ஏனெனில், தண்ணீர்தான் வாழ்க்கை என்றால், தூய்மை என்பது வாழும் வழி.

தூய நீரை வழங்கும் மிகப்பெரிய பணியை ரோட்டரி எடுத்துக் கொண்டுள்ளது. இந்தியாமுழுவதும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு நன்மை தருகிற தன்னுடைய பல திட்டங்களின்கீழ் கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவிடுகிறது, நீரைப் பாதுகாக்கும் முயற்சிகளைத் தீவிரப்படுத்தியுள்ளது.

பஞ்சாப், ஹரியானா மற்றும் ராஜஸ்தானில் தடுப்பணைகளைக் கட்டுவது ஒரு மிகப்பெரிய பணி, இதுபோன்ற பல பணிகளுக்காக அரசாங்கத்துடன் கை கோக்கிறது RI. பகுதியளவு மலைப்பரப்பு கொண்ட இடங்களில் தடுப்பணைகள் கட்டப்பட்டன, இதன் மூலம், மழைக்கால வெள்ளங்களின் போது மண் அரிப்பு ஏற்படாமல் தடுக்கப்பட்டது, அதனால், கீழாக உள்ள பகுதிகள் காக்கப்படுகின்றன, நீர்ப்பாசனம் செய்யும் பண்ணை நிலங்களுக்குக் கூடுதல் நீர் கிடைக்கிறது.

ராஜ் குமார் கபூர்
RC ரூப்நகர் — RID 3080

## நன்கு தொகுக்கப்பட்ட இதழ்

ஒரு புதிய உறுப்பினர் என்ற முறையில், ரோட்டரி செய்திகள் இந்த அளவு தொழில்முறையுடன் தொகுக்கப்படுவதைக் காண்பது மகிழ்ச்சியும் ஊக்கமும் அளிக்கிறது; கொல்கத்தாவில் நடைபெற்ற, சேவைத் திட்டங்கள் மற்றும் பண்பாட்டு நிகழ்வுகள் ஆகிய இரண்டையும் காட்சிப்படுத்திய ரோட்டரி இந்தியா நூற்றாண்டுச் சந்திப்பு பற்றிய வண்ணமயமான ஒரு விவரிப்பை வழங்கியதற்கு என் பாராட்டுகள்.

பல கட்டுரைகள் நன்றாகத் தொகுக்கப்பட்டிருந்தன, சமூகத்தின் தேவைகளுக்காகத் தங்களைக் கூடுதலாக அர்ப்பணித்துக்கொள்ளும்படி ரோட்டரியன்களுடைய மனங்களைத் தூண்டும் RID பரத் பான்ட்யாவுடைய செய்தி, ஊக்கத்துக்கான ஒரு மிகச்சிறந்த எடுத்துக்காட்டு.

# மடல்கள்

கொல்கத்தா சந்திப்பு, 300 மில்லியன் மதிப்புள்ள சேவைத் திட்டங்களைத் தொடங்கியுள்ளது என்பதை அறிந்து மகிழ்ந்தோம்; RIPN சேகர் மேத்தா சொல்வது போல், ரோட்டரி இயக்கத்தின் வரலாற்றில் இந்தியாவின் உறுப்பினர் எண்ணிக்கை என்பது ஒரு நல்ல ஒளிக்கீற்று, நாம் வாழும் சமூகங்களுக்கான நம்முடைய கடமைகளை மேலும் வலுப்படுத்துவதற்கான ஒரு பலமான அழைப்பு. நலம், WASH மற்றும் TRF பங்களிப்புகள் போன்ற கவனப் பகுதிகள் ரோட்டரி இந்தியாவுக்கு மிகச்சிறந்த சொத்துகளாக இருந்து வந்துள்ளன.

கடந்த சில பத்தாண்டுகளாக PRIP ராஜேந்திர சாபூ பல ரோட்டரித் தலைவர்களைப் பேரார்வத்துடன் உருவாக்கியுள்ளார், ஒவ்வோர் உறுப்பினரும் தன்னுடைய ரோட்டரி பயணத்தின் தொடக்க ஆண்டுகளில் அப்படிப்பட்ட நற்குணங்களை உள்ளீர்த்துக்கொள்ளவேண்டும்.

டாக்டர் ஜெயசேகரன் V P<br>
RC பய்யனூர் — RID 3202

ரோட்டரியன்கள் எப்போதும் தங்களுடைய பின்-னை அணியவேண்டும்: RIDN என்ற கட்டுரையில் RID வெங்கடேஷ் வழங்கியுள்ள மதிப்புமிக்க ஆலோசனைகளுக்காக அவருக்கு வாழ்த்துகள்.

G சங்கர் கணேஷ்<br>
RC ஸ்ரீவில்லிபுத்தூர் கிரீன் சிட்டி —RID 3212

இந்தியாவில் நடைபெற்றுள்ள ரோட்டரி மாநாடுகளைப் பொறுத்தவரை, இந்தியாவில் உள்ள ரோட்டரியன்கள் ஒவ்வொரு நிகழ்வையும் பிரமாண்டமான முறையில் கொண்டாடுகிறார்கள்; கொல்கத்தா சந்திப்பு அதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும்.

TRF வழங்கல், சேவைத் திட்டங்கள் போன்றவற்றில், இந்திய ரோட்டரியன்களுடைய பங்களிப்புகளை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது ஆசிரியர் பக்கம். இன்று, இரக்கம் நிறைந்த சேவைகளைச் செய்வதில் இந்திய ரோட்டரி சங்கங்கள் பிறரைக்காட்டிலும் நன்கு முன்னேறியுள்ளன.

அருண் குமார் டாஷ்<br>
RC பரிபடா — RID 3262

## RIPE நாக்-கின் ஆர்வமூட்டும் சிந்தனைகள்

RIPE ஹோல்கர் நாக்-கின் பேட்டி மிகவும் ஆர்வமூட்டியது. ரோட்டரியில் இளைய மற்றும் முதிய உறுப்பினர்கள் என இருவகையானவர்களையும் சேர்க்கவேண்டிய தேவையை அவர் தெளிவாக விளக்கியுள்ளார். முதிய உறுப்பினர்கள் நம் அமைப்புக்கு நல்ல மதிப்பைத் தருவதால், அவர்களைத் தக்கவைத்துக் கொள்ளவேண்டும் என்கிறார் அவர்.

18 வயதானாலும் சரி, 80 வயதானாலும் சரி, ரோட்டரியனாக ஆவதற்குத் தவறான வயது என்று ஏதுமில்லை என்கிறார் அவர். அதேபோல், ஒரு ரோட்டரி சங்கத்துக்கென்று கச்சிதமான அளவு ஏதுமில்லை என்றும் அவர் கூறுகிறார், ஒரு ரோட்டரி சங்கத்தில் இத்தனை உறுப்பினர்கள்தான் இருக்கவேண்டும் என்று உயர்வரம்பு நிர்ணயிக்கவேண்டாம் என்று நம்மைக் கேட்டுக்கொள்கிறார்.

ஓய்வு பெற்றவர்களை அவர் ரோட்டரிக்கு வரவேற்கிறார்; ஏனெனில், அவர்களிடம் பங்களிப்பதற்கான திறமைகளும் நேரமும் பேரார்வமும் உள்ளன. அதே நேரம், ரோட்டரியின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு, இளைஞர்களை அதில் சேர்க்கவேண்டும்.

25 ஆண்டுகளுக்குமேலாக ரோட்டரியில் இருக்கிற, ரோட்டரிக்கும் சமூகத்துக்கும் சேவையாற்றுவதற்கான ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்திக் கொண்டுள்ள என்னைப்போன்ற மூத்த ரோட்டரியன்களுக்கு இது ஊக்கமளிக்கிறது. சங்கங்கள் மற்றும் மாவட்டங்களில் எங்களுடைய சேவைகள் பயன்படுத்தப்படாமல் போய்விடக்கூடாது என்றுதான் நாங்கள் கோருகிறோம், ஏனெனில், இந்தச் சேவைகள் ரோட்டரிக்குப் பலனளிக்கும்.

ராமசாமி N P<br>
RC ராசிபுரம் — RID 2982

மாதச்சுழற்சிபற்றிய ஓர் உரையாடலைத் தொடங்குதல் என்ற கட்டுரையில் MHM பற்றிப் படித்தது ஆர்வத்தைத் தூண்டியது. நான் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளேன். இந்தக் கட்டுரையின்மூலம், MHM திட்டங்களைப்பற்றி நான் சில புதிய விஷயங்களை, யோசனைகளைத் தெரிந்துகொண்டுள்ளேன்.

பெட்டி முடெபி<br>
RC லுகாயா, உகாண்டா<br>
மற்றும் தான்சானியா — RID 9211

கொல்கத்தா நூற்றாண்டுச் சந்திப்பில் ரோட்டரி நாயகர் விருது வென்ற அனைவரும், சமூகத்துக்கான தங்களுடைய மிகச்சிறந்த பங்களிப்புக்காக அறியப்பட்டவர்கள், பல தடைகள், எதிர்ப்புகளைக் கடந்தும் இவர்கள் தங்களுடைய சேவையைத் தொடர்ந்து செய்துவந்துள்ளார்கள்.

நான் அதிக் கதமை அறிவேன், காஷ்மீர் பெண்களுடைய வாழ்க்கையை மேம்படுத்துவதில் அவருடைய பணி மதிப்புமிக்கது, மிகச்சிறந்தது.

பிரசந்த் பத்மாகர் பலேராவ்.

உங்களுடைய கருத்துக்களை நாங்கள் வரவேற்கிறோம். ஆசிரியருக்கு எழுதுங்கள்.<br>
**rotarynews@rosaonline.org;**<br>
**rushbhagat@gmail.com**

**We welcome your feedback.**<br>
**Write to the Editor:**<br>
**rotarynews@rosaonline.org;**<br>
**rushbhagat@gmail.com**<br>
**Click on Rotary News Plus**<br>
**in our website**<br>
***www.rotarynewsonline.org***<br>
**to read about more**<br>
**Rotary projects.**



# சூழ்நிலைக்கேற்ப மாறுவோம்

*அன்புள்ள ரோட்டரியன்கள், ரோடராக்டர்கள்*
*மற்றும் நண்பர்களுக்கு,*

சூழ்நிலைக்கேற்ப மாறிக்கொள்ளும் நம்முடைய திறனைப் பெருக்குதல்: நம்முடைய புதிய ரோட்டரி செயல் திட்டத்தின் ஓர் இலக்கு அது. அட, அந்தத் திறனை இந்த வருடம் நன்றாகப் பரிசோதிக்கத் தொடங்கிவிட்டதே.

மார்ச் மாதத்தில், கே-யும் நானும் 30 நாட்களில் ஜிம்பாப்வே, துருக்கி, இன்னும் எட்டு நாடுகளுக்குச் செல்வதாக இருந்தது. ஜிம்பாப்வே-யில் ஒரு மருத்துவப் பணியில் பங்கேற்றுவிட்டு, லண்டனில் காமன்வெல்த் வாரச் செயல்பாடுகளைக் கவனித்துவிட்டு, 11வது நாளில் நாங்கள் ஸ்விட்சர்லாந்து மற்றும் லீக்டென்ஸ்டைனுக்கு எங்களுடைய பெட்டிகளைக் கட்டிக்கொண்டிருந்தோம்.

லண்டனுக்கான பாகிஸ்தான் உயர் ஆணையருடன் ஓர் இரவு உணவில் கலந்து கொண்டிருந்த போதுதான், எங்களுடைய பயணத்திட்டத்தில் உள்ள இடங்களுக் கெல்லாம் எங்களால் பயணம் செய்ய இயலாது என்று நாங்கள் கேள்விப்பட்டோம். ஆகவே, ஜூரிச்சுக்குப் பறப்பதற்குப் பதிலாக, நாங்கள் எவான்ஸ்டனுக்கும் ஒன் ரோட்டரி மையத்துக்கும் திரும்பினோம்.

மார்ச் மாதத்தின் தொடக்கக்காலம் முழுவதும், COVID-19 பற்றிய செய்திகள் உலகெங்கும் தீவிரமடையத் தொடங்கின. உள்ளூர் அலுவலர்களுடைய அறிவுரையைப் பின்பற்றி, பாரிஸ் மற்றும் ரோமில் நிகழவிருந்த UN அதிபர் மாநாடுகளை நாங்கள் ரத்து செய்தோம். விரைவில், உலக சுகாதார அமைப்பு இந்த வைரஸை ஒரு பன்னாட்டுப் பரவல் நோயாக அறிவித்தது, மேலும் தீவிரத் தீர்மானங் களுக்காக நாங்கள் அலுவலர்களிடம் ஆலோசனை பெற்றோம். அனைத்து ரோட்டரி மாவட்டங்களும் சங்கங்களும் அடுத்த அறிவிப்பு வரும்வரை நேருக்கு நேர்க் கூட்டங்களைக் கட்டுப்படுத்தவேண்டும் என்றும், அதற்குப் பதிலாக மெய்நிகர் கூட்டங்களை நடத்தவேண்டும் என்றும் நாங்கள் கேட்டுக்கொண்டோம்.

ரோட்டரி இயக்குநர்கள் வாரியம் தன்னுடைய முதலாவது மெய்நிகர் கூட்டத்தை நடத்தியது, இதுவரை எடுக்கப்பட்ட தீர்மானங்களிலேயே மிகக் கடினமான தீர்மானத்தை எடுத்தது: 2020 RI சந்திப்பு ரத்து செய்யப்படுகிறது. இதில் கலந்து கொள்ளத் திட்ட மிட்டுப் பதிவுசெய்திருந்த 20,000க்கும் மேற்பட்டவர் களைப் போலவே, நானும் இதனால் ஏமாற்றமடைகிறேன். சந்திப்பில் கலந்துகொள்கிறவர்கள், அவர்களுடைய குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் சக ஊழியர்கள், ஹோனலூலுவில் வசிப்பவர்களுடைய நலன் மற்றும் பாது காப்பைக் காப்பதற்காக நாங்கள் இந்த நடவடிக்கையை எடுத்தோம்.

மிகச்சிறந்த ரோட்டரிச் சந்திப்புகளில் ஒன்றாக இருந்திருக்கக்கூடிய இந்தச் சந்திப்பைத் திட்டமிட்ட 2020 ஹோனலூலு சந்திப்புக் குழுவினர், வழங்கி ஏற்பாட்டுக் குழுவினர், 2020 ஹோனலூலு சந்திப்புப் பரப்புரைக் குழுவினர் மற்றும் ரோட்டரி ஊழியர்களுக்கு நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். அவர்களுடைய கடின உழைப்பை நான் பாராட்டுகிறேன்.

அனைத்து ரோட்டரியன்களுக்கும் ரோடராக்டர்களுக்கும் புதிய செயல் திட்டத்தின் முக்கியத்துவத்தைப் புரியவைத்த படி நாம் இந்த ரோட்டரி ஆண்டைத் தொடங்கினோம். இன்று, தேவை காரணமாக நாம் அந்தத் திட்டத்தைச் செயலுக்குக் கொண்டுவந்துள்ளோம். ஒரு மெய்நிகர் நிகழ்வின் வழியாக, சந்திப்பைப் போன்ற ஓர் அனுபவத் தைக் கொண்டு வரும் ஒரு சாத்தியமும் அதில் உள்ளது. வருங்காலத்தில் இதைப்பற்றி நாம் கூடுதலாகப் பேசலாம்.

உலகம் விரைவாக மாறிக்கொண்டிருக்கிறது, ரோட்டரியும் மாறவேண்டும். இந்த அனுபவத்தைச் சமாளிப்பதற்கு, நம்முடைய மாறிக்கொள்ளும் திறனும் வலிமையும் நமக்கு உதவும். இன்றைக்கு, முன்பு எப்போதையும்விடக் கூடுதலாக நம்முடைய தலைமை உலகுக்குத் தேவைப்படுகிறது. உண்மையிலேயே, ரோட்டரி உலகை இணைக்கிறது.

**மார்க் டேனியல் மலோனி**
RI தலைவர்



# தன்னலமற்ற சேவையைத் தொடர்வோம்!


கரோனவை எதிர்க்கும் போராட்டத்தில் இந்திய ரோட்டரியினர் எந்தவித தயக்கமும் இல்லாமல் உதவிப்பணிகளிலும், நிவாரணம் அளிப்பதிலும் களம் இறங்கினர். நாடு முழுவதும் கரோனா நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கத் தேவைப்படும் மருத்துவ உபகரணங்களையும், மருந்துப் பொருள்களையும் வழங்குவதில், டாக்டர்கள், செவிலியர்களுக்கு பாதுகாப்பு உடைகள் வழங்குவது, கரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்ட சுகாதார ஊழியர்கள், போலீஸார் உள்ளிட்டோருக்கு முகக்கவசங்கள், கிருமி நாசினிகள் வழங்குவது, வீடற்ற, வேலையிழந்த தினக்கூலித் தொழிலாளர்கள் மற்றும் நிர்கதியான வெளிமாநிலத் தொழிலாளர்களுக்கு உணவுப் பொட்டலங்கள், உணவுப் பொருள்கள் அடங்கிய பொதிகளையும் வழங்குவது உள்ளிட்ட நிவாரணப்பணிகளில் நமது சேவை மகத்தானது. பொது சேவையையே நோக்கமாகக் கொண்ட நாம், கரோனா தாக்குதல் என்ற நெருக்கடியான நேரத்தில் சோதனைகளுக்கு நடுவிலும் நாம், தன்னலமற்ற சேவை என்ற நமது குறிக்கோளுக்கு இணங்க செயல்பட்டதை விவரிக்க வார்த்தைகளே இல்லை.

RI தலைவர் மார்க் மலோனி, அடிக்கடி தமது உரையின்போது ரோட்டரிதான் உலகை இணைக்கிறது என்பார். இப்போதைய சோதனையான காலகட்டத்தில் நமது செயல்பாடுகள் மூலம் அதை நிரூபித்துள்ளோம். பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ வேண்டும் என்ற நிலையில் உலகம் முழுவதிலும் உள்ள ரோட்டரியினர் ஒருங்கிணைந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கியது மறக்கமுடியாதது. ரோட்டரி அறக்கட்டளையும் நிலைமையைப் புரிந்துகொண்டு துரிதமாக தனது பேரிடர் நிவாரண நிதிமூலம் 525 ரோட்டரி மாவட்டங்களுக்கும் தலா 25,000 டாலர்கள் வழங்கி கரோனா தொற்றை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவி வழங்கவும் முன்வந்தது சிறப்பானது. இவை தவிர மருத்துவ மனைகளுக்குத் தேவையான உபகரணங்கள், செயற்கை சுவாசக் கருவிகள் உள்ளிட்டவற்றை வழங்குவதற்கு TRF நிதியிலிருந்து ரூ.7 கோடி நிதியுதவியது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் RIPN சேகர் மேத்தா, மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர் ஹர்ஷ்வர்தன் மற்றும் மத்திய சுற்றுச்சூழல்துறை அமைச்சர் பிரகாஷ் ஜாவ்டேகர் ஆகியோருடன் காணொலிக் காட்சி (விடியோ கான்பரன்சிங்) மூலம் தொடர்பு கொண்டு பேசுகையில், கரோனா தொற்றை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக பிரதமர் நிவாரண நிதிக்கு (PM CARES Fund) ரோட்டரி ரூ.25 கோடி நன்கொடை வழங்க இலக்கு நிர்ணயித்து ரூ.30 கோடி நிவாரண உதவியாக வழங்கியதைப் பெருமையுடன் குறிப்பிட்டார். நமது ரோட்டரி உறுப்பினர்களின் நிறுவனங்கள் வழங்கிய நன்கொடைகளையும் சேர்த்தால் இது ரூ.100 கோடியை எட்டிவிடும். இவை தவிர, மருத்துவமனைகளுக்குத் தேவையான உபகரணங்களை வழங்கியது, மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்குத் தேவையான பாதுகாப்பு உடைகளை வழங்கியது, முகக்க வசங்கள், கிருமிநாசினிகள் வழங்கியது, கரோனாவை கட்டுப்படுத்த போடப்பட்ட ஊரடங்கால் பாதிக்கப்பட்ட ஏழைகளுக்கு உணவுப் பொட்டலங்கள், உணவுப் பொருள்கள் வழங்கியது என ஏப்ரல் மாதத்தில் ரூ.75 கோடிக்கு நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தத் தொகை ரோட்டரியினர் தங்கள் சேமிப்பிலிருந்து கொடுத்து உதவியதாகும்.

மத்திய அமைச்சர் பிரகாஷ் ஜாவ்டேகர், இந்தியாவை பசுமையாக்கும் திட்டத்தின் கீழ் லட்சக்கணக்கான மரக்கன்றுகளை நடும் ரோட்டரியின் திட்டத்தை முழுமனதுடன் வரவேற்றுள்ளார்.

கரோனா தொற்று நமக்கு பலபாடங்களை சொல்லிக் கொடுத்துள்ளது. எனது வீட்டின் மாடித் தோட்டத்தில் மாதுளைச் செடிகள் பூத்துக்குலுங்குகின்றன. கருவேப்பிலை செடி துளிர்விட்டுள்ளது, பறவைகள் வழக்கம்போல் ரீங்காரமிட்டு பறந்துசெல்கின்றன. தினமும் காலையில் சூரியன் உதிப்பதும், மாலையில் மறைவதும் தொடர்கிறது. ஆனால், மனிதர்களாகிய நாம் கரோனா பீதியால் வீடுகளிலேயே முடங்கிக் கிடக்கிறோம். கார்கள் வீட்டின் முன் தூசிபடிந்து காணப்படுகின்றன. பேருந்து, ரயில், விமானப் போக்குவரத்தும் ஸ்தம்பித்துவிட்டது. பூமித்தாய் தனது இடத்தை மீண்டும் ஆக்கிரமித்துக் கொண்டுவிட்டாள். மனிதனைத் தவிர மற்ற உயிரினங்கள் சுதந்திரமாக உலவித்திரிகின்றன. இந்த சோதனையான காலகட்டத்திலிருந்து நாம் மீண்டு; நமது சேவைகளை புதிய உத்வேகத்துடன், புதிய சிந்தனையுடன் தொடர்வோம்.



ரஷீதா பகத்

## Governors Council

| | |
|---|---|
| RI Dist 2981 | DG N Manimaran |
| RI Dist 2982 | DG Natesan A K |
| RI Dist 3000 | DG Dr A Zameer Pasha |
| RI Dist 3011 | DG Suresh Bhasin |
| RI Dist 3012 | DG Deepak Gupta |
| RI Dist 3020 | DG M Veerabhadra Reddy |
| RI Dist 3030 | DG Rajendra Madhukar Bhamre |
| RI Dist 3040 | DG Dhiran Datta |
| RI Dist 3053 | DG Harish Kumar Gaur |
| RI Dist 3054 | DG Bina Ashish Desai |
| RI Dist 3060 | DG Anish Shah |
| RI Dist 3070 | DG Sunil Nagpal |
| RI Dist 3080 | DG Jitendra Dhingra |
| RI Dist 3090 | DG Rajeev Garg |
| RI Dist 3100 | DG Hari Gupta |
| RI Dist 3110 | DG Kishor Katru |
| RI Dist 3120 | DG Sanjay Agrawal |
| RI Dist 3131 | DG Ravee Dhotre |
| RI Dist 3132 | DG Suhas Laxmanrao Vaidya |
| RI Dist 3141 | DG Harjit Singh Talwar |
| RI Dist 3142 | DG Dr Mohan Chandavarkar |
| RI Dist 3150 | DG Pandi Sivannarayana Rao |
| RI Dist 3160 | DG Nayan S Patil |
| RI Dist 3170 | DG Dr Girish R Masurkar |
| RI Dist 3181 | DG Joseph Mathew |
| RI Dist 3182 | DG Ramesh B N |
| RI Dist 3190 | DG Dr Sameer Hariani |
| RI Dist 3201 | DG R Madhav Chandran |
| RI Dist 3202 | DG A Karthikeyan |
| RI Dist 3211 | DG Shirish Kesavan |
| RI Dist 3212 | DG S Sheik Saleem |
| RI Dist 3231 | DG Sridar Balaraman |
| RI Dist 3232 | DG G Chandramohan |
| RI Dist 3240 | DG Dr Debasish Das |
| RI Dist 3250 | DG Gopal Khemka |
| RI Dist 3261 | DG Ranjeet S Saini |
| RI Dist 3262 | DG Debasish Mishra |
| RI Dist 3291 | DG Ajay Agarwal |


Printed by PT Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by PT Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions – original content – is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced, but with permission from RNT.

# RI இயக்குனர்



## புதிய பாதையில் பயணிப்போம்

நல்ல எண்ணங்கள், நல்ல உடல் ஆரோக்கியம் இவைதான் மனிதனின் மிகப்பெரிய சொத்துகள். இந்த இரண்டிலும் உடல் நலம் தான் மதிப்புமிக்க சொத்து என்ற உண்மையை கொரோனா நமக்கு உணர்த்தியுள்ளது. நல்ல உடல்நலம் மட்டும் இருந்தால் மற்றவை நம்மைத் தேடிவரும். கொரோனா ஏராளமான உயிர்ப்பலியையும், துயரத்தையும் மட்டும் தரவில்லை, பொருளாதாரச் சரிவையும் ஏற்படுத்திவிட்டது. ஆனால், நண்பர்களே இதுவும் கடந்துபோகும்.

விடியோகான்பரன்சிங் (காணொலி காட்சிக் கூட்டங்கள்) ரோட்டரி சங்கங்கள் மற்றும் ரோட்டரி மாவட்டங்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்து விட்டது. ஆன்லைன் மூலமும், விடியோ கான்பரன்சிங் மூலமும் ரோட்டரியினர் ஒருவரை ஒருவர் தொடர்புகொண்டு பேசுவதும், தேவைப்படுவோர்க்கு பயிற்சி அளிப்பதும் நல்ல விஷயம்தானே. இதற்காக நான் ரோட்டரி சங்கத்தினரையும், ரோட்டரி மாவட்டத் தலைவர்களையும் பாராட்டுகிறேன்.

கொரோனா தொற்று பரவல் என்ற இந்த நெருக்கடியான நேரத்தில் நமது மண்டலத்தைச் சேர்ந்த ரோட்டரி சங்கங்கள் செய்து வரும் பணிகள் சிறப்பானவை. மருத்துவர்கள், செவிலியர்கள், சுகாதார ஊழியர்கள், போலீஸார் என கரோனா நோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் தனிநபர் கவச உடைகள், முகக்கவசங்கள், கிருமி நாசினிகள் வழங்குவது, செயற்கை சுவாசக் கருவிகள் உள்ளிட்ட மருத்துவ உபகரணங்களை மருத்துவமனைகளுக்கு வழங்குவது, ஊரடங்கால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் மற்றும் உணவுப் பொருள்களை வழங்குவது என ஒரு போர் வீரனைப் போல் நாம் செயலாற்றி வருகிறோம். அதுமட்டுமல்ல, மருத்துவர்கள், செவிலியர்கள், சுகாதார ஊழியர்கள், போலீஸார் தங்களின் குடும்பத்தையும் மறந்துவிட்டு, சுயநலம் இல்லாமல் மக்களைக் காக்க நேரம் பார்க்காமல் உழைத்து வருகின்றனர். இவர்கள் அனைவருக்கும் எனது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ரோட்டரியின் வரலாற்றில் முதல்முறையாக வருகிற ஜூன் மாதம் 20ம் தேதி முதல் 26ம் தேதி வரை விடியோகான்பரன்சிங் மூலம் ரோட்டரி மாநாடு நடைபெற உள்ளது. இது வரலாற்றில் முக்கிய நிகழ்வாக எதிரொலிக்கும் என்று நம்புகிறேன்.

மே இளைஞர்கள் சேவை மாதமாகும். ரோட்டரி எப்போதுமே இளைஞர்கள் மீது தனிக்கவனம் செலுத்திவருகிறது. ரோட்டரி சங்கங்களும், மாவட்டங்களும் இளைஞர்களின் திறமைகளை இனம் கண்டு சரியான முறையில் பயன்படுத்திக்கொண்டு இளம் ரோட்டரியினருக்கும், ரோட்டரி சங்கங்களுக்கும் இடையே பலமான அடித்தளத்தை உருவாக்க வேண்டும்.



Dr பரத் பாண்ட்யா
RI இயக்குநர், 2019–21

# களின் செய்திகள்

## இளைஞர்களுக்கு வழிகாட்டுவோம்!



இன்றைய உலகம் இளைஞர்களின் கையில்தான் இருக்கிறது. ஒரு நாட்டின் மிகப்பெரிய சொத்து இளைஞர்களின் பலம்தான். நாட்டின் எதிர்காலம் ஒளிமயமானதாக இருக்க வேண்டுமானால், நாம் இளைஞர்களின் கையில் அதிகாரத்தை ஒப்படைக்க வேண்டும்.

அனைத்து ரோட்டரி மாவட்டங்கள், சங்கங்கள் இளையதலைமையினர் பங்கெடுக்கும் வகையிலான திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும்.

ரோட்டரி இளைஞர்கள் பரிமாற்றத் திட்டத்தின் மூலம் உலகத்தை புரிந்துகொள்ளச் செய்யவேண்டும். ரோட்டரியின் முக்கியமான குறிக்கோளே உலகத்தில் அமைதியே ஏற்படுத்துவதுதான்.

RYLA என்பது தலைமைப்பண்பை இளைஞர்களிடம் உருவாக்கும் திட்டமாகும். இளைஞர்கள் தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ளவும் அவர்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தவும் கருத்தரங்குகள், பயிற்சி முகாம்களை நடத்த வேண்டும்.

புதிய தலைமுறையினர் சேவை பரிமாற்றத் திட்டம் என்பது குறுகியகாலத் திட்டம். பல்கலைகழக மாணவர்கள், 30 வயதுக்கு கீழான தொழில் வல்லுநர்களிடையே கருத்து பரிமாற்றத்தை ஏற்படுத்தி அவர்களிடம் மறைந்துள்ள தகுதிகளை வெளிக்கொணர வேண்டும்.

இளையதலைமுறையினரின் அறிவையும், திறமையையும், சக்தியையும், நாம் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பொறுப்புள்ள இளைஞர்களின் திறமை வெளியில் சென்றுவிடாமல் இருக்க லகானை நாம் அவர்கள் கையில் கொடுத்து விட வேண்டும். இளைஞர்களின் திறமை, போட்டியைச்சமாளிக்கும் திறன், அவர்களின் நம்பிக்கை, இடர்களை எதிர்கொண்டு செயலாற்றும் திறன் ஆகியவற்றின் மூலமே நாம் வளர்ச்சியில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

கரோனாவை எதிர்த்துப் போராடுவதில் நாம் எல்லோரும் மாவட்ட அளவிலும் சரி, நகர அளவிலும் சரி பகுதி அளவிலும் சரி ஒரு போர்வீரனைப் போல் செயல்பட்டுள்ளோம். ரோட்டரியினர் பாதிக்கப்பட்டவர்களுக்கு பலவழிகளில் தங்களால் ஆன உதவிகளைச் செய்துள்ளனர். கரோனாவை கட்டுப்படுத்துவதற்காக பிரதமரின் நிவாரண நிதிக்கு நாம் அனைவரும் சேர்ந்து திரட்டிக்கொடுத்துள்ள தொகை ரூ.100 கோடி. அதுமட்டுமல்ல, ரூ.100 கோடி மதிப்புக்கு நிவாரண உதவிகளையும் செய்துள்ளோம். அதற்காக அனைவருக்கும் நன்றி.

கடவுள் அனைவரையும் ஆசிர்வதிக்கட்டும்!



**கமல் சங்வி**
RI இயக்குநர், 2019–21


### Board of Permanent Trustees & Executive Committee

| | |
|---|---|
| PRIP Rajendra K Saboo | RI Dist 3080 |
| PRIP Kalyan Banerjee | RI Dist 3060 |
| RIPN Shekhar Mehta | RI Dist 3291 |
| PRID Panduranga Setty | RI Dist 3190 |
| PRID Sushil Gupta | RI Dist 3011 |
| PRID Ashok Mahajan | RI Dist 3141 |
| PRID Yash Pal Das | RI Dist 3080 |
| PRID P T Prabhakar | RI Dist 3232 |
| PRID Dr Manoj D Desai | RI Dist 3060 |
| PRID C Basker | RI Dist 3000 |
| TRF Trustee Gulam A Vahanvaty | RI Dist 3141 |
| RID Dr Bharat Pandya | RI Dist 3141 |
| RID Kamal Sanghvi | RI Dist 3250 |

**Executive Committee Members (2019–20)**

| | |
|---|---|
| DG Deepak Gupta<br>Chair – Governors Council | RI Dist 3012 |
| DG Nayan Patil<br>Secretary – Governors Council | RI Dist 3160 |
| DG Dhiran Datta<br>Secretary – Executive Committee | RI Dist 3040 |
| DG Ajay Agarwal<br>Treasurer – Executive Committee | RI Dist 3291 |
| DG Rajendra Madhukar Bhamre<br>Member – Advisory Committee | RI Dist 3030 |



**ROTARY NEWS / ROTARY SAMACHAR**

**Editor**
Rasheeda Bhagat

**Senior Assistant Editor**
Jaishree Padmanabhan



**ROTARY NEWS / ROTARY SAMACHAR**

ROTARY NEWS TRUST
3rd Floor, Dugar Towers,
34 Marshalls Road, Egmore
Chennai 600 008, India.
Phone : 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org
Website: www.rotarynewsonline.org


Now share articles from *rotarynewsonline.org* on WhatsApp.





# கொரோனா ஊரடங்கில் கூலித்தொழிலாளர்களின் பசியாற்றிய மும்பை குயீன்ஸ் ரோட்டரி சங்கம்

ரஷீதா பகத்


கொரோனா தொற்று உலகையே உலுக்கி வருகிறது. கொரோனாவைக் கட்டுப்படுத்தமத்திய அரசு ஊரடங்கை அமல் படுத்தியுள்ளதால் மார்ச் 28-ஆம் தேதி முதல் மக்கள் அனைவரும் வீட்டிலேயே முடங்கிக் கிடக்கின்றனர். கடைகள், வியாபார நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டதால் வெளி மாநிலத் தொழிலாளர்கள், கூலித்தொழிலாளர்கள் உண்ண உணவின்றியும் இருக்க இடமின்றியும் தவித்து வருகின்றனர்.

இந்த நெருக்கடியான நேரத்தில் ஏழை கூலித் தொழிலாளர்களுக்கு உணவு கொடுத்து உதவிக்கரம் நீட்ட மும்பை குயீன்ஸ் நெக்லஸ் ரோட்டரிச் சங்கம் முன்வந்தது. 179 உறுப்பினர்கள் கொண்ட இச்சங்கத்தின் பெண் தலைவர் சோனல் ஜவேரி, உடனடியாக இதற்கான திட்டத்தைத் தயாரித்துச் செயல்பட முனைந்தார். யாருமே எதிர் பாராத வகையில் 15 நாளில் ரூ.5.5 கோடி நிதி திரட்டப்பட்டது. இந்தியாவின் நிதிக் கேந்திரமாக விளங்கும் மும்பையைத்தவிர வேறு எங்கு இது சாத்தியம்.

பசியோடு யாரும் இருக்கக்கூடாது, பசியோடு யாரும் தூங்கக்கூடாது என்ற நல்லெண்ணத்தில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு ஏப்ரல் 1-ஆம் தேதி ரோட்டரி உறுப்பினர்கள் சேர்ந்து 1000 உணவுப் பொட்டலங்களைத் தயாரித்து விநியோகித்தனர். யானைப்பசிக்கு சோளப்பொறி எப்படி போதும் என்பதை உணர்ந்து நாங்கள் சேவையை விரிவு படுத்தினோம். ஒரு நாளைக்கு 1000 பொட்டலம் என்பது அடுத்த சில நாட்களில் 1.6 லட்சம் பொட்டலங்களாக உயர்ந்தது. என்றார் ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவரும் இத்திட்டத்தின் அதிகாரியுமான சஞ்சீவ்மேத்தா.

ஒரே இடத்தில் 1.6 லட்சம் உணவுப் பொட்டலங்களைத்

*முனிசிபல் பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் திட்டத்திற்காக கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ரூ.5 கோடியில் மிகப்பெரிய சமையற்கூடத்தை நிறுவியது ரோட்டரி சங்கம்.*



*ஒரு நாளைக்கு 1000 பொட்டலம் என்பது அடுத்த சில நாட்களில் 1.6 லட்சம் பொட்டலங்களாக உயர்ந்தது.*

1.6 லட்சம் உணவுப் பொட்டலங்களை எப்படி விநியோகிப்பது என்ற கேள்வி எழுந்தது. இந்த விஷயத்தில் எங்களுக்கு தக்க சமயத்தில் ஆலோசனை வழங்கினார் பலோமிதவான் என்கிற பெண். இவர் சிறந்த சமூக சேவகர். இவரது கணவர் எங்கள் ரோட்டரி சங்க உறுப்பினர். அவரின் யோசனையில் மும்பையில் பேரிடர் காலத்தில் ஏழைகளுக்கு உணவு உள்ளிட்ட பொருள்களை வழங்கும் சோட்டிசி ஆஷா மற்றும் நோபடி எவர் ஸ்லீப்ஸ் ஹங்ரி என்ற இரு அமைப்புகளின்

தயாரித்து விநியோகிப்பது எளிதான காரியம் இல்லை என்பதால் இத்திட்டத்தில் தனியார் சேவை நிறுவனங்களையும் சேர்த்துக் கொண்டனர். 7 சேவை அமைப்புகள் மும்பையின் பல்வேறு பகுதிகளில் உணவு சமைத்து 200 தொண்டர்கள் மூலம் கூலித்தொழிலாளர்களுக்கு விநியோகித்து பசியாற்றினர்.

முனிசிபல் பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் திட்டத்திற்காக கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ரூ.5 கோடியில் மிகப்பெரிய சமையற்கூடத்தை நிறுவியது ரோட்டரி சங்கம். இப்போது பள்ளிகள் இயங்காததால் அங்கு உணவு தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப் படுகிறது என்கிறார் ரோட்டரி சங்க இயக்குநர் விஜய்ஷா.

இவைதவிர, இஸ்கான் அறக்கட்டளையின் அன்னமிரிதா அமைப்புடன் கைகோர்த்து அவர்கள் அமைத்துள்ள மீரான் சாலை, மாகுல் ஆகிய இடங்களில் உள்ள சமையல் கூடங்களிலும் உணவு தயாரிக்கப்பட்டது. மேலும் தாஜ் ஸாட்ஸ், ப்ளூஸீ, பாப்புலர், உள்ளிட்ட நிறுவனங்களும் தங்கள் இடங்களை வழங்கியதால் அங்கும் பெருமளவில் உணவு தயாரிப்பது சாத்திய மானது. இவையெல்லாவற்றுக்கும் மேலாக ரூ.2 கோடி மதிப்புள்ள மளிக்கைப்பொருள்களை ரிலையன்ஸ் ரீடெய்ல் நிறுவனம் தனது அறக்கட்டளை மூலம் வழங்கி உதவியது என்று நன்றியுடன் தெரிவித்தார் விஜய் ஷா.

சரி தினமும் தயாரிக்கப்படும்







உதவியை நாடினோம். அந்த அமைப்புகளின் தொண்டர்கள், ஒய்எம்சிஏ, ரோட்டிகர் உள்ளிட்ட இதர தன்னார்வு அமைப்புகள் உதவியுடன் மும்பையின் கொலாபா முதல் பால்கர் வரை லட்சக்கணக்கான ஏழைகளுக்கு உணவு வழங்கப்பட்டது. இந்தப் பணியில் மேயர், எம்.எல்.ஏ.க்கள், கவுன்சிலர்கள், போலீஸார் என பலரும் துணை புரிந்துள்ளனர் என்று பெருமையுடன் குறிப்பிடுகிறார் சஞ்சீவ் மேத்தா.

தினசரி 1.6 லட்சம் உணவுப் பொட்டலங்கள் விநியோகம் மே 3-ஆம் தேதி வரை தொடரும். அதன்பிறகு ஊரடங்கு விலக்கிக் கொள்ளப்பட்டாலும் கூலித் தொழிலாளர்களுக்கு உடனடியாக வேலை கிடைக்குமா என்பது சந்தேகமே. அதற்காக 30 ஆயிரம் பேருக்குத் தேவையான அரிசி, கோதுமை. சர்க்கரை, சமையல் எண்ணெய், வாசனைப் பொருள்கள் அடங்கிய பொதிகளையும் தயாராக வைத்திருக்கிறோம். தேவைப் படுவோர்க்கு அதனை விநியோகிப்போம் என்றார் தலைவர் சோனல் ஜவேரி.

ரோட்டரிநிதி, நண்பர்கள், உறவினர்கள் கொடுத்த நிதி என ரூ.6 கோடி மற்றும் ரிலையன்ஸ் அறக்கட்டளை கொடுத்த ரூ.2 கோடி பொருள்கள் என மொத்தம் ரூ.8 கோடி வரை இத்திட்டத்திற்காக செல விட்டுள்ளோம்.

முதலில் சவாலாகத் தெரிந்த இந்தத்திட்டம் பின்னர் சாதனையாக மாறியது. தேவைப்பட்டால் எங்கள் பணி தொடரும் என்கிறார் சோனல் ஜவேரி. ■

# ரோட்டரி, இளம்பிள்ளைவாதம் மற்றும் COVID-19




வரும் மாதங்களில், ரோட்டரி கட்டமைக்க உதவிய தீவிரமான இளம்பிள்ளைவாத உள்கட்டமைப்பு, COVID-19 நோய்ப்பரவலுக்கான தயார்நிலை மற்றும் எதிர்வினையை ஆதரிப்பதற்குப் பயன்படும்.

இளம்பிள்ளைவாதப் பரவலைத் தடுப்பதில் ரோட்டரிக்கும் நம்முடைய தோழமை அமைப்புகளுக்கும் பல ஆண்டு அனுபவம் உண்டு, அதைப் பயன்படுத்திக்கொண்டு, இந்தப் பன்னாட்டு நோய்ப்பரவலிலிருந்து சமூகங்களைக் காப்பதில் நாம் ஒரு முக்கியப் பங்கை ஆற்றவேண்டும், எபோலோ, மஞ்சள் காய்ச்சல் மற்றும் ஏவியான் ஃப்ளூ பரவலின்போது நாம் செய்ததைப்போலவே. போலியோப்ளஸ்ஸில் உள்ள ப்ளஸ், உண்மையில் இதுதான்.

இளம்பிள்ளைவாதத்தை நீக்கும் செயல்பாடுகள் COVID-19 பரவலுக்கு இடமளித்து விடக்கூடாது; அதற்கான ஒவ்வொரு முன்னெச்சரிக்கையையும் நாம் மேற்கொள்ளவேண்டும். பிறரிடமிருந்து தள்ளியிருத்தல் மற்றும் தூய்மைபற்றிய பன்னாட்டு வழிகாட்டுதலைப் பின்பற்றுவதற்காக, COVID-19 நோய்ப்பரவல் எதிர்வினையின் போது, இளம்பிள்ளைவாதத் தடுப்பு மருந்துப் பரப்புரைகளை நிறுத்திவைக்கும்படி பன்னாட்டு இளம்பிள்ளைவாத நீக்க முன்னெடுப்பு (GPEI), நாடுகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

COVID-19க்கு எதிர் வினையாற்றும் போது, ரோட்டரி மற்றும் நம்முடைய GPEI கூட்டு நிறுவனங்கள் குழந்தைகளைத் தொடர்ந்து பாதுகாப்பதற்கு மற்றும் இளம்பிள்ளைவாதம் மீண்டும் வராதபடி தடுப்பதற்குத் தங்களால் இயன்ற அனைத்தையும் செய்யும். கூடுதல் ஆபத்துள்ள சில இடங்களைக் கண்காணித்தல், தடுப்பு மருந்து வழங்கல், பாதுகாப்பான சூழ்நிலை ஏற்பட்டதும் இளம்பிள்ளைவாதத் தடுப்புப் பரப்புரைகளைத் தாமதமின்றித் தொடங்குவதற்காக நம்முடைய தடுப்பு மருந்து அளவைப் பராமரித்தல் போன்ற அவசியமான இளம்பிள்ளைவாதத் தடுப்புப் பணிகளை நாம் தொடர்வோம்.

COVID-19 மற்றும் இளம்பிள்ளை வாதம் ஆகிய இரண்டுக்கும் எதிர் வினையாற்றுவது முக்கியம். போலியோவை முடித்துவைக்கிற நம்முடைய போரைத் தொடர்வதில் ரோட்டரி உறுப்பினர்கள் செய்யக் கூடிய மிக முக்கியமான செயல்கள், இளம்பிள்ளைவாதத்தை நீக்குவதற்கான நம்முடைய உறுதியைத் தக்கவைத்துக்கொள்வதும், இந்த ஆண்டு இளம்பிள்ளைவாதத் தடுப்புக்கான நம்முடைய நிதி திரட்டல் இலக்கான 50 மில்லியனை எட்ட உதவுவதும் தான்-இவற்றோடு, COVID-19 எதிர்வினைச் செயல்பாடுகளுக்கும் நாம் உதவவேண்டும்.

போலியோப்ளஸ்ஸுக்கு மாவட்டத்துக்கென்று நியமிக்கப்பட்ட நிதிகளை வழங்குவதுபற்றிச் சிந்திக்குமாறு மாவட்டங்களை நாங்கள் ஊக்குவிக்கிறோம். DDFகளுக்கான நிதிகளை 1:1 என்ற விகிதத்தில் உலக நிதி மிகுதியாக்கும், பின்னர் கேட்ஸ் அறக்கட்டளை அவற்றை 2:1 என்ற விகிதத்தில் மிகுதியாக்கும், ஆக மொத்தம் 6:1 விகிதத்தில் வளரும்.

ஒரு நோய்ப்பரவலுக்கு நடுவில், இளம்பிள்ளைவாதத்தை நீக்குகிற நம்முடைய கவனம் திசை திரும்புவது புரிந்துகொள்ளக்கூடியதுதான், அதே நேரம், இளம்பிள்ளைவாதத்தை எதிர்ப்பதில் ரோட்டரியன்கள் உறுதியோடும் அர்ப்பணிப்போடும் இருக்கவேண்டிய சூழ்நிலை இது, நம்முடைய முன்னேற்றம் பின்னேற்றமாகிவிடாதபடிபார்த்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலை இது.

©Rotary International

# District Wise TRF Contributions as on March 2020

(in US Dollars)

| District Number | APF | PolioPlus | Other Restricted | Endowment Fund | Total Contributions | EREY Donors (in numbers) | EREY % |
|---|---|---|---|---|---|---|---|
| **India** | | | | | | | |
| 2981 | 30,685 | 7,175 | 0 | 18,341 | 56,201 | 159 | 3.5 |
| 2982 | 26,224 | 19,746 | 185,807 | 720 | 232,497 | 117 | 3.9 |
| 3000 | 77,947 | 2,403 | 188,744 | 296 | 269,389 | 102 | 2.0 |
| 3011 | 84,330 | 1,189 | 127,376 | 0 | 212,895 | 84 | 2.4 |
| 3012 | 166,529 | 15,645 | 243,552 | 58,986 | 484,712 | 147 | 4.0 |
| 3020 | 30,677 | 47,270 | 0 | 12,029 | 89,975 | 115 | 3.0 |
| 3030 | 8,335 | 3,007 | 1,423 | 2,000 | 14,765 | 12 | 0.2 |
| 3040 | 8,370 | 245 | 9,815 | 0 | 18,430 | 13 | 0.6 |
| 3053 | 63,110 | 232 | 169,544 | 0 | 232,885 | 113 | 3.9 |
| 3054 | 10,738 | 408 | 37,704 | 0 | 48,849 | 32 | 0.6 |
| 3060 | 66,424 | 60,097 | 145,916 | 36,876 | 309,314 | 857 | 21.2 |
| 3070 | 33,047 | 705 | 16,869 | 0 | 50,622 | 162 | 5.3 |
| 3080 | 54,839 | 8,057 | 14,505 | 1,013 | 78,414 | 151 | 4.4 |
| 3090 | 17,827 | 1 | 0 | 1,000 | 18,829 | 44 | 2.2 |
| 3100 | 25,908 | 0 | 0 | 0 | 25,908 | 76 | 4.0 |
| 3110 | 26,740 | 1,810 | 1,045 | 0 | 29,594 | 31 | 0.8 |
| 3120 | 61,815 | 141 | 140,199 | 0 | 202,155 | 144 | 4.3 |
| 3131 | 198,154 | 4,207 | 352,129 | 43,250 | 597,740 | 754 | 14.4 |
| 3132 | 13,916 | 487 | 34,393 | 30,000 | 78,797 | 103 | 2.8 |
| 3141 | 641,588 | 16,353 | 1,344,727 | 158,225 | 2,160,893 | 858 | 15.6 |
| 3142 | 132,129 | 1,944 | 80,282 | 42,763 | 257,117 | 380 | 11.7 |
| 3150 | 77,529 | 7,611 | 35,504 | 203,668 | 324,312 | 605 | 17.0 |
| 3160 | 3,057 | 3,129 | 0 | 8,222 | 14,408 | 22 | 0.8 |
| 3170 | 71,455 | 12,113 | 24,986 | 0 | 108,553 | 257 | 4.6 |
| 3181 | 278,591 | 16,173 | 0 | 0 | 294,763 | 527 | 14.8 |
| 3182 | 80,994 | 7,616 | 24,493 | 0 | 113,104 | 309 | 9.9 |
| 3190 | 284,506 | 40,633 | 327,172 | 0 | 652,311 | 642 | 13.5 |
| 3201 | 51,717 | 31,670 | 302,367 | 32,442 | 418,197 | 198 | 3.7 |
| 3202 | 127,246 | 57,445 | 171,458 | 1,000 | 357,149 | 285 | 5.8 |
| 3211 | 28,718 | 1,043 | 55,422 | 1,422 | 86,605 | 28 | 0.6 |
| 3212 | 59,007 | 19,937 | 10,081 | 1,972 | 90,997 | 96 | 2.4 |
| 3231 | 3,261 | 1,946 | 3,083 | 0 | 8,290 | 44 | 1.2 |
| 3232 | 97,256 | 68,464 | 176,584 | 7,500 | 349,804 | 349 | 6.6 |
| 3240 | 189,933 | 40,395 | 33,004 | 0 | 263,332 | 310 | 10.2 |
| 3250 | 33,771 | 0 | (85) | 10,000 | 43,685 | 64 | 1.7 |
| 3261 | 3,249 | 0 | 30,682 | 0 | 33,931 | 5 | 0.2 |
| 3262 | 40,936 | 3,876 | 5,507 | 0 | 50,319 | 78 | 2.3 |
| 3291 | 81,892 | 3,542 | 51,675 | 12,500 | 149,609 | 81 | 2.3 |
| **India Total** | **3,292,449** | **506,715** | **4,345,963** | **684,225** | **8,829,352** | **8,354** | **5.7** |
| 3220 **Sri Lanka** | 61,266 | 8,057 | 52,243 | 1,000 | 122,566 | 131 | 6.7 |
| 3271 **Pakistan** | 3,907 | 14,452 | 20 | 0 | 18,379 | 11 | 0.8 |
| 3272 **Pakistan** | 11,088 | 992 | 300 | 0 | 12,380 | 44 | 2.7 |
| 3281 **Bangladesh** | 107,722 | 4,325 | 127,600 | 7,000 | 246,647 | 271 | 4.8 |
| 3282 **Bangladesh** | 31,606 | 15,157 | (2,703) | 2,000 | 46,061 | 71 | 1.5 |
| 3292 **Nepal** | 168,236 | 17,350 | 525,556 | 0 | 711,142 | 316 | 6.8 |
| **South Asia Total** | **3,676,274** | **567,048** | **5,048,979** | **694,225** | **9,986,526** | **9,198** | **5.6** |
| **World Total** | **84,737,417** | **22,261,411** | **19,619,136** | **29,378,505** | **155,996,468** | | |

Source: RI South Asia Office

# ஊரடங்கின் போதும் தன்னுடைய உணவுச் சேவையைத் தொடரும் RC சோலாப்பூர்

ரஷீதா பகத்

COVID-19 நெருக்கடி, அதற்காக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அறிவித்த மூன்று வார ஊரடங்கு ஆகியவற்றுக்கு எப்படி எதிர்வினையாற்றுவது என்று தெரியாமல் இந்தியா திணறியது; விரைவில், மாறுபட்ட, புதுமைச்சிந்தனையுள்ள வழிகளில் நிலைமையைச் சமாளிக்கப் பழகியது; இதனிடையே, RC சோலாப்பூர் உறுப்பினர்கள் விரைவாகக் களத்தில் இறங்கினார்கள், கடந்த 12 ஆண்டுகளுக்கு மேலாக இந்தச் சங்கத்திலிருந்து புதிதாகச் சமைத்த, சூடான உணவைப் பெற்றுவரும் 100 மூத்த குடிமக்களை இந்த ஊரடங்கு பாதிக்காதபடி உறுதிசெய்தார்கள்.

ஊரடங்கு தொடங்கிய நேரத்தில், எங்களுடைய சங்க உறுப்பினர்கள் சோலாப்பூர் காவல்துறை ஆணையர் (CP) அங்குஷ் ஷிண்டே அவர்களை அணுகினார்கள்; தங்களுடைய அன்றாட உணவுக்காக எங்களுடைய அன்னபூர்ணா யோஜனாவைச் சார்ந்திருக்கும் 100 முதிய குடிமக்களுடைய நிலைமையை விளக்கினார்கள். CP அவர்கள் இதற்குமுன் தானே எங்களுடைய திட்டத்தைப் பார்த்துள்ளார், பாராட்டியுள்ளார்; ஆகவே, எந்தத் தயக்கமும் இல்லாமல் உடனடியாக எங்களுக்கு உதவினார், எங்களுடைய ஆட்டோ ரிக்ஷா இயங்குவதற்கும், இந்தத் திட்டத்தில் பங்கேற்கும் எங்கள் குழுவினர் ஊருக்குள் சென்று வருவதற்கும் சில கட்டுப்பாடுகளுடன் சிறப்பு அனுமதி அளித்தார், இதை நாங்கள் உடனே ஏற்றுக்கொண்டோம்' என்கிறார் திட்டத்தின் தலைவர் ஜயேஷ் படேல்.

இந்தச் சங்கம் நடத்திவரும் இந்தப் புகழ்பெற்ற திட்டம், மகாராஷ்டிர மாநிலத்திலேயே மிகப்பெரிய திட்டங்களுள் ஒன்று. இதன் ஆழத்தையும் முக்கியத்துவத்தையும் புரிந்துகொள்வதற்கு, ஒரு சிறு அறிமுகம், இதோ:

இப்போது தன்னுடைய 13வது ஆண்டில் இயங்கிவரும் இந்தத் திட்டம், ஆகஸ்ட் 4, 2019 அன்று தன்னுடைய 12வது ஆண்டு விழாவைக் கொண்டாடியது. அந்த விழாவின் போது, நான் இந்தச் சங்கத்துக்குச் சென்றிருந்தேன். இவ்வளவு காலமாக இந்தத் திட்டத்தைக் கவனமாக நடத்திவரும் குழுவினரிடம் பேசினேன். இந்த



12 ஆண்டுகளில் மழை வந்தாலும் சரி, வெயில் வந்தாலும் சரி, ஊரடங்கானாலும் சரி, பலன் பெறுவோரில் சிலர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருந்தாலும் சரி, இந்தச் சங்கத்தின் ரோட்டரியன்கள் ஒரு நாள் விடாமல் இந்த 100 மூத்த குடிமக்களுக்குச் சூடான உணவை வழங்கிவந்திருக்கிறார்கள் என்று தெரிந்துகொண்டேன்.


ரோட்டரியன்கள் இந்தத் திட்டம்பற்றிய புள்ளிவிவரங்களை எனக்குச் சொன்னபோது, அவை பிரமிக்கவைக்கிறவையாக இருந்தன: அந்த நாள்வரையில், ஒரே ஒரு சங்கம் 4,380 நாட்களுக்குமேலாக (அல்லது 12 ஆண்டுகளுக்குமேலாக) 438,000 உணவுகளை வழங்கிவந்திருக்கிறது, ஒரு நாள்கூட இதை நிறுத்தவில்லை, இதற்கான மொத்தச் செலவு ரூ.1.44 கோடி. இந்தப் பணம் முழுவதும் RC சோலாப்பூரால் திரட்டப்பட்டது, இதற்காக இந்நகரைச் சேர்ந்தவர்களும் அதற்கு வெளியிலுள்ளவர்களும் தாராளமாகப் பங்களித்துள்ளார்கள்.

ஆனால், இன்றைய கடுமையான எதார்த்தத்துடன் ஒப்பிடும்போது, இத்தனை ஆண்டுகளில் இவர்கள் எதிர்கொண்ட சவால்கள், தடைகளெல்லாம் இன்னும் சிறியவையாகத் தோன்றுகின்றன.



இந்தத் திட்டத்தால் பலன் பெறுகின்ற 100 பேரில் பெரும்பாலானோருக்குக் குடும்பம் இல்லை; அவர்கள் தனியே வசிக்கிறார்கள். நம் நாடு ஒரு முழுமையான ஊரடங்கை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தபோது, ‘நம்மால் இந்த மூத்த குடிமக்களுக்கு அன்றாட உணவைக் கொண்டுசெல்ல இயலாவிட்டால், அவர்கள் அநேகமாகப் பட்டினிதான் கிடக்கவேண்டும்’ என்பதை ரோட்டரியன்கள் உணர்ந்தார்கள்.

சில நாட்களுக்கு முன், மார்ச் 22 அன்று ஒரு நாள் ஊரடங்கு அறிவிக்கப்பட்ட போதும், இந்த நல்ல உள்ளங்கள் சட்டென்று வேலையில் இறங்கின. அதற்கு முந்தைய நாள் மாலை,



அவர்களுக்காக நாங்கள் கூடுதல் தெப்லாக்களுக்கு ஏற்பாடு செய்தோம். இதன் மூலம் அவர்களுக்குச் சற்று கூடுதல் ஊட்டச் சத்தை வழங்க முயன்றோம் என்கிறார் படேல். அவர் தொடர்ந்து கூறியது, குடி பட்வா பண்டிகையன்று, அவர்களுடைய உணவில் நாங்கள் சிறப்புச் சீராவை(கேசரியை)ச் சேர்த்தோம்!

உணவுப்பொட்டலங்களை இவர்களுக்குக் கொண்டு சென்று சேர்க்கின்ற ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநரான ஜகதீஷ் ஹயர்மாத் தொடர்ந்து இந்தப் பணியைச் செய்யத் தயாராக இருக்கிறார். ஆனால், நாங்கள் அவருடைய பாதுகாப்பைப்பற்றியும் சிந்திக்கிறோம். ஆகவே,




RC நாஸிக் க்ரேப் சிட்டி கிராம மக்ககளுக்கு உணவுப் பொருட்கள் வழங்கியுள்ளனர்.

சிறிதளவு மளிகை சாமான்களை வைத்திருப்பவர்கள், வீட்டில் சமைக்க இயலுகிறவர்களுக்கு நாங்கள் மளிகை சாமான்களுக்கு ஏற்பாடுசெய்கிறோம்'' என்று தொடர்ந்து கூறுகிறார் படேல்.

இத்துடன், இந்த ஆண்டுக்கான சங்கத் தலைவர் பாலபிரசாத் நுன்தாதா, அன்னபூர்ணாவுக்கான நிதி திரட்டலில் சாதனை புரிந்துள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறார் இவர். இந்தத் திட்டத்தின் கீழ் ஓராண்டுக்கு ஒருவருக்கு உணவைச் சமைத்து வழங்குவதற்கு ரூ.8,100 செலவாகிறது; இப்போது 250 பேர் தலா ரூ.8,100 வழங்குவதாக உறுதியளித்துள்ளார்கள்.

## தொலைதூரக் கிராமமொன்றுக்கு உதவும் RC நாசிக் க்ரேப்சிட்டி

அதே மகாராஷ்டிரத்தின் இன்னொரு பகுதியில், இப்போதைய பிரச்னைகளைச் சமாளிப்பதற்காகச் சக குடிமக்களுக்குக் கை கொடுத்துள்ளார்கள் பல ரோட்டரியன்கள்.

RC நாசிக் க்ரேப்சிட்டி, RID 3030ஐச் சேர்ந்த இந்த ரோட்டரியன்கள், நாசிக் மாவட்டத்தின் திரிம்பக் தாலுக்காவில் உள்ள ஒரு தொலைதூரக் கிராமத்தில் உள்ள கிராமவாசி களை அணுகியுள்ளார்கள், அங்கு வாழும் குடும்பங்களுக்காக 87 மளிகைப்பொருள் பொதிகளை வழங்கியுள்ளார்கள்.

இந்தக் கிராமம் முதன்மை நகரத்திலிருந்து 48 கிமீ தள்ளியுள்ளது; இங்கு பல அடிப்படை வசதிகள் இல்லை என்கிறார் சங்கத் தலைவர் ராஜன் பிள்ளை. இந்தக் கிராமத்தில் தூய குடிநீர் இல்லை, அதன் தொடக்கப் பள்ளி மிக மோசமான நிலையில் உள்ளது, நலப் பராமரிப்பு வசதிகள் போதவில்லை. இந்த நிலையைப் பார்த்த நாங்கள், இந்தக் கிராமத்தை மூன்றாண்டுகளுக்குத் தத்தெடுக்கத் தீர்மானித்தோம், கிராமவாசிகளுக்கு மருத்துவ வசதிகளை வழங்கினோம், குழாய் மூலம் நீர் வழங்கினோம், ஒரு சேமிப்புத் தொட்டியை வழங்கினோம், பள்ளியை மேம்படுத்தினோம், இளம் பெண்கள் ஒரு காய்கறிக்கடை அல்லது வேறொரு கடையை அமைப்பதற்காகக் குறுங்கடன் வழங்கினோம், விவசாயிகள் இரண்டாவது பயிருக்காகப் போதுமான அளவு நீரைப் பெறுவதற்காக ஒரு தடுப்பணை அமைத்துக்கொடுத்தோம்'' என்கிறார் இவர்.

சங்கச் செயலாளரான அனில் தேஷ்முக் இதுபற்றித் தொடர்ந்து பேசுகையில், இங்குள்ள பள்ளியில் இன்னொரு வகுப்பறையைச் சேர்ப்பது, ஒரு கழிப்பறையைக் கட்டுவது ஆகியவற்றின்மூலம் இப்பள்ளியை மேம்படுத்துவதற்குத் தாங்கள் திட்டமிட்டிருப்பதாகக் கூறினார். மழைக்காலம் வருவதற்குள் நாங்கள் இதைச் செய்ய விரும்புகிறோம்; எங்களுடைய 53 உறுப்பினர்களும் இந்தப் பணிக்காக எங்களை அர்ப்பணித்துக்கொண்டிருக்கிறோம்'' என்று தொடர்ந்து கூறுகிறார் இவர்.

ஆனால், இதற்கு நடுவில் கொரோனா வைரஸ் பிரச்னை வந்து விட்டது. ஆகவே, உறுப்பினர்கள் ஒன்றாகச் சேர்ந்து கிராமவாசி களுக்கு உதவ முன்வந்தார்கள், அவர்களுடைய சமையலறைகள் தொடர்ந்து இயங்குவதற்குத் தேவையான அடிப்படைப் பொருட்களை அவர்களுக்குப் பெற்றுத்தந்தார்கள்.■

# உலகை காப்பாற்ற கை கொடுப்போம்



நி ஹாவ், ரோட்டரியன்களே!

ஒவ்வோராண்டும், ரோட்டரி ஆண்டு நிறை வடையப்போகும் நேரத்தில், நாம் கடந்து வந்த பாதையை நாம் திரும்பிப் பார்க்கிறோம். இந்த ஆண்டு காரணம், கொரோனாவைரஸ் என்கிற பன்னாட்டுப் பரவல் நோய் நம்முடைய வாழ்க்கைகளையும், நாம் சேவை செய்யும் விதத்தையும் மாற்றிவிட்டது.

இன்றிலிருந்து சில ஆண்டுகள் கழித்து நாம் இந்த நிகழ்வைத் திரும்பிப் பார்க்கும்போது, இந்தப் பேரழிவு அச்சுறுத்தலை வெல்வதற்கு நாம் உலகுக்கு உதவினோம், அதில் ஒரு குறிப்பிடத்தக்க பங்கை ஆற்றினோம் என்று எண்ணவேண்டும், அதற்கேற்ப இப்போது நாம் பணியாற்றவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.


COVID-19 பரவலைத் தடுப்பதற்காகவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காகவும் ரோட்டரி உறுப்பினர்கள், நம்முடைய அறக்கட்டளை செய்து வருகிற பணியை எண்ணி நான் பெருமைப்படுகிறேன். சங்கங்கள் பொருட்களை வாங்குதல், மருந்துகளைப் பெற்றுத்தருதல், தேவை உள்ளவர்களுக்கு உதவுதல் என்று சேவையாற்றுகிறது.

அறக்கட்டளை அறங்காவலர்கள் COVID-19 நல்கைகளுக்காக நம்முடைய பேரழிவு எதிர்வினை நிதிக்கு 3 மில்லியனை அனுப்பிவைத்தார்கள், COVID-19ஐ சமாளிக்கும் புதிய பன்னாட்டு நல்கைகளுக்கு 30 சதவிகித வெளிநாட்டு நிதியளித்தல் தேவையைத் தள்ளுபடி செய்தார்கள்.

உண்மையில், இளம்பிள்ளைவாதம் என்கிற இன்னொரு தொற்று நோய்க்கு எதிரான போரில் நாம் பல ஆண்டுகளாகப் பெற்ற அறிவையும் வளங்களையும் நாம் இங்கு பயன்படுத்துகிறோம். இளம்பிள்ளைவாதத்தை நீக்கும் திட்டமானது COVID-19 ஆபத்து உள்ளவர்களைக் காப்பாற்றுவதற்காக ஏற்கெனவே தன்னுடைய உள்கட்டமைப்பைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறது.

நம்முடைய அறக்கட்டளைக்கு உதவுவதற்காக உங்களால் இயன்றதைத் தயவுசெய்து வழங்குங்கள், உங்கள் பரிசை நம்முடைய உறுப்பினர்கள் உயிர்களைக் காக்கும் மனிதச்செயல் முயற்சிகளாக மாற்றுவார்கள். நாம் ஒன்றாகச் செயல்பட்டு இந்த வைரஸை வெல்வோம்.

நம்முடைய அறக்கட்டளைக்கு உங்களுடைய கடந்தகால, நிகழ்கால மற்றும் எதிர்கால ஆதரவுக்காக உங்களுக்கு நன்றி.



**கேரி C K ஹுவாங்**
TRF அறங்காவலர் தலைவர்

---

# ரோட்டரி பேரிடர் மீட்பு நிதி

கரோனா தொற்று (கொவிட்-19) உலகத்தையே அச்சுறுத்திவரும் நெருக்கடியான காலகட்டத்தில், ரோட்டரியினர் தங்கள் பகுதி சமூகத்தினருக்கும், இதர மக்களுக்கும் தேவையான உதவிகளை அளித்து பாதுகாப்பதற்காக ரோட்டரி அறக்கட்டளை, பேரிடர்கால நிதி மூலம் நிவராணம் அளிக்க முன்வந்துள்ளது.

### ரோட்டரி பேரிடர் நிவாரண நிதி என்றால் என்ன?

இயற்கை பேரிடர் ஏற்படும்போது பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் ரோட்டரி சங்கத்தினர் பேரிடர் நிவாரண நிதியைப் பெற்று திட்டங்களைச் செயல்படுத்தலாம் அல்லது பதிவுபெற்ற சேவை நிறுவனங்களுடன் இணைந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவலாம். ரோட்டரி அறக்கட்டளை மூலம் கிடைக்கும் இந்த மானியத்தொகை மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிநீர், உணவு, உடை, மருந்துப்பொருள்கள் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை செய்து கொடுக்கலாம். கரோனா நோய் பரவாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளுக்கும் இந்த நிதியை பன்படுத்தலாம். உள்ளூர் அதிகாரிகள் அல்லது குழுக்களுடன் இணைந்து நிவாரண உதவிகள் மக்களைச் சென்றடைவதை உறுதிசெய்யலாம்.

### பேரிடர் நிவாரண நிதி பெற யார் விண்ணப்பிக்கலாம்?

நாட்டின் ஒரு பகுதியிலோ அல்லது மாவட்டத்திலோ பேரிடர் ஏற்பட்டிருந்தால் அப்பகுதியைச் சேர்ந்த ரோட்டரி மாவட்ட சங்கம் அதிகபட்சம் 25,000 டாலர் நிதியுதவி கேட்டு விண்ணப்பிக்கலாம். ஏற்கெனவே பெற்ற நிதியுதவியை முறையாக செலவழித்தவர்கள் மீண்டும் நிதியுதவி கேட்டு விண்ணப்பிக்கலாம். ஆனால், கரோனா தொற்று பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான நிதி ஒருமுறை மட்டுமே வழங்கப்படும்.

### எப்படி விண்ணப்பிப்பது?

ரோட்டரி பேரிடர்கால நிவாரண நிதிக்கான விண்ணப்பத்தை மாவட்ட ஆளுநர் மற்றும் ரோட்டரி அறக்கட்டளை மாவட்டத் தலைவர் ஆகியோர் பூர்த்திசெய்து grantsrotary.org என்ற முகவரிக்கு அனுப்பவும்.

மேலும் தகவல் அறிய *https://my.rotary.org/en/take-action/apply-grants/rotary-disaster-response-grants* என்ற முகவரியில் தொடர்புகொள்ளலாம்.

Source: www.rotary.org

# இந்தியர்களின் மனம் கவர்ந்த ஆஸ்திரேலிய டாய்லெட் நாயகன்

ரஷீதா பகத்

மகாராஷ்டிர மாநிலம், நாசிக்கில் உள்ள ஒரு அரசுப் பள்ளிக்கு ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ரோட்டேரியன் மார்க் பல்லா 15 டாய்லெட்டுகள் (கழிவறைகள்) கட்டிக்கொடுத்துள்ளார்.

இதற்காக மார்க் பல்லா எடுத்துக் கொண்ட முயற்சிகளும் சிரமங்களும் கொஞ்சம்நஞ்சம் அல்ல. இதற்கென ஒரு அறக்கட்டளையை நிறுவி, தாம் உறுப்பினராக இருக்கும் மெல்போர்ன், பாக்ஸ்ஹில்ஸ் சென்ட்ரல்ரோட்டரி சங்கம், மாவட்ட ரோட்டரி சங்கம் (RID 9180) ரோட்டரி அறக்கட்டளை, நாசிக் ரோடு ரோட்டரி சங்கம் ஆகியவற்றின் உதவியுடன் இந்த சாதனையைப் புரிந்திருக்கிறார். இதற்காக அவர் இரண்டு ஆண்டு கள் உழைத்திருக்கிறார். இந்த டாய்லெட்டுகள் 2015-ஆம் ஆண்டு ஒரு கோலாகல நிகழ்ச்சியுடன் பள்ளி மாணவிகளின் பயன்பாட்டுக்குத் திறந்துவிடப்பட்டது.

மாணவிகளுக்கான டாய்லெட் திறக்கப்பட்ட மூன்றாவது நாளில், கோவாவில் ஒரு மாநாட்டுக்காக வந்திருந்த பல்லாவுக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. பேசியவர் அந்த அரசு பள்ளியின் முதல்வர். நீங்கள் மாணவிகளுக்கு டாய்லெட் கட்டிக்கொடுத்தீர்கள். ஆனால், இப்போது மாணவர்கள் புகார் எழுப்புகிறார்கள் என்றுகூற, உடனே, பல்லா அவரிடம், மாணவிகளுக்கு மட்டுமல்ல, மாணவர்களுக்கும் சேர்த்துத்தானே டாய்லெட் கட்டினோம் என்று பதில் தெரிவித்தார்.

இப்போதெல்லாம் குடிநீருக்காக நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியிருக்கிறது. ஏனெனில் எங்களுடன் போட்டி போட மாணவிகளும் தண்ணீர் குடிக்க வந்து விட்டனர் என்கின்றனர் மாணவர்கள் இதுதான் பிரச்னை என முதல்வர் விளக்கினார்.

இதைக்கேட்ட பல்லா, ஓ இதுதானா பிரச்னை. இதுபோன்ற பிரச்னை எதுவாக இருந்தாலும் தயக்கமில்லாமல் சொல்லுங்கள் நாங்கள் தீர்த்துவைக்கிறோம் என்று கூறியுள்ளார்.

இளம் வயது மாணவிகள் பள்ளிகளில் போதிய கழிப்பறை வசதி இல்லாத காரணத்தால் படிப்பை பாதியிலேயே விறுத்திவிடுகிறார்கள். அந்த மூன்று நாட்களிலும் பள்ளிக்கு வருவதில்லை. பள்ளிக்கு வரும் சிறுமிகளோ, பள்ளி நேரத்தில் தண்ணீர் குடித்தால் இயற்கை உபாதையை கழிக்க போதுமான வசதி இல்லாததால் தண்ணீர் குடிக்காமலேயே இருந்துவிடுகின்றனர். இதுதான் இந்தியாவில் பல்வேறு நகரங்களிலும், கிராமங்களிலும் உள்ள பள்ளிகளின் நிலைமை.

இந்தியா-ஆஸ்திரேலியா கூட்டு






*மார்க் பல்லா, RC பாக்ஸ் ஹில் சென்ட்ரல், RID 9810, மெல்போர்ன்.*

புகைப்படம்: ரஷீதா பகத்

முயற்சியில் கொல்கத்தாவில் ஒரு தொழிற்சாலை செயல்பட்டு வந்தது. அதன் நிர்வாகக்குழு உறுப்பினர் என்ற முறையில் மார்க் பல்லா, அடிக்கடி இந்தியா வருவதுண்டு. மும்பையில் ஒரு முறை நிர்வாகக்குழு கூட்டத்தில் பங்கேற்ற பல்லா, மும்பை நகரை ரயிலில் சுற்றிப்பார்க்க ஆசைப்பட்டார். அவரை பாஹின், டாஷின் என்ற இரு கல்லூரி மாணவர்கள், மும்பையில் குடிசைப்பகுதிகள் நிறைந்த தாராவிக்கு அழைத்துச் சென்றனர். அங்கு நிறைந்து காணப்பட்ட குடிசைகளைப் பார்வையிட்ட அவர், மக்களின் அன்றாட வாழ்க்கை முறைகள், அவர்கள் வேலைக்குச் சென்றுவரும் விதம் ஆகியவற்றை விவரமாக கேட்டுத் தெரிந்து கொண்டார். அப்போது அங்குள்ள பள்ளிகளில் டாய்லெட் வசதி இல்லாததால் மாணவிகள் படிப்பை பாதியிலேயே நிறுத்திவிடுவது பற்றி கேள்விப்பட்டதும் மிகுந்த மனவேதனை அடைந்தார். எனக்கும் வயதுக்கு வந்த மகள் இருக்கிறாள். டாய்லெட் இல்லாததால் பள்ளிக்குச் செல்லமுடியவில்லை என்ற நிலை யாருக்கும் வரக்கூடாது என்று நினைத்த பல்லா, இந்தியாவில் டாய்லெட் இல்லாத பள்ளிகளில் அந்த வசதியை ஏற்படுத்தித் தருவது என்று உறுதிமொழி எடுத்துக்கொண்டார்.

ஆஸ்திரேலியா திரும்பியவுடன், உடனடியாக We can't wait என்ற பெயரில் ஓர் அறக்கட்டளையை நிறுவினார். பல்வேறு கலை நிகழ்ச்சி களை நடத்தி அறக்கட்டளைக்கு நிதி திரட்டினார்.

2012-ஆம் ஆண்டில் ஒருநாள் கொல்கத்தாவில் உள்ள

---

*இப்போதெல்லாம் குடிநீருக்காக நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியிருக்கிறது. ஏனெனில் எங்களுடன் போட்டி போட மாணவிகளும் தண்ணீர் குடிக்க வந்து விட்டனர் என்கின்றனர் மாணவர்கள்.*

---

தொழிற்சாலையில் தொழிற்சங்க ஊழியர்களால் பிரச்னை ஏற்படவே இந்தியாவுக்கு மீண்டும் வந்த மார்க் பல்லா, இது தொடர்பான ஆலோச னைக்காக பெரோஸ் கபாடியாவை சந்தித்தார். பலநிறுவனங்களுக்கு கன்சல்டன்டாக இருக்கும் கபாடியா, நாசிக் ரோட்டரி சங்க உறுப்பிராவார். பல்லாவிடம் பேசிய போது மும்பையில் பல அரசுப் பள்ளிகளில் டாய்லெட் வசதி இல்லாமல் இருப்பதை குறிப்பிட்டுள்ளார். மேலும் ரோட்டரி சங்கங்கள் பள்ளிகளுக்குச் செய்துவரும் சமூகப் பணிகளையும், பள்ளிகளுடன் ரோட்டரிக்கு உள்ள தொடர்புகளையும் விரிவாக எடுத்துரைத்து ள்ளார். குறிப்பாக ஆசிரியர்களுக்கு சி றப்புப் பயிற்சி அளிப்பது, பள்ளிக்கு நூலக வசதி ஏற்படுத்தித் தருவது பற்றியும் விவரித்துள்ளார். நாசிக்கில் ஒரு அரசுப் பள்ளிக்கு டாய்லெட் வசதி அமைத்துத்தருவது அவசியத்தேவை என்பதையும் கபாடியா, பல்லாவிடம் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதைக்கேட்டதும் மார்க் பல்லா, அவரிடம், 500 பேர் படிக்கும் அந்தப் பள்ளிக்கு டாய்லெட் வசதி செய்துகொடுக்க தாம் தயாராக இருப்பதாகவும், 15 டாய்லெட்டுகள் அமைக்க எனது அறக் கட்டளையில் போதிய நிதி இல்லை. நான் ஒரு தொகை தருகிறேன். உங்கள் ரோட்டரி சங்கமும் இதற்கு உதவினால் காரியம் சாத்தியமாகும் என்று தெரிவித்துள்ளார்.

பின்னர், ஆஸ்திரேலியா சென்ற மார்க் பல்லா, இந்தியாவில் உள்ள பல பள்ளிகளில் டாய்லெட் வசதி இல்லையென்றும், இதன் காரணமாக பெண்கள் தங்கள் படிப்பை பாதியிலேயே நிறுத்திவிடுவதாகவும். அப்பள்ளிகளில் டாய்லெட் வசதி செய்துகொடுக்க தாம் திட்டமிட்டுள்ளதாகவும் மெல்போர்னில் உள்ள பாக்ஸ்ஹில்ஸ் ரோட்டரி சங்கத்தினரிடம் கூறியுள்ளார். இது நல்ல தி்ட்டம்தான். ஆனால், இதற்கு நாங்கள் உதவ வேண்டுமானால், முதலில் நீங்கள் எங்கள் சங்கத்தில் உறுப்பினராகச் சேரவேண்டும் என்று ரோட்டரி சங்கத்தினர் சொல்லவே

மறுப்பு ஏதும் சொல்லாமல் சங்கத்தில் உறுப்பினரானார் பல்லா.

அடுத்த சில மாதங்களிலேயே ரோட்டரி மாவட்டம் மூலம் நிதியுதவி கிடைத்தது. தனது அறக் கட்டளைக்கு மேலும் நிதி குவிந்ததை அடுத்து இந்தியா வந்து திட்டத்தைத்



*தில்லியில் PRID சுஷில் குப்தாவுடன் மார்க் பல்லா மற்றும் அவர் மனைவி ஆனி.*



*தாராவியைச் சேர்ந்த ஃபாஹிம் வோரா நாசிக்கில் பள்ளிக்குழந்தைகளுடன்.*

தொடங்கினார் மார்க் பல்லா. 2015-ஆண்டு மார்ச் மாதம், நாசிக் அரசுப் பள்ளியில் 15 டாய்லெட்டு கள் கட்டி முடிக்கப்பட்டு, கோலாகல நிகழ்ச்சியில் திறந்துவைக்கப்பட்டது. (இப்போதெல்லாம் அந்தப் பள்ளி மாணவிகள் எல்லாம் லீவ் போடுவதே இல்லையாம். மாதவிடாய் காலத்திலும் பள்ளிக்கு வருகிறார்கள். அவர்களுக்குத் தேவையான சானிடரி நாப்கின்கள் தரப்படுகிறது. அதற்கென தனி குப்பைத் தொட்டியும் வைக்கப்பட்டுள்ளதாம்.)

அந்த நிகழ்ச்சியில் பேசிய பல்லா, 12000 டாலர் செலவில் நிறைவேற்றப்பட்ட இந்தத் திட்டம், சிறிய திட்டம் என்றாலும் இது ஒரு அற்புதமான திட்டமாகும். என் வாழ்நாளில் மறக்கமுடியாதது என்று நெகிழ்ச்சியுடன் கூறினார்.

*12000 டாலர் செலவில் நிறைவேற்றப்பட்ட இந்தத் திட்டம், சிறிய திட்டம் என்றாலும் இது ஒரு அற்புதமான திட்டமாகும். என் வாழ்நாளில் மறக்கமுடியாதது.*

இது பற்றி எனது ஆஸ்திரேலிய நண்பர்களிடம் சொன்னபோது அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. அவர்கள் கொடுத்த ஊக்கத்தின்பேரில் இந்தியா வந்த நான், சர்வதேச நிதியுதவியுடன் 7 பள்ளிகளில் 5,000 மாணவர்களுக்குத் தேவையான டாய்லெட் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தேன் என்கிறார் பல்லா பெருமையுடன்.

2015-ஆம் ஆண்டில் சாவ்பாலோவில் நடைபெற்ற ரோட்டரி மாநாட்டில் PRID சுஷில் குப்தா, PDG ரமேஷ் அகர்வால் (தில்லி, அசோகா ரோட்டரி சங்கம்), சரத் ஜெயின் இருவரையும் பல்லாவிடம் அறிமுகம் செய்துவைத்தார். இதைத் தொடர்ந்து தில்லியில் ரமேஷ் அகர்வாலை சந்தித்த பல்லா 3 சர்வதேச அளவிலான திட்டத்தைச் செயல்படுத்த முடிவு செய்தார். ரோட்டரி சங்கத்து டன் வேர்ல்டு விஷன் என்ற அமைப்பும் இத்திட் டத்தில் சேர்ந்துகொண்டது. மாணவர்களிடம் சமூக மாற்றத்தை ஏற்படுத்து வதே இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இந்தத் திட்டம் 2 ஆண்டு களில் 11 பள்ளிகளில் நிறைவேற்றப்பட்டது.

இதைப்பார்த்த தில்லி மாநகராட்சி அதிகாரி ஒருவர், நாங்கள் உங்கள் பணிகளை இரண்டு ஆண்டுகளாக கண்காணித்து வருகிறோம். ரோட்டரி சங்கம் சமூகப்பணிகளை சிறப்பாகச் செய்துவருகிறது. அவர்களுக்கு எங்கள் பாராட்டுகள் என்று கூறியது டன் இதேபோன்ற ஒரு திட்டத்தை 700 பள்ளிகளில் 3,50,000 மாணவர்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்த திட்ட மிட்டுள்ளதாகக் கூறினார். தற்போது கரோனா தொற்று பீதியால் இந்தியா முழுவதும் ஊரடங்கு போடப்பட்டுள்ளதால் இத்திட்டம் தாற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ள தாகத் தெரியவந்துள்ளது. ரோட்டரி சங்கத்துக்கு சமூகத்தில் நல்ல மதிப்பு இருப்பதும், சமூகப் பணிகளுக்கு நல்ல அங்கீகாரம் கிடைத்திருப் பதும் இதன் மூலம் நிரூபணமாகிவிட்டது என்றார் பல்லா.

இந்த நிலையில் PDG ரமேஷ் அகர்வாலுடன் இணைந்து ஒரு புதிய

திட்டத்தை 2,54,000 டாலர் நிதியில் செயல்படுத்த முன்வந்தார் மார்க் பல்லா. 25 சங்கங்கள், 6 ரோட்டரி மாவட்டங்கள், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இந்தியா, இங்கிலாந்து, நியூஸிலாந்து உள்பட 7 நாடுகள் இதற்கு உதவி செய்ய முன்வந்தன.

19 பள்ளிகளில் டாய்லெட் வசதி செய்து தருவது, பழைய கட்டடங்களைப் புதுப்பித்து அழகுபடுத்துவது என பல்வேறு திட்டங்கள் இதில் அடங்கும். குறிப்பாக மாணவர்கள் மனதில் சமூக மாற்றத்தை ஏற்படுத்துவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும் என்றார் பல்லா.

இதற்கிடையில் ரோட்டரியின் கூட்டு முயற்சியுடன் நாசிக், புணே நகரங்களில் மேலும் சில சிறிய திட்டங்களைச் செயல்படுத்த முனைந்தார். இதேபோன்ற ஒரு திட்டத்தை குவாடிமாலாவில் செயல்படுத்து வதற்காக ஆய்வு நடத்திய பல்லா கூறுகையில், இந்தியாவில் எந்த திட்டங்களானாலும் செயல்படுத்து வதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. ஆனால், ஏழை நாடுகளில் இவற்றைச் செயல்படுத்துவது என்பது எளிதான காரியம் அல்ல என்றார்.

எந்த ஒரு திட்டத்தை செயல்படுத்தினாலும் அந்தத் திட்டம் நீடித்து நிலைக்க வேண்டும். அந்த வகையில் நாங்கள் ரோட்டரியிடமிருந்து பல விஷயங்களை கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. இப்போதெல்லாம் எங்கள் அறக் கட்டளை மூலம் திட்டங்களைச் செயல்படுத்தும் முன்பு பள்ளிகளைத் தேர்வு செய்கிறோம். இன்றைய சூழலில் பல பள்ளிகளுக்கு நலத் திட்டங்கள் தேவைப்படுகிறது. நாங்கள் எல்லோருக்கும் உதவ முடியாது. எனவே உதவி தேவைப்படும் பள்ளிகளை கவனமாகத் தேர்ந்தெடுக்கிறோம். அந்தப் பள்ளியின் முதல்வர்,

*எந்த ஒரு திட்டத்தை செயல்படுத்தினாலும் அந்தத் திட்டம் நீடித்து நிலைக்க வேண்டும்.*

ஆசிரியர்கள், பள்ளி நிர்வாகம் ஆகியோர் உண்மையிலேயே பள்ளியில் சுகாதாரத்தை பேணுவதில் ஆர்வமாக இருக்கிறார்களா? அவர்களால் இத்திட்டத்துக்கு ஏதாவது தொகை செலவிடமுடியுமா? என்று பார்த்துதான் பள்ளிகளைத் தேர்ந்தெடுக்கிறோம். மேலும் அத்தகைய பள்ளிகளில் சுகாதார விழிப்புணர்வு பற்றிய பாடம் நடத்தப்படுகிறதா? என்றும் கேட்டுத் தெரிந்து கொள்கிறோம். மேற்கூறியவற்றில் ஆர்வம் காட்டாத பள்ளிகளுக்கு நாங்கள் ஏன் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும என்று கேட்கிறார் மார்க்



*ஆஸ்திரேலிய மற்றும் நாசிக் ரோட்டரியினர் நாசிக்கில் பள்ளி ஆசிரியர்களுடன்.*

பல்லா. முன்பு பள்ளிகளுக்கு டாய்லெட் வசதி செய்து கொடுத்த போது அங்கு போதிய தண்ணீர் வசதி இருக்கிறதா என்று பார்த்தீர்களா என்று கேட்டதற்கு முன்பு அந்தப் பிரச்னை இல்லை. ஆனால், இப்போது தண்ணீர் வசதி இல்லாத பள்ளிகளில் திட்டங்களை செயல்படுத்துவதே இல்லை.பள்ளிகளில் டாய்லெட் வசதி செய்து தருவதன் நோக்கமே, மாணவர்களிடம் சமூக மாற்றம் ஏற்பட வேண்டும். டாய்லெட் இல்லாத வீடே இல்லை என்றநிலை உருவாக வேண்டும் என்பதுதான் என்கிறார் பல்லா.

இந்தியாவில் முதன் முதலாக 2015-ஆம் ஆண்டு 500 மாணவர்கள் படிக்கும் அரசுப் பள்ளிக்கு 2000 டாலர்கள் செலவில் 15 டாய்லெட்டுகளை கட்டிக்கொடுத்து சாதனை படைத்த பல்லா, தனது பணியை தொடர்ந்து வருகிறார். கோரொனா நோய்த் தொற்று பீதி மட்டும் மார்ச் மாதம் ஏற்படாமல் இருந்திருந்தால் பல்லா மேலும் பல டாலர்களை நன்கொடையாகப் பெற்று ஒரு லட்சம் பள்ளிக் குழந்தைகளின் வாழ்க்கையில் ஒளியேற்றிருப்பார்.




*தில்லியில் பள்ளிக் குழந்தைகளுடன் மார்க் பல்லா.*



மார்க் பல்லா இப்போது தனது தொழிலை கைவிட்டுவிட்டு சமூகப் பணியாற்றுவதையே முழுநேரப் பணியாக்கிக்கொண்டுள்ளார். இதுதான் எனக்கு மனநிறைவைத் தருகிறது என்கிறார். இவரைப் போல் இன்னும் எத்தனைப்பேர் சமூகப்பணியில் காத்திருக்கிறார்களோ யாருக்குத் தெரியும். ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம். இவரைப்போன்றவர்களுக்கு ரோட்டரிதான் பின்னணியில் இருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை.

*பள்ளிகளில் டாய்லெட் வசதி செய்து தருவதன் நோக்கமே, மாணவர்களிடம் சமூக மாற்றம் ஏற்பட வேண்டும். டாய்லெட் இல்லாத வீடே இல்லை என்றநிலை உருவாக வேண்டும்.*

இந்தியப் பள்ளிகளில் மாணவ, மாணவிகளுக்கு டாய்லெட் அமைத்துக் கொடுத்தபோது ஏற்பட்ட தமது அனுபவங்களை மார்க் பல்லா ஒரு புத்தமாக எழுதியுள்ளார். அதற்கு TOILET WARRIOR என்று பெயரிடப்பட்டுள்ளது. இதன் விலை ரூ.500. இந்த புத்தக விற்பனை மூலம் கிடைக்கும் வருவாயில் 30,000 டாலரை ரோட்டரி அறக்கட்டளைக்கு கொடுக்கப்போவதாக அவர் கூறிவருகிறார். நீங்களும் ஒரு புத்தகம் வாங்கி அவருக்கு உதவலாமே!

*The book, published by Notion Press, Chennai, is available at https://notionpress.com/read/toilet-warrior*

வடிவமைப்பு: கிருஷ்ணப்பிரதீஷ்

# ரோட்டரி இந்தியாவின் உதவிக்கு ஹர்ஷ் வர்தன் நன்றி தெரிவிக்கிறார்

ரஷீதா பகத்

மத்திய நலத்துறை அமைச்சர் ஹர்ஷ் வர்தன் மூத்த ரோட்டரி தலைவர்கள் மற்றும் நாடுமுழுவதுமுள்ள ரோட்டரியன்களுடன் ஓர் இணையக் கலந்துரையாடலில் பங்கேற்றார், அப்போது, கொரொனா நோய்ப்பரவலால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக நாடுமுழுவதும் ரோட்டரி செய்துள்ள பணிக்காக அவர் நன்றி தெரிவித்தார்.

நீங்கள் PM CARES நிதிக்காக ரூ.26 கோடி திரட்டியுள்ளீர்கள், முதன்மையான மருத்துவமனைக் கருவிகள், தூய்மைப்படுத்திகள், சமைக்கப்பட்ட உணவுகள் மற்றும் உணவு தானியப் பொதிகள் போன்ற ரூ.75 கோடி மதிப்புள்ள உங்களுடைய மற்ற பங்களிப்புகள் உண்மையிலேயே பாராட்டுக்குரியவை என்றார் அவர்.

கொரொனா நோய்ப்பரவலைக் கட்டுப்படுத்தும் பணிக்காகப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் GoIயும் பல உயர் ஆற்றல் குழுக்களும் சுறுசுறுப்புடனும் போர்க்கால அடிப்படையிலும் செயல்பட்டதை அமைச்சர் விரிவாக விளக்கினார்.

நாங்கள் 55,000 கூடுதல் செயற்கை மூச்சுவிடல் கருவிகளை ஆர்டர் செய்திருந்தபோதும், நோய்த் தொற்று கொண்ட மக்களில் ஒரு சதவிகிதத்துக்கும் குறைவானவர் களுக்குத்தான் செயற்கை மூச்சு விடல் கருவிகளில் இணைக்க வேண்டியிருக்கும் என்று நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன் என்றார் அமைச்சர்.

ரோட்டரியன்கள் சரியான நேரத்தில் வழங்கிய சேவை, உதவியைப்பற்றி மீண்டும் பேசத் தொடங்கிய அமைச்சர், இளம்பிள்ளைவாதத்தை அகற்றுவதில் நீங்கள் வழங்கிய சேவையைச் சொற்களால் விவரிக்க இயலாது, அதிலும் குறிப்பாக, ஒவ்வொரு குழந்தைக்கும் இளம்பிள்ளைவாதத் தடுப்பு மருந்தை வழங்கிப் பாதுகாக்க இயலுமா என்பது பற்றி உலகம்முழுக்கவும், இந்தியாவிலும்கூடப் பலவிதமான ஐயங்கள் பரவியிருந்த நேரத்தில் நீங்கள் மிகச்சிறப்பாகச் செயல்பட்டீர்கள் என்று தொடர்ந்து குறிப்பிட்டார்.

இளம்பிள்ளைவாதத் தடுப்பு மருந்து வழங்குவதில் ரோட்டரியன்கள் செய்த பணியின் விளைவு, கடந்த ஒன்பது ஆண்டுகளில் நாம் ஓர் இடத்தில் கூட இளம்பிள்ளைவாதத்தைக் காணவில்லை என்று தொடர்ந்து குறிப்பிட்டார் அவர்.

இந்திய ரோட்டரியன்கள் செய்துவரும் பணிகளைப்பற்றி RIPN சேகர் மேத்தா ஹர்ஷ் வர்தனுக்குச் சுருக்கமாக விளக்கினார், RI இயக்குநர்கள் பரத் பாண்ட்யா மற்றும் கமல் சாங்க்வி மற்றும் மாவட்ட ஆளுநர்களுடைய தலைமையில் இந்திய ரோட்டரியன்கள் ஏப்ரல் 20 வரை ரூ.30 கோடிக்கு மேற்பட்ட



*மத்திய சுகாதார அமைச்சர் ஹர்ஷ் வர்தன், RIPN சேகர் மேத்தா, RID பரத் பாண்டியா, PDG நான்சிபார்பீ மற்றும் RID கமல் சங்வி.*

மதிப்புடைய மருத்துவக் கருவிகள், 2 லட்சம் தூய்மைப்படுத்திகள், 75,000 எண்ணிக்கையிலான PPEகள், 25 லட்சத்துக்கும் மேற்பட்ட உணவுகள், 3,500 மணிநேரங்களுக்கு மேலான மன நல ஆலோசனைகளை வழங்கியிருந்தார்கள், ரோட்டரியால் பயிற்சியளிக்கப்பட்ட பெண்கள் திறன் மேம்பாட்டுப் பணியாளர்கள் நூற்றுக்கணக்கான முகக் கவசங்களைத் தயாரித்துக்கொண்டிருந்தார்கள்.

PM CARES நிதிக்கு நாங்கள் ரூ.25 கோடி திரட்ட விரும்பினோம், ஆனால், ஏற்கெனவே ரூ.26 கோடி திரட்டப்பட்டுவிட்டது, ரோட்டரி இந்தியா ரூ.75 கோடி மதிப்புள்ள COVID மீட்புதவிப் பணிகளைச் செய்துள்ளது, இதன்மூலம் (ஏப்ரல் 21 வரையில்) மொத்தம் ரூ.101 கோடி மதிப்புள்ள உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அவர் இன்னொரு விஷயத்தையும் அமைச்சருக்குச் சுட்டிக்காட்டினார், இவை அனைத்தும் ரோட்டரியன்களுடைய சொந்தச் சேமிப்பிலிருந்து செய்யப்பட்டுள்ளன. ஒரு பெருநிறுவனத்துக்கு ரூ.500 கோடி நன்கொடை அளிப்பது எளிதாக இருக்கலாம்... அதைச் செய்கிற நிறுவனங்களை நாம் மிகவும் பாராட்டுகிறோம், அதே நேரத்தில், தங்களுடைய சொந்தப் பையிலிருந்து பணத்தை எடுத்து இத்தனை உதவிகளைச் செய்த இந்திய ரோட்டரியன்களையும் நாம் பாராட்டுகிறோம்.

TRF அறங்காவலர் குலாம் வாஹன்வடி பேசுகையில், பேரழிவுகளுக்கான மீட்புதவிப் பணிகளுடன் தொடர்புடைய திட்டங்களுக்கு உதவுவதற்காக மட்டுமே TRF ஒரு பேரழிவு எதிர்வினை நல்கையை உருவாக் கியிருக்கிறது'' என்றார். இப்போதைய நிலைமையில், உலகம்முழுவதும் எதிர்கொள்கிற இந்தக் கொரொனா நோய்ப்பரவலைவிடப் பெரிய இன்னொரு பேரழிவு இல்லை. ஆகவே, நம்முடைய 540 மாவட்டங்களுக்கும் TRF உதவ வேண்டும் என்று அறங்காவலர்கள் தீர்மானித்துள்ளார்கள், இது வரை, உலகம்முழுக்க 180 மாவட்டங்களுக்குத் தலா 25,000 வழங்கப்பட்டுள்ளது; இது மொத்தம் ரூ.24 கோடி ஆகிறது. இந்தியாவில் 21 மாவட்டங்கள் இந்த நல்கையைப் பெற்றுள்ளன, அதன் மொத்த மதிப்பு ரூ.4 கோடி.

இன்னும் பெரிய நல்கைகள் அல்லது GGக்களைப் பொறுத்த வரை, இதுவரை ரூ.7 கோடி மதிப்புள்ள 11 GGக்கள் வழங்கப் பட்டுள்ளன, இவற்றின் மூலம் மருத்துவமனைகளுக்குச் செயற்கை மூச்சுவிடல் கருவிகள் மற்றும் பிற கருவிகள் நன்கொடையாக அளிக்கப்படும்.

இப்படிப்பட்ட ஓர் இணையப் பரப்பல் நிகழ்ச்சியில் பிரதமர் மோடியை வெறும் 5 நிமிடம் பேச அழைக்கும்படி ஹர்ஷ் வர்தனைக் கேட்டுக்கொண்டார் மேத்தா, இதன்மூலம், COVID-19க்கான ரோட்டரி இந்தியாவின் ரூ.101 கோடிப் பங்களிப்பு மிக விரைவில் ரூ.125 கோடியாக மாறிவிடும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

நலப்பராமரிப்பைப் பொறுத்தவரை, அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கான எங்களுடைய தொலைநோக்கு, ஒவ்வோராண்டும் 50 கண் மருத்துவமனைகள், 40 ரத்த வங்கிகள், மார்பகப் புற்றுநோய் கண்டறிதல், கண் பரிசோதனை/ சிகிச்சைக்கான 50 நடமாடும் மருந்தகங்களை அமைத்தல், சிறுவர்களுக்கான 25,000 இதய அறுவைச்சிகிச்சைகளை நடத்துதல், மற்றும், 15 லட்சம் மக்களுக்கு நலப் பரிசோதனை வழங்குதல். இந்தப் பணிகள் அனைத்தையும் உங்களுடைய தலைமையின் கீழ் நல அமைச்சகத்துடன் சேர்ந்து செய்யவேண்டும் என்று ரோட்டரியன்கள் விரும்புவார்கள். இதற்குமுன், இளம்பிள்ளைவாதத்தை அகற்றுதலில் நீங்கள் எங்களுடன் பணியாற்றியிருக்கிறீர்கள்.... போலியோப்ளஸ்-ஸில் அரசாங்கத்துடன் நாங்கள் கொண்ட நல்ல நட்பு உங்களிடம்தான் தொடங்கியது, நீங்கள் ரோட்டரியின் மிகப்பெரிய ஆதரவாளர்களில் ஒருவர். இந்தப் பிரச்னைகளில் நீங்கள் காட்டும் பேரார்வத்தை நான் அறிவேன், ரோட்டரியன்களாகிய நாங்களும் அதேபோன்ற பேரார்வத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்'' என்று தொடர்ந்து குறிப்பிட்டார் அவர்.

கொரோனா நோய்ப்பரவலை எதிர்ப்பதில் வர்தன் வழங்கிய தலைமையை PRIP ராஜேந்திர சாபூ பாராட்டினார்; இதுபோன்ற ஒரு சிரமமான நேரத்தில் நீங்கள் எங்களுடைய நலத்துறை அமைச்சராக இருப்பது எங்களுடைய அதிர்ஷ்டம்.

RI இயக்குநர் பரத் பாண்ட்யா அமைச்சரை அவருடைய முன்மாதிரியான தலைமைக்காகப் பாராட்டினார், இந்திய ரோட்டரியன்கள் அவருடன் நிற்பதாகவும், ஒரு மனிதருக்குக் கிடைக்கக்கூடிய மிக முதன்மையான சொத்து, நல்ல உடல்நலன்தான் என்பதை நம்புவதாகவும், இந்த நோய்ப்பரவலைக் கையாள்வதில் அரசுக்கு உதவுவதற்காகப் பலவிதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும், PM CARES நிதிக்குக் குறிப்பிடும்படியான ஒரு பங்களிப்பை வழங்கியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். கடந்த பல ஆண்டுகளாக, இந்தியாவிலிருந்து இளம்பிள்ளைவாதத்தை நீக்குவதில் ரோட்டரி ஆற்றியுள்ள பணிகளைப்போலவே, இந்த நோய்ப்பரவலின்போதும் ரோட்டரியன்கள் அரசாங்கத்துடன் இணைந்து பணிபுரிவார்கள் என்று அவர் வாக்களித்தார். மேலும், இந்த நெருக்கடியை நாம் வென்றபிறகு, நலத்துறையுடன் தொடர்புடைய மற்ற பகுதிகளில், குறிப்பாக, தொற்றாத நோய்கள் விஷயத்தில் நாங்கள் GoIயுடன் இணைந்து பணிபுரிவோம், இதில் உங்கள் வழிகாட்டுதல், ஆதரவை எதிர்நோக்குகிறோம்.

RI இயக்குநர் கமல் சங்வி நலத்துறை அமைச்சருடைய நேரத்துக் காகவும் ஊக்கத்துக்காகவும் அவருக்கு நன்றி தெரிவித்தார்; நாடு முழுவது முள்ள ரோட்டரி தலைவர்கள் மற்றும் ரோட்டரியன்களுடைய தாராள மனப்பான்மைக்காகவும் இந்தச் சிரமமான நேரத்தில் அவர்களுடைய கடின உழைப்புக்காகவும் நன்றி கூறினார்.

PDG ரஞ்சன் திங்க்ரா கூட்டத்துக்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றார்.■

# கொரோனா கற்றுத்தந்த பாடம்: பிரகாஷ் ஜாவ்டேகர்

ஜெய்ஸ்ரீ

மத்திய அமைச்சர் பிரகாஷ் ஜாவ்டேகருடன் விடியோ கான்பரன்சிங் மூலமான ஒரு சந்திப்புக்கு ஏற்பாடு செய்திருந்தார் RIPN சேகர் மேத்தா. இந்த சந்திப்பின்போது 300-க்கும் மேலான ரோட்டரி பிரமுகர்கள் கலந்துகொண்டு எழுத்தறிவு, சுற்றுச்சூழல், கொரோனா தொற்று உள்ளிட்ட பல்வேறு விஷங்களை அமைச்சருடன் கலந்து விவாதித்தனர்.

இந்த சந்திப்பின்போது, கொரோனா தடுப்பு நடவடிக்கை களுக்காக பிரதமரின் நிவாரண நிதிக்கு (PM CARES Fund) ரோட்டரி மூலம் ரூ.30 கோடி நிதி திரட்டியுள்ள தாகவும் இந்த தொகையை பிரதமர் மோடியிடம் நேரில் கொடுப்பது போலான காணொளிக் காட்சிக்கு ஏற்பாடு செய்யுமாறும் சேகர் மேத்தா, அமைச்சர் ஜாவ்டேகரிடம் கேட்டுக்கொண்டார்.

பின்னர் மேத்தா, ரோட்டரி மேற்கொண்டு வரும் பொது சேவைகளை அமைச்சரிடம் விவரித்தார். கிராமங்களில் ஒரு லட்சம் சூரிய சக்தி மின் விளக்குகள் நிறுவப்பட்டுள்ளதாகவும், ரோட்டரியின் சுற்றுச்சூழல் குழு மூலம் அடுத்த 5 ஆண்டுகளில் 30 கோடி மரக்கன்றுகள் நட இருப்பதாகவும் தெரிவித்தார்.

இது தவிர, கொரோனா தொற்றை கட்டுப்பத்துவதற்காக ரோட்டரி செய்து வரும் சேவைகளையும் விவரித்தார். மக்களின் பாதுகாப்புக்காக ஒரு கோடி முகக்கவசங்கள், 75,000 தனிநபர் பாதுகாப்பு கவசங்கள், 2 லட்சம் லிட்டர் கிருமிநாசினிகள் விநியோகம், பாதிக்கப்பட்ட வர்களுக்கு 25 லட்சம் உணவுப் பொட்டலங்கள், உணவுப் பொருள்கள், மருத்துவமனைகளுக்கு ரூ.20 கோடி மதிப்பிலான மருத்துவக் கருவிகள் வாங்கித்தந்தது உள்ளிட்ட ரூ.75 கோடி மதிப்பிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டதையும் அவர் குறிப்பிட்டார். ரோட்டரி பயிற்சி மையங்கள் மூலம் முகக் கவசங்கள் தயாரிக்கப்பட்டு பல்வேறு பகுதி களுக்கு விநியோகிக்கப்பட்டதையும் குறிப்பிட்டார்.



RIPN சேகர் மேத்தா, மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் பிரகாஷ் ஜாவ்டேகர் மற்றும் PRIP கல்யாண பானர்ஜீ.

அடுத்த 5 ஆண்டுகளில் அரசின் திட்டங்களில் 10 சத வீதத்தை ரோட்டரி செயல்படுத்த இருப்பதாகவும், ரோட்டரி இந்தியா நூற்றாண்டை முன்னிட்டு ரூ.200 கோடி மதிப்பிலான திட்டங்களைச் செயல்படுத்த இருப்பதாகவும் அமைச்சரிடம் குறிப்பிட்டார் சேகர் மேத்தா.

ஜாவ்டேகர் உரையாற்றுகையில், முகக்கவசங்கள் அணிவது, கிருமி நாசினிகள் கொண்டு அடிக்கடி கைகளைக் கழுவுவது இப்போது வழக்கமான ஒன்றாகவிட்டது என்றார். கொரோனா தொற்றுக்கு மருந்து கண்டுபிடிக்கும் வரை இதேநிலை தொடரவேண்டும் என்றார்.

ரோட்டரியுடன் தமக்கு 40 ஆண்டுக்கால தொடர்பு இருப்பதையும், கல்லூரி நாட்களில் ரோட்டரி நிகழ்ச்சிகளில் தாம் பங்கேற்றதையும் அமைச்சர் குறிப்பிட்டார். ரோட்டரி எழுத்தறிவு இயக்கத்தின் செயல்பாடுகளை பாராட்டிய அமைச்சர், ரோட்டரி இன்டர்நேஷனல் எழுத்தறிவு இயக்கம் வயதுவந்தோருக்கான கல்வி பாடத் திட்டத்தை வடிவமைத்ததை பாராட்டியது டன் அதை NCERT பின்பற்ற பரிந்துரைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

கொரோனா தடுப்பில் அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளையும், அதில் ஏற்பட்டு வரும் முன்னேற்றங் களையும் அமைச்சர் விவரித்தார். இந்தியாவில் தயாரிப்போம் என்ற திட்டத்தின் நோக்கத்தை மக்கள் இப்போது புரிந்து கொண்டு விட்டனர். கொரோனாவை எதிர் கொள்ள இப்போது நாமே முகக் கவசங்கள், தனிநபர் கவசங் களைத் தயாரிக்கத் தொடங்கி விட்டோம். 70 ஆண்டுகளில் செய்ய முடியாததை இப்போது மூன்று மாதங்களில் செய்யத் தொடங்கிவிட்டோம். உலகம் முழுவதற்கும் கொரோனாவை கட்டுப்படுத்தத் தேவையான ஹைடிராக்ஸிகுளோரேகுவைன் மருந்துகளை இந்தியா தான் ஏற்றுமதி செய்கிறது. இந்தியாவில் தயாரிக்க வேண்டும் என்பதையும், இந்தியா

வளர வேண்டும் என்பதையும் மக்கள் இப்போது தெளிவாகப் புரிந்துகொண்டு விட்டனர். இது தான் கொரோனா இந்திய மக்களுக்குக் கற்றுத்தந்த பாடம். இந்தியா வளர்ச்சி பெருவதற்கான வாய்ப்பு இப்போது உருவாகியுள்ளது என்றார்.

**RID பரத் பாண்ட்யா தலைமையில் கேள்வி-பதில் நிகழ்ச்சியும் இடம்பெற்றது.**

**PRIP ராஜேந்திர சாபூ:** ஊரடங்கு காலத்தில் கங்கையில் தண்ணீர் தரமாக உள்ளது. அதற்குப்பின்னரும் இதே நிலை நீடிக்குமா.?

**ஜாவ்டேகர்:** சந்தேகமே. ஊரடங்கு காலத்தில் அனைத்து இடங்களிலும் தொழிற்சாலைகள் இயங்கவில்லை. வாகனப்போக்குவரத்து இல்லை. இது ரொம்ப நாள் நீடிக்காது. நகரத்தில் வாழ வேண்டும், அனைத்து வசதிகளும் கிடைக்க வேண்டும். ஆனால், மாசுபடிதல் மட்டும் இருக்கக்கூடாது என்றால் எப்படி. மாசுபடுதை குறைக்கலாம் தவிர ஒழிக்க முடியாது.

**PRIP கல்யாண் பானர்ஜி:** சுற்றுச்சூழல் விழிப்புணர்வை பள்ளி, கல்லூரிகளில் பாடமாக வைக்கலாமா?


**ஜாவ்டேகர்:** இது ஒரு நல்ல யோசனை தான். ஆனால் சுற்றுச்சூழல் தொடர்பான விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்தலாம். தூய்மையைப் பாரமரிக்கும், மின்சாரத்தை சேமிக்கும், கழிவுமேலாண்மையை கடைபிடிக்கும் கல்லூரிகளை நாம் அங்கீகரிக்கலாம்.

PDG கமலேஷ் மேத்தாவின் ஒரு கேள்விக்கு பதிலளித்த ஜாவ்டேகர், காற்று மாசுபடுதல், தண்ணீர் மாசுபடுதல், பருவநிலைமாற்றம் இவற்றை சமாளிப்பதில்தான் மத்திய அரசு கவனம் செலுத்தி வருவதாகக் குறிப்பிட்டார்.

ரோட்டரி இயக்குநர் பரத் பாண்ட்யா, ஒருமுறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக்குக் கான தடையை ஏன் முழுமையாகச் செயல்படுத்த முடியவில்லை என்று கேட்டதற்கு, பிளஸ்டிக்கை தடை செய்வது பிரச்னைக்குத் தீர்வு ஆகாது. பிளாஸ்டிக் பொருள்களை சேகரித்து அதை மறுசுழற்சி செய்வதற்கு முறையான ஒரு நடைமுறை தேவை என்றார். சிமெண்ட் தொழிற்சாலை உள்ளிட்ட சில தொழிற்சாலைகள் பல லேயர்கள் கொண்ட பிளாஸ்டிக்கை பயன்படுத்தி வருகின்றன. தெர்மோகூல், ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருள்களான பைகள், ஸ்டிராக்கள், பிளாஸ்டிக் கோப்பைகள் இவற்றை முற்றிலுமாக தடை செய்யவேண்டும். இவை சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிப்பவை என்றார்.

நாட்டில் உள்ள தரிசு நிலங்களில் ஒரு பகுதியை ரோட்டரிக்கு வழங்கினால் அந்தப் பகுதிகலில் சிறிய காடுகளை வளர்க்கலாமே என்று பாண்ட்யா கேட்டதற்கு, அரசு-தனியார் பங்களிப்புடன் இதுபோன்ற ஒரு திட்டத்தை புதிய தேசிய வனக் கொள்கை மூலம் செயல்படுத்த நினைத்துள் ளோம். தற்போது ரூ.40,000 கோடி மதிப்பிலான மரங்களை நாம் இறக்குமதி செய்கிறோம். ஆனால், இங்கு அதை செயல்படுத்த முடியாது. ஏனெனில் இந்தியாவில் மரங்களை வெட்டுவதற்கு தடை உள்ளது. புதிய வனக்கொள்கை மூலம் இதற்கு தீர்வுகாணமுடியும் என்றார் ஜாவ்டேகர்.

முன்னதாக வரவேற்றுப் பேசிய ரோட்டரி இயக்குநர் கமால் சங்வி, எங்களது எழுத்தறிவு திட்டத்துக்கு வழிகாட்டியாக இருந்ததுபோல எங்களின் சுற்றுச்சூழல் பாது காப்புத் திட்டத்துக்கும் வழிகாட்ட வேண்டும் என்று அமைச்சர் ஜாவ்டேகரை கேட்டுக்கொண்டார். முடிவில் ரோட்டரி இயக்குநராக தேர்வுசெய்யப்பட்டுள்ள ரவி வட்லாமணி நன்றி கூறினார்.■

# கொரோனா நோய்ப்பரவலின்போது RID3060ன் சிறந்த சேவைகள்

கிரண் ஜெஹ்ரா


COVID-19 முடக்கத்துக்கு ஒரு வாரம் முன்பாக, RID 3060ஐச் சேர்ந்த ரோட்டரியன்கள் ஒருங்கிணைந்து, தங்களுடைய மாவட்டத்தில் இருந்த ரோட்டரி இளைஞர் பரிமாற்றத் திட்ட மாணவர்கள் எட்டுப் பேரும் பாதுகாப்பாகத் தங்களுடைய வீடுகளுக்குத் திரும்புவதை உறுதிசெய்தார்கள். அவர்கள் தங்களுடைய குடும்பத்தினரிடம் பாது காப்பாகத் திரும்பிச் செல்லவேண்டும் என்று நாங்கள் விரும்பினோம்'' என்கிறார் மாவட்ட IYE துணைத் தலைவர் மற்றும் RC சூரத் உறுப்பினரான நேஹல் ஷா.

ஃபிரான்ஸைச் சேர்ந்த பரிமாற்ற மாணவரான ஹெலோய்ஸ் நீங்கலாக மற்ற அனைவரும் பாதுகாப்பாகத் தங்களுடைய வீடுகளுக்குத் திரும்பிவிட்டார்கள். ஹெலோய்ஸின் விமானம் கிளம்புவதற்குச் சில நாட்கள் முன்பாக, நாடுதழுவிய முடக்கம் செயலுக்கு வந்துவிட்டது. ஆகவே, எங்களால் அவரைத் திருப்பி அனுப்ப இயலவில்லை.

ஹெலோய்ஸின் இல்லச் சங்கமான RC டிஜோன் டாய்சன், RID 1750, அவரை இந்தியாவிலேயே தங்கச்செய்யத் தீர்மானித்தது. அவர் இங்கு RC பரோடா சாயாஜிநகரியின் விருந்தினராகத் தங்கியுள்ளார்.

இந்த முடக்கச் செய்தியை அவர் எப்படி எடுத்துக் கொள்வாரோ என்று இங்கு அவரைக் கவனித்துக் கொள்ளும் பெற்றோராகிய மாயல் பயானி மற்றும் வைஷாலி தொடக்கத் தில் கவலை கொண்டார்கள். ஆனால், இந்தக் குழந்தை வெளிப்படுத்திய துணிவும் நம்பிக்கையும் எங்களை வியக்கச் செய்தது'' என்கிறார் மாயல் பயானி. நாங்கள் மிக நல்ல பிணைப்பை வளர்த்துக் கொண்டுள்ளோம்'' என்று தொடர்ந்து கூறுகிறார் மாயலுடைய மனைவி வைஷாலி.

இந்த ஃபிரெஞ்சுப் பெண்ணின் சொந்த ஊரில் நோய்த்தொற்றுகளின் எண்ணிக்கை மிகுதியான அதே நேரத்தில், அவருடைய குழு உறுப்பினர்கள் தங்களுடைய வீடுகளுக்குத் திரும்பினார்கள், ஆகவே, அவர் சற்று பதற்றம் கொண்டார். ஊரில் என்னுடைய வகுப்புத்தோழர்களில் ஒருவருக்கு இந்த வைரஸ் தொற்றியிருப்பதை நான் தெரிந்துகொண்டேன், வீட்டுக்குள் இருப்பதுதான் இதை எதிர்த்துப் போரிடுவதற்கான மிகச் சிறந்த வழி என்று உணர்ந்தேன். இங்குள்ள என்னுடைய பெற்றோர் எல்லா விதங்களிலும் என்னை வசதியாக உணரச்செய்கிறார்கள்.



RC பரோடா மெட்ரோ உறுப்பினர் சாப்பாடு பொட்டலாம் கொடுக்கிறார்.



RC ஆங்கலேஷ்வர் உறுப்பினர் உணவுப்பொருட்கள் கொடுக்கிறார்.

இந்த 16-வயதுப்-பெண் இந்தியச் சமையலையும் கற்றுக்கொள்கிறார். சக்ரி (ஒரு குஜராத்தித் தின்பண்டம்) சமைப்பதும் பரதநாட்டியப் பயிற்சி யெடுப்பதும் எனக்கு மிகவும் பிடித்திருக்கின்றன. இங்கு என்னைக் கவனித்துக்கொண்ட முதல் பெற்றோரான சர்மி ஷா அவர்களிடமிருந்து நான் இந்த நடனத்தைக் கற்றுக்கொண்டேன்.

அவர் சமூக ஊடகங்களின்மூலம் தன்னுடைய குடும்பத்தினர் மற்றும் வகுப்புத் தோழர்களுடன் தொடர்பில் உள்ளார், ஜூன் 2020ல் என்னுடைய இந்தியப் பரிமாற்றக் காலகட்டம் நிறைவடைந்ததும்'' பாதுகாப்பாக வீடு திரும்ப இயலும் என்று நம்புகிறார்.

RID 3060ல் உள்ள ரோட்டரி சங்கங்கள் COVID-19 நோய்ப் பரவலுக்கு எதிரான போரில் இணைந்துள்ளன. PRIP கல்யாண் பேனர்ஜியுடைய சங்கமான RC வாபி, முடக்கக் காலகட்டம் முழுவதும் நாள்தோறும் 200 உணவுப் பொட்டலங்களை வழங்குவதற்காக ரூ.3,34,000 திரட்டியது. மாவட்ட ஆட்சித் தலைவருடைய கோரிக்கையின் பேரில், வல்சத் மாவட்ட நிர்வாகத் துக்கு 500 கைத்தூய்மைப் படுத்திகளை வழங்கியது இந்தச் சங்கத்தின் ரோட்டரி ஹரியா மருத்துவமனை.

முடக்கக் காலகட்டம் தொடங்கி முதல் இரண்டு வாரங்களுக்குள், சங்க உறுப்பினர்களான முன்னா ஷா, கிரித் மேத்தா, A K ஷா, அஷ்ரஃப் நதானி மற்றும் G L மோடி ஆகியோர் PM CARES நிதிக்கு மொத்தம் ரூ.95 லட்சம் நன்கொடையளித்தார்கள், மகேந்திர ஷா, முதலமைச்சர் உதவி நிதிக்கு ரூ.2.25 லட்சம் நன்கொடையளித்தார்.



RC ஆங்கலேஷ்வர் நடத்தும் ரோட்டரி மகளிர் வளர்ச்சி மையத்தில் முக கவசங்கள் தைக்கும் பெண்.

வீடு திரும்ப இயலாமல் சிரமப்படும் குடிபெயர்ந்த பணியாளர்களுக்கு 500க்கும் மேற் பட்ட உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. முடக்கம் நிறைவடையும் வரையில், தேவை யுள்ளவர்களுக்கு உணவு தானியங்கள் மற்றும் தேவையான பொருட்களைக் கொண்ட பொதிகளை எங்கள் சங்கம் தொடர்ந்து வழங்கும்'' என்கிறார் சங்கத்தின் தலைவர் RJ சிங்.

RC பரோடா மெட்ரோ 300 குடிபெயர்ந்த தொழிலாளர்களுக்கு உணவுப் பொட்டலங்களை வழங்கியது; காவல்துறை ஊழியர்களுக்கு முகமூடிகள், தின்பண்டப் பொதிகள் வழங்கப் பட்டன. பரோடா மருத்துவக் கூட்டமைப்பின் மருத்துவ மற்றும் துணை மருத்துவ ஊழியர்களுக்குப் பாதுகாப்புப் பொதிகள் வழங்கப் பட்டன. சங்க உறுப்பினரும் உணவகம் நடத்துபவருமான விரஜேஷ் அம்ரித் பரோடாவில் உள்ள மூன்று சேரிப்பகுதிகளில் 800 உணவுப் பொட்டலங்களை வழங்கிவருகிறார்.

RC சூரத் சீஃபேஸ் 4,000 நலிந்த குடும்பங்களுக்கு ரூ.5 லட்சம் மதிப்புள்ள உணவுகளை வழங்கியது. RC சூரத், ரூ.10 லட்சம் மதிப்புள்ள 6,000 உணவுப் பொட்டலங்களையும் பாதுகாப்புப் பொருட்களையும் தேவையுள்ளவர்களுக்கு வழங்கியது. RC உத்னா, ரூ.23.75 லட்சம் மதிப்புள்ள 2,800 உணவுப் பொட்டலங்களையும் பாதுகாப்புப் பொதிகளையும் 11,200 பலன் பெறுவோருக்கு வழங்கியது. நூல் தயாரிப்பு மற்றும் வைரத்தை மெருகேற்றுதலுக்காக அறியப்பட்ட ஓர் இடத்தில் இந்த மூன்று சங்கங்களும் தங்களுடைய வழங்கல்களை நிகழ்த்தி வந்துள்ளன, இங்கு ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிந்து வந்தார்கள், ஆனால், இப்போது இவர்கள் வருமானமின்றித் தவிக்கிறார்கள்.

RC அங்க்லேஷ்வர் இதுவரை 40,000 உணவுப் பொட்டலங்களையும், 300

# டாங்-கில் மீட்புப் பணிகள்

ஜெய்ஸ்ரீ

குஷாலா என்பது, டாங் மாவட்டத்தில் உள்ள ஒரு பழங்குடியினக் கிராமமாகும், இங்கு ஓர் அடர்ந்த காட்டில் அங்குமிங்குமாகச் சுமார் 700 குடும்பங்கள் வாழ்கின்றன. முடக்கத்தின் தொடக்க நாட்களில், RC சூரத், RID 3060 தலைவரான நிகில் மத்ராசி-க்கு மாவட்ட வன அலுவலரிடமிருந்து ஓர் அழைப்பு வந்தது, இந்தக் கிராமவாசிகள் உணவின்றித் தவிக்கிறார்கள் என்றார் அவர்; அவர்களுக்குச் சில மளிகைச் சாமான்களை வழங்கும்படி எங்களைக் கேட்டுக்கொண்டார். நாங்கள் ஏற்கெனவே அந்தக் கிராமத்துடன் பணியாற்றிவருகிறோம்; பள்ளிக் குழந்தைகளுக்குத் துணிகள், புத்தகங்கள் மற்றும் எழுது பொருட்களை வழங்குவதற்காக அங்கு அடிக்கடி செல்கிறோம்.

உடனடியாக, சங்க உறுப்பினர்கள் கிராமவாசிகளுக்காக ஒரு டெம்போ நிறைய மளிகைப் பொருட்கள் மற்றும் காய்கறிகளுக்கு ஏற்பாடு செய்தார்கள்.

அடுத்து, சிராக் காந்தி மற்றும் கேதன் படேல் ஆகிய இரண்டு உறுப்பினர்கள் 135-கிமீ வண்டி ஓட்டிக் கொண்டு அந்தக் கிராமத்துக்குச் சென்றார்கள்.

குஜராத்-மகாராஷ்டிர எல்லையில் உள்ள இந்தக் கிராமத்தை எட்டுவதற்காக ரோட்டரியன்கள் ஒரு கரடுமுரடான சேற்று வழியில் வண்டி ஓட்டிச் சென்றார்கள். இப்போதாவது ஒரு குறிப்பிட்ட இடம்வரையில் ஒரு தார்ச்சாலை உள்ளது; அது சமீபத்தில்தான் போடப்பட்டிருக்கிறது'' என்கிறார் காந்தி. அந்தக் கிராமத்துக்கு மிக அருகிலிருக்கும் பெட்ரோல் பங்க் 40 கிமீ தொலைவில் உள்ளதாகவும், சந்தைப் பகுதி 25 கிமீ தொலைவில் உள்ளதாகவும் தொடர்ந்து கூறுகிறார் அவர்.

பழங்குடியின மக்கள் இரண்டு இடங்களில் திரண்டிருக்க, காந்தியும் படேலும் அவர்களுக்கு மளிகைப் பொருள் பொதிகளை வழங்கினார்கள்.

இந்தப் பயணத்தின் ஒரு வீடியோவைக் காந்தி யூட்யூபில் வெளியிட்டுள்ளார்; அதைப் பார்த்த பலரும் உதவுவதற்காக அவரைத் தொடர்புகொண்டார்கள். மிக விரைவில் ரூ.1 லட்சம் சேர்ந்துவிட்டது. இப்போது இந்தத் தொகை, சூரத்-தில் பசியோடு உள்ளவர்களுக்கு உணவளிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகிறது'' என்கிறார் அவர்.

உணவைத் திரட்டுவதுபற்றி மத்ராசி பேசுகையில், குடியிருப்புச் சமூகங்களில் உள்ள ஒவ்வொரு வீட்டிலிருந்தும் நாங்கள் வெறும் ஐந்து ரொட்டிகளைதான் கேட்கிறோம், ஆனால், 10-20 ரொட்டிகள் கிடைக்கின்றன. எங்கள் ரோட்டரி கூடத்தில் ஒரு சமையலறை உள்ளது; காய்கறி அல்லது பருப்பைச் சமைப்பதற்கு நாங்கள் ஒரு சமையல்காரரைப் பணியமர்த்தி யுள்ளோம். ஒவ்வொரு நாளும், தெருக்கூட்டுபவர்கள், தெருக்களில் வாழ்கிறவர்கள் மற்றும் பிற குறைந்த வருவாய்க் குடும்பங் களுக்குச் சுமார் 3,000-3,500 உணவுப் பொட்டலங்கள் வழங்கப்படுகின்றன. சில குடும்பங் களுக்கு நாங்கள் மளிகைப் பொருள் பொதிகளையும் வழங்குகிறோம், இதன் மூலம் அவர்கள் தங்களுக்குப் பிடித்த விதத்தில் உணவைச் சமைத்துக் கொள்ளலாம்'' என்கிறார் மத்ராசி.

இந்தச் சங்கம் உதவி செய்ய யாரும் இல்லாத முதியவர்கள் மற்றும் நோய்வாய்ப் பட்டவர்களிடமிருந்து கோரிக்கை களைப் பெற்றுக்கொண்டு, மருந்துகள், மளிகைப் பொருட்கள் மற்றும் காய்கறிகளை அவர்கள் வீட்டுக்கே சென்று வழங்குகிறது, என்கிறார் அவர். ரோட்டரியன்களாகிய மருத்துவர்கள் இருவர் தொலைபேசியில் ஆலோச னைச் சேவைகளை வழங்குகிறார்கள்; நோயாளிகளுடைய வீட்டுக்கே மருந்துகளைக் கொண்டுசென்று சேர்க்கிறார்கள்.

மிகச் சமீபத்தில், இந்தச் சங்கம் மூக்குக்கண்ணாடிகளைப் பழுதுபார்க்கும் சேவைகளையும் அறிமுகப்படுத்தியுள்ளது. உடைந்த/ பழுதான மூக்குக்கண்ணாடிகளை நாங்கள் பெற்றுக்கொண்டு, அவற்றைச் சரி செய்து வழங்குகிறோம்'' என்கிறார் காந்தி.



Rtn சிராக காந்தி ஒரு பழங்குடி மூதாட்டியிற்கு காய்கறிகள் மற்றும் உணவுப்பொருட்கள் வழங்குகிறார்.

லிட்டர் கைத்தூய்மைப் படுத்திகளையும் காவல் துறையினர், நலப் பராமரிப்பு ஊழியர்கள், பொதுமக்களுக்கு வழங்கியுள்ளது. இந்தச் சங்கம் அங்க்லேஷ்வருக்கு அருகிலுள்ள ஜிதாலி, வடாரியா, தஹேஜ் கிராமங்களிலும் கிருமிகளை நீக்கியுள்ளது. இந்தச் சங்கத்தின் ரோட்டரி பெண்களுக்கான ஆற்றல் வழங்கல் மையம், உள்ளூர் அலுவலர்களுடைய அனுமதியுடன் முகமூடிகளைத் தயாரிக்கிறது, இவை மாவட்டம் முழுவதும் வழங்கப்படும். சங்க உறுப்பினரான விபுல் கஜேரா முதலமைச்சர்



*காவல்துறையினருக்கு பாதுகாப்பு உபகரணங்கள் அளிக்கும் RC வல்சத் உறுப்பினர்கள்.*



*ஃப்ரான்ஸ் நாட்டைச் சார்ந்த ஹெலாய்ஸ்.*

உதவி நிதிக்கு ரூ.10 லட்சம் நன்கொடை அளித்துள்ளார்.

RC பருச், ரூ.10 லட்சம் மதிப்புள்ள உலர்பொருள் பங்கீட்டுப் பொதிகளை 2,000 அன்றாடக்கூலித் தொழிலாளர்களுக்கு வழங்கியுள்ளது. RCC பருச் ஃபெமினா மற்றும் பருச் நர்மதா நகரி ஆகியவை, RCC மாங்க்ரோல் ஆதரவுடன், இந்தப் பகுதியில் உள்ள ஏழைகளுக்கு உணவுப் பொதிகளைத் தொடர்ந்து வழங்கிவருகின்றன. டொன்டியாச்சா மற்றும் துலே-யில் உள்ள ரோட்டரி சங்கங்களும் சேரிப்பகுதிகளில் வாழ்கிறவர்கள், டிரக் ஓட்டுநர்கள் மற்றும் நலப்பராமரிப்பு ஊழியர்களுக்குத் தூய்மைப்படுத்திகள், முகமூடிகளை வழங்கின.

முடக்கம் ஏழைகளின் மீது உண்டாக்குகிற விளைவுகளைக் குறைப்பதற்காக, ரோடராக்டர்களும் களத்தில் இறங்கியுள்ளனர். RAC அம்ரேலி உள்ளூர் நிறுவனங்கள் மற்றும் காவல்துறையுடன் இணைந்து ஓர் உணவு வேனை இயக்குகிறது. RAC வல்லப் வித்யாநகரும், RAC சண்டிகர், RID 3080ம் சேர்ந்து இணையத்தில் ஒரு COVID-19 விழிப்புணர்வுப் பரப் புரையை நடத்துகின்றன.

கட்டுப்பாடு நம்முடைய கால்களுக்கு தான், நம்முடைய பைகளுக்கு இல்லை என்கிறார் DG அனிஷ் ஷா, என்னுடைய வழிகாட்டும் ஆற்றலான PRIP பானர்ஜியுடன் நான் தொடர்ந்து பேசி வருகிறேன், என்னுடைய மாவட்டத்தில் இருக்கிற ரோட்டரியன்கள் மட்டுமின்றி, நாடுமுழுவதும் உள்ள ஒவ்வொரு சங்கமும் தங்களால் இயன்றதை ரோட்டரியின் பெயரால் வழங்கவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார். ■

# கொரோனாவை எதிர்கொள்ள கேரளத்துக்கு துணைநிற்கும் ரோட்டரி

ரஷீதா பகத்

கொரோனா தொற்று உலகையே அச்சுறுத்தி வரும் நிலையில் ரோட்டரி மாவட்ட ஆளுநராக மருத்துவர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டாலோ அல்லது நியமிக்கப்பட்டாலோ அது வரப்பிரசாதம் தானே!

கொரோனா தொற்றை கட்டுப்படுத்த தேசிய அளவில் ஊரடங்கு மார்ச் 25-ஆம் தேதி அமல்படுத்தப்பட்டது. இதை அறிந்தவுடன் ரோட்டரி மாவட்டம் 3202-ன் DG A கார்த்திகேயன், கொரொனா தொற்று பரவாமல் தடுக்க ரோட்டரியும், ரோட்டரி உறுப்பினர்களும் எப்படி உதவலாம் என சிந்தித்ததுடன் சிறிதும் தாமதிக்காமல் இதற்கென ஓர் பணிக்குழுவை நியமித்தார். அடுத்தநாளே இக்குழுவின் கூட்டம் நடைபெற்றது. கோழிக்கோடு (காலிகட்) மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவர்கள், செவிலியர்களுக்கு பாதுகாப்பு கவச உடை (PPE) வழங்குவது, பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள போலீஸாருக்கு முகக் கவசங்கள், கையுறைகள், கிருமி நாசினிகளை வழங்குவது, கொரோனா பரவாமல் கட்டுப் படுத்தும் பணிகளில் ஈடுபட்டுள்ள சுகாதார ஊழியர்களுக்கு தண்ணீர் வழங்குவது, மருத்துவமனை ஒன்றுக்கு தேவையான மருத்துவக் கருவிகளை வழங்குவது என்று முடிவு செய்யப்பட்டது. DGN டாக்டர் ராஜேஷ் சுபாஷ், கோழிக்கோடு மருத்துவக் கல்லூரியில் கொரோனா தொற்று சிகிச்சைக்காக தனியாக தீவிர சிகிச்சை பிரிவை ஏற்படுத்தித் தரலாம் என்று தெரிவித்த யோசனையும் ஏற்கப்பட்டது.

ரோட்டரி குழுவினர் மார்ச் 30-ஆம் தேதி கோழிக்கோடு மருத்துவக் கல்லூரிக்குச் சென்று முதல்வரிடம் இது குறித்து பேசினர். ஏப்ரல் 9-ஆம் தேதி

*DGN Dr ராஜேஷ் சுபாஷ் கோழிக்கோடு மருத்துவ கல்லூரி ICUவை பார்வையிடுகிறார்.*






*கேரள மீன்வளதுறை அமைச்சர் மெர்சிகுட்டியம்மா தலைமையில் உணவுப் பொருட்கள் கொல்லம் கலெக்டர் அப்துல் நாசரிடம் PDG ஜான்டேனியல், R விஜய்குமார், மீரா டேனியல், DG ஷிரிஷ் கேசவன் ஆகியோர் அளிக்கின்றனர்.*

ரோட்டரி சார்பில் தீவிர சிகிச்சை பிரிவு ஏற்படுத்த முதல்வர் டாக்டர் ராஜேந்திரன் ஒப்புதல் வழங்கினார். ரோட்டரி உறுப்பினர் பாலகிருஷ்ணன் மறார், ரூ.5.5 லட்சம் நன்கொடை வழங்கினார். ஏப்ரல் 15-ஆம் தேதி கொரொனா போன்ற தொற்று நோய்களுக்குச் சிகிச்சை அளிக்கும் வகையில் 10 படுக்கைகள், நான்கு செயற்கை சுவாசக்கருவிகள் (வென்டிலேட்டர்), 10 பல்வேறு வகையான கண்காணிப்புக் கருவிகள், 50-க்கும் மேலான மருத்துவ உபகரணங்கள், ஊசிகள், மருந்துகள் என தீவீர சிகிச்சை பிரிவு தயாரானது என்றார் டாக்டர் ராஜேஷ் சுபாஷ்.

கோழிக்கோடு மாவட்டம் 3202 ரோட்டரி சங்கத்தின் கீழ் உள்ள அனைத்து சங்கத்தினர்களும் ஒன்று சேர்ந்து ரூ.1 கோடி வரை நிதி திரட்டி, செயற்கை சுவாசக் கருவிகள் மற்றும் இதர முக்கியமான மருத்துவ உபகரணங்களை துரிதமாக பெற்றுத்தந்தது குறிப்பிடத்தக்கது.

படுக்கை வசதி என்று பார்த்தால், இந்தியாவிலேயே கோழிக்கோடு மருத்துவமனைக்குத்தான் முதலிடம். இங்கு 3000 படுக்கை வசதிகள் உள்ளன. கொரோனா பரவல் சூழ் நிலையில் அதிகாரப்பூர்வ திறப்பு விழாவுக்கு காத்திராமல், உள்ளூர் MLA பிரதீப் மூலம் ஏப்ரல் 20-ஆம் தேதி ரோட்டரியின் தீவிர சிகிச்சை பிரிவு திறந்துவைக்கப் பட்டது.

கொரோனா தொற்று என்ற பேச்சு எழுந்தவுடனேயே கேரள மாநிலம் தான் உடனடியாக விழித்துக் கொண்டு அதை கட்டுப்பதவற்கான முயற்சியில் களம் இறங்கியது. இதை மற்ற மாநிலங்கள் மட்டுமல்ல, உலகமே பாராட்டியது.

*கோழிக்கோடு மாவட்டம் 3202 ரோட்டரி சங்கத்தின் கீழ் உள்ள அனைத்து சங்கத்தினர்களும் ஒன்று சேர்ந்து ரூ.1 கோடி வரை நிதி திரட்டி, மருத்துவ உபகரணங்களை துரிதமாக பெற்றுத்தந்தது குறிப்பிடத்தக்கது.*

ரோட்டரி மாவட்டம் 3211-ம் DG ஷ்ரீஷ் கேசவனும், DGE டாக்டர் தாமஸ் வவானிகுன்னல் தலைமையில் ரோட்டரி உறுப்பினர்கள் ரூ.1.5 கோடியில் ஒரு திட்டத்தை தயாரித்து கேரளத்தின் தென்மாவட்டங்களில் உள்ள நான்கு மருத்துவமனைகளுக்கு செயற்கை சுவாசக்கருவிகள் வழங்க முன்வந்தனர். 3211 மாவட்ட ரோட்டரி சங்கத்துடன் இணைந்த 143 சங்க உறுப்பினர்கள் 4,600 பேரும் திருவனந்தபுரம், கொல்லம், ஆலப்புழை,கோட்டயம், பதனம்திட்டா ஆகிய 5 வருவாய் மாவட்டங்களில் கொரோனா நிவாரணப் பணிகளிலும் ஈடுபட்டனர்.

பதனம்திட்டா, திருவனந்தபுரம் உள்பட 8 மாவட்டங்கள் கொரொனா பரவல் அதிகம் உள்ள இடங்களாக கேரள அரசால் அறிவிக்கப்பட்டிருந்தன. மேற்குறிப்பிட்ட 5 வருவாய் மாவட்டங்களிலும் மருத்துவர்கள், செவிலியர்களுக்கு உடல் பாதுகாப்பு கவசம் வழங்குவது, தேவைப்படுபவர்களுக்கு முகக்



*கேரள சுகாதாரத்துறை அமைச்சர் K K ஷைலஜாவுடன் ரோட்டரியினர்.*

கவசங்கள், கையுறைகள், கிருமி நாசினிகள் வழங்குவது, ஏழைகள் மற்றும் கூலித்தொழிலாளர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் மற்றும் அரிசி, பருப்பு, உள்ளிட்ட மளிகைப் பொருள்கள் வழங்குவது உள்ளிட்ட நிவாரணப்பணிகளில் ரோட்டரி 3211 மாவட்ட உறுப்பினர்கள் ஈடுபட்டது மறக்கமுடியாதது என்றார் DG கேசவன்.

செயற்கை சுவாசக்கருவிகள் பற்றாக்குறை தொடர்பாக மாநில சுகாதார அமைச்சர் K K ஷைலஜா விடுத்த வேண்டுகோளை ஏற்று

*தீவிர சிகிச்சைப் பிரிவுக்கான செயற்கை சுவாசக் கருவிகளை வழங்க 3 லட்சம் டாலர் சர்வதேச நிதியுதவியுடன் ஒரு திட்டத்தை நிறைவேற்றவும் மாவட்ட ரோட்டரியினர் முடிவு செய்துள்ளனர்.*

கொல்லம், திருவனந்தபுரம், ஆலப்புழை, மருத்துவக் கல்லூரி களுக்கும், பதனம்திட்டா மருத்துவ மனைக்கும் தீவிர சிகிச்சைப் பிரிவுக்கான செயற்கை சுவாசக் கருவிகளை வழங்க 3 லட்சம் டாலர் சர்வதேச நிதியுதவியுடன் ஒரு திட்டத்தை நிறைவேற்றவும் மாவட்ட ரோட்டரியினர் முடிவு செய்துள்ளனர்.

இது தவிர ரோட்டரி சங்கங்கள் பாலா, கோட்டயம் தெற்கு, சென்ட்ரல் இவற்றின் உதவியுடன் 70,250 டாலர் சர்வதேச நிதியுதவியுடன் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு 5 செயற்கை சுவாசக்கருவிகள் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ள தாகவும் இதற்கு ரோட்டரி அறக் கட்டளை ஒப்புதல் அளித்துள்ள தாகவும் கேசவன் தெரிவித்தார்.

ARRFC and PDG ஜான்டேனியல் தனது குடும்பம் சார்ந்த டேனியல் அறக்கட்டளை மூலம் ரூ.12 லட்சம் மதிப்பில் (இது கொல்லம் லோட்டஸ் ரோட்டரி சங்கத்துடன் தொடர்புடையது) கொரோனா பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள போலீஸார், வீடற்றவர்கள். என 650-க்கும் மேலானவர்களுக்கு தினசரி உணவுப் பொட்டலங்களும், போலீஸார், சுகாதாரப் பணியாளர்களுக்கு முகக் கவசங்கள், கையுறைகள், கிருமி நாசினிகள் வழங்குவது போன்ற நிவாரணப்பணிகளைச் செய்து வருகின்றனர் என்று கூறினார் கேசவன்.

மொத்தத்தில் முகக்கவசங்கள் அணிவது, சமூக இடைவெளியைப் பின்பற்றுவது, தனிமைப்படுத்தலின் முக்கியத்துவம், நம்மை நாமே தனிமைப்படுத்திக்கொள்வது, வீட்டைவிட்டு வெளியில் செல்லாமல் இருப்பது, கையுறைகள் அணிவது, அவ்வப் போது கைகளை கிருமிநாசினிகள் கொண்டு கழுவுவது என மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் ரோட்டரி சங்கம் முன்னிலை வகிக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.■

# இனி எல்லாமே காணொலி காட்சி மூலம்தான்!

2019–20ஆம் ஆண்டுக்கான ரோட்டரி இன்டர்நேஷனல் நிர்வாகக் குழு கூட்டம் மார்ச் மாத நடுவிலும் ஏப்ரல் மாதத்திலும் விடியோகான்பரன்சிங் மூலம், அதாவது காணொலி காட்சி மூலம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் 10 குழுக்களின் அறிக்கைகள் ஆய்வு செய்யப்பட்டு, சுமார் 36 தீர்மானங்கள் பதிவுசெய்யப்பட்டன.

கரோனா தொற்று பரவலாக உள்ள நிலையில் ரோட்டரி உறுப்பினர்களின் உடல்நலம் மற்றும் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிப்பதென நிர்வாகக்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. கரோனா தொற்று அபாயம் காரணமாக ஒரே இடத்தில் அதிகம்பேர் கூடவேண்டாம் என உள்ளூர் நிர்வாகம் எச்சரித்துக்கும் நிலையில் அதைப் பின்பற்றி மாவட்ட சங்கங்கள் செயலாற்றவும் முடிவு செய்யப்பட்டது.

ரோட்டரி மாவட்டங்கள் PETS உள்ளிட்ட பயிற்சிகளையும், வேறு முக்கிய நிகழ்வுகளையும் வருகிற ஜூன் மாதம் 30ஆம் தேதிக்குள் ஆன்லைன் மூலம் நடத்துமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டன. ரோட்டரி செயல் திட்டங்களை வகுப்பது, அதில் பங்கேற்பவர்களின் பணிகள் குறித்து விவாதிப்பது, இந்த ஆண்டுக்கான குறிக்கோள் என்ன என்பதை விவாதித்து முடிவு செய்யவும், இத்தகைய கூட்டங்களை ஆன்லைன் மூலம் நடத்தவும் வலியுறுத்தப்பட்டது.

தங்களின் மாவட்ட மாநாட்டை ரோட்டரி மாவட்டங்கள் அரசின் நடவடிக்கைகளுக்கு ஏற்ப மாவட்டத் தலைவர்களின் பரிந்துரையின் பேரில் ஜூன் 30-வரை நிறுத்திவைக்கவோ அல்லது ரத்துச் செய்யவோ முடிவு எடுக்கலாம்.

ஹோனலூலுவில் நடைபெற இருந்த ரோட்டரி சர்வதேச மாநாடு ரத்துச் செய்யப்பட்டதை அடுத்து, இந்த மாநாட்டில் பங்கேற்க இருந்த ரோட்டரி உறுப்பினர்களின் பதிவுக் கட்டணம், பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்கான கட்டணங்களைத் திருப்பித்தர முடிவு செய்யப்பட்டுள்ளது. எனினும் ஜூன் மாதம் 20 முதல் 26-ம் தேதிக்குள் ரோட்டரி சர்வதேச மாநாட்டை காணொலி காட்சி மூலம் (விடியோகான்பரன்சிங்) சிறப்பான முறையில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

RI நிர்வாகக்குழு கூட்டம் உள்ளிட்ட அனைத்து குழு கூட்டங் களையும் இந்த ஆண்டு இறுதி வரை ஆன்லைன் மூலம் அதாவது விடியோகான்பரன்சிங் மூலம் நடத்தப்படும். 2012-ஆண்டு நடைபெற உள்ள சர்வதேச கூட்டத்துக்கு 40 சதவீதம் மேலான DGEs நேரில் பங்கேற்க முடியாத சூழ்நிலை உருவானால், அந்தக் கூட்டமும் விடியோகான்பரன்சிங் மூலம் நடைபெறும்.

மண்டல பயிற்சி நிலையங்கள், பிராந்தியத் தலைவர்களுக்கான பயிற்சிகள், கருத்தரங்குகள் உள்ளிட்டவை அனைத்தும் இந்த ஆண்டு ஆன்லைன் மூலமாகவோ அல்லது விடியோகான்பரன்சிங் மூலமாகவோ நடைபெறும். இந்தக் கூட்டங்களை நேரிடையாக நடத்துவதா அல்லது விடியோகான்பரன்சிங் மூலம் நடத்துவதா என்பதை ரோட்டரி பயிற்சிநிலைய அமைப்பாளர்கள் முடிவுசெய்வார்கள்.பொதுச் செயலாளர் ஒப்புதல் அளித்தாலன்றி இதுபோன்ற பயிற்சித் திட்டங்களில் ரோட்டரி ஊழியர்கள் எவரும் நேரில் கலந்துகொள்ளக்கூடாது என்று தெரிவிக்கப்படுகிறது.

இயக்குநர்கள் தங்கள் மண்டலம் அல்லது பிராந்தியத்துக்கு வெளியே நடைபெறும் நிகழ்ச்சி களில் பங்கேற்றால் அதற்கான செலவை ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர் ஒப்புதல் இல்லாமல் வழங்கமுடியாது. இதேபோல 2020–2021 மாவட்ட கூட்டங்களில் RI தலைவரின் பிரதிநிதியாக பங்கேற்பவர்களுக்கும் நிதியளிக்கப்படமாட்டாது. RIPR வேண்டும் என்று மாவட்ட சங்கங்கள் வேண்டுகோள் விடுத்தால் RI தலைவர் ஒருவரை நியமிப்பார்.

இளம் ரோட்டரியினரில் சேவையை அங்கீகரிக்கும் வகையில் அவர்களுக்கு சுயநலமற்ற சேவை விருது வழங்கும் வகையில் நிர்வாகக்குழு கூட்டத்தில் கொள்கை முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதேபோல குறிப்பிடத்தக்க சேவை செய்துள்ள ரோட்டரி சங்கங்களுக்கும் விருது வழங்குவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

2021ஆண்டு ஜூலை முதல் தேதி வரை ரோட்டரி சர்வதேச விருது வழங்கும் திட்டத்தை நிறுத்திவைக்க நிர்வாகக்குழு கூட்டத்தில் முடிவு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.■

# சவாலான நேரத்தில் ரோட்டரி சங்கங்களின் சமூகப்பணி!

ஜெய்ஸ்ரீ

கொரோனா தடுப்பு நடவடிக்கையாக அமல்படுத்தப்பட்ட ஊரடங்கில் RID 3190 ரோட்டரி சங்கத்தினர், சவாலான நேரத்தில் கர்நாடகத்தில் உள்ள ஏழைகள், நோயாளிகள், வெளிமாநிலத் தொழிலாளிகளுக்கு பல்வேறு வழியிலும் உதவிக்கரம் நீட்டி சமூகப்பணியாற்றியுள்ளனர். ரோட்டரியினர் ஒன்றுதிரண்டு ரூ.1.1 கோடி நிதி திரட்டியதுடன், 6.7 லட்சம் உணவுப் பொட்டலங்கள், 15 லட்சம் கிலோ ரேஷன் பொருள்கள், ரூ.35 லட்சம் மதிப்பிலான மருத்துவக் கருவிகள், 1.3 லட்சம் மருந்துப்பொருள்களை விநியோகித்து சாதனை படைத்துள்ளனர்.

மாரத்தஹள்ளி, வர்தூர் மற்றும் மடிவாளா பகுதிகளில் பாதிக்கப்பட்ட 15,000 வெளிமாநிலத் தொழிலாளர்கள் குடும்பங்களுக்கு பெங்களூர் மேற்கு ரோட்டரி சங்கத்தினர் கோல்டுமேன் சாச்சஸ் உடன் இணைந்து நிவாரண உதவிகள் வழங்கியுள்ளனர். பத்து நாளில் ரூ.1.6 கோடி மதிப்புள்ள 225 டன் உணவுப்பொருள்களை நாங்கள் விநியோகித்துள்ளோம் என்று பெருமையுடன் குறிப்பிடுகிறார் PDG ராஜேந்திர ராய். ஒவ்வொருவருக்கும் 10 கிலோ அரிசி, பருப்பு, கோதுமை, சமையல் எண்ணெய், வாசனைப் பொருள்கள் உள்ளிட்ட அத்தியாவதியப் பண்டங்கள் ஒரு பையில் போடப்பட்டு தொகுப்பாக வழங்கப்பட்டது. பெங்களூர் கப்பிள்ஸ் ரோட்டரி சங்கத்துடண் இணைந்து செயல்பட்டு, நுகாரொனா தொற்று தொடர்பான இலவச பரிசோதனைக்காக ரூ.11 லட்சம் மதிப்பில் 1,000 கொரொனா தொற்று பரிசோதனைக் கருவிகள் ரங்கதோர் நினைவு மருத்துவமனைக்கு வழங்கப்பட்டது. ஏழைகள் இவற்றை தனியாக செய்துகொள்வதாக இருந்தால் அதற்காக அவர்கள் ரூ.4.500 வரை செலவிட வேண்டியிருக்கும் என்றார் ராய்.

இவை தவிர கொரொனா



*ட்ரோன் பற்றி* Rtn M V *ஹர்ஷா போலீஸ் கமிஷனர் பாஸ்கர் ராவிடம் விளக்குகிறார்.* RID 3190 *துணை கவர்னர்* V G *கிரண்குமார் அவர்களும் (வலதிலிருந்து 2வது) உடன் உள்ளார்.*

நோய் தொற்று என்றால் என்ன, அவை தாக்கியதற்கான அறிகுறிகள் என்னென்ன, நோய் தாக்காமல் இருக்க என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் துண்டுப்பிரசுரங்களும் வெளியிடப்பட்டன.

இந்திராநகர் ரோட்டரி சங்கத்தினர் XLRI அலுமினி குரூப் மற்றும் குளோபல் SME ஹப் ஆகியவற்றுடன் இணைந்து ரூ.6.5 லட்சம் மதிப்பில் 70,000 பேருக்கு உணவுப் பொருள்களையும் வழங்கியுள்ளனர். பின்னர் பல்வேறு இடங்களில் நிதி திரட்டி மருத்துவர்கள், செவிலியர்களுக்குத் தேவையான பாதுகாப்பு கவச உடைகளையும், இதர கருவிகளையும் வழங்கியுள்ளனர். பிரதமரின் PM CARES நிவாரண நிதிக்கு ரூ.20 லட்சம் நன்கொடை கொடுத்துள்ளனர். கன்ஷியாம் அகர்வால் என்ற உறுப்பினர் மட்டும் ரூ.15 லட்சம் நன்கொடை அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது. கடந்த மார்ச் மாதம் கொரோனா தொற்று உச்சக் கட்டத்தில் இருந்தபோது கன்ஷியாம் AKS உறுப்பினராகி ரோட்டரி அறக்கட்டளைக்கு ரூ.1.4 கோடி நிதி கொடுத்ததை சங்கத்தின் தலைவர் மனோஜ் அகர்வால் தெரிவித்தார். தங்கள் சங்கம் வேறு நான்கு சங்கங்களுடன் இணைந்து பரிசோதனை மையத்துக்கு ரூ.17 லட்சம் மதிப்பில் பரிசோதனைக் கருவிகள் வாங்கி நன்கொடையாக அளித்ததையும் அவர் சுட்டிக் காட்டினார்.

விளைச்சல் அதிகம் இருந்த போதிலும் விவசாயிகள் ஊரடங்கு நேரத்தில் பொருள்களைக் கொண்டு செல்ல போக்குவரத்து வசதி இல்லாததால் அவற்றை விற்கமுடியாமல் விரக்தியில் இருந்த நிலையில் பெங்களூர் மன்யாதா ரோட்டரி சங்கத்தினர், புத்திசாலித் தனமாக கோலாரில் உள்ள விவசாயி களிடமிருந்து காய்கறி, பழங்களை கொள்முதல் செய்து ஏழைகளுக்கு விநியோகித்தனர் என்று பெங்களூர் கல்யாண் ரோட்டரி சங்க உறுப்பினர் ஜான் டேனியல் தெரிவித்தார்.

ஏழைகள், பாதிக்கப்பட்டவர்களுக்கு ரோட்டரி சங்கங்கள் உதவிவந்த நிலையில், ரோட்டரி உறுப்பினரான



M V ஹர்ஷா, பெங்களூர் மாநகர போலீஸ் கமிஷனர் பாஸ்கர ராவ் மற்றும் கூடுதல் DGP P S சாந்து இவர்களின் உதவியுடன் கொரோனா வைரஸ் தாக்குதல் உள்ள பகுதிகளில் விதிகளை மீறி யாராவது வெளியில் சுற்றுகின்றனரா என்பதை டிரோன்கள் மூலம் கண்காணிக்க ஏற்பாடு செய்தார்.

வித்யாரண்யபுரம், வித்யாபீடம், பெங்களூர் கிரீன் சிட்டி C-கிளப் கோலார், பெங்களூர் ஜங்ஷன் ரோட்டரி சங்கத்தினர் தங்கள் பகுதி களில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொருள்களை வழங்கினர்.

RC பெங்களூர் சார்பில் ரோட்டரி பெங்களூர் வித்யாலயா பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டு வந்தது. ஊரடங்கால் பள்ளிகள் இயங்காததால் அதற்காகும் செலவுதொகையைக் கொண்டு ஏழைகளுக்கு நிவாரண உதவிகளை வழங்கினர். இதேபோல நகரில் உள்ள முதியோர் இல்லத்துக்கும் உதவிகள் வழங்கப்பட்டன. விலங்குகளுக்கும் உணவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு ஆம்புலன்ஸ் மூலம் தொண்டர்கள் உதவியுடன் தெருவில் சுற்றித்திரியும் ஆடு, மாடு, நாய்களுக்கு உணவுகள் வழங்கப்பட்டன.

பெங்களூர் சோஷியல் சங்கத்தின் 33 புதிய உறுப்பினர்களுக்கு DG சமீர் ஹரியானி, விடியோ கான்பரன்சிங் மூலம் பதவிப்பிரமாணம் செய்து வைத்ததுடன் அவர்களுக்கு சான்றிதழ்களை மின்னஞ்சல் மூலம் அனுப்பிவைத்தார்.

பெங்களூர் மாவட்டத்தில் உள்ள 130 ரோட்டரி சங்கங்களைச் சேர்ந்த 5,200 உறுப்பினர்கள் தனியாகவும் ஒன்று சேர்ந்தும் வயதானவர்கள், நோயாளிகள், ஏழைகளுக்கு நிவாரண உதவிகளை செய்தது மறக்கமுடியாதது என்கிறார் மாவட்ட ஆளுநர் சமீர். ■

# தமிழ்நாட்டில் நிவாரணப் பணிகள் விரைவாகின்றன

V முத்துக்குமரன்

தமிழ்நாட்டில் COVID-19 நிவாரணப் பணிகள் விரைவடையத் தொடங்கியுள்ளன. இங்குள்ள மாவட்ட ஆளுநர்கள் பிராந்தியக் கூட்டங்களை நடத்துகிறார்கள், அந்தந்தச் சங்க அளவில் நிவாரணப் பணிகளைக் கண்காணிக்கப் பொறுப்பேற்றிருக்கும் தங்களுடைய துணை ஆளுநர்களுடன் ஒருங்கிணைந்து பணிபுரிகிறார்கள்.

மருத்துவர்கள், நலப் பராமரிப்பு ஊழியர்கள், தூய்மைப் பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு N-95 மற்றும் அடிப்படை முகமூடிகளைப் போர்க்கால அடிப்படையில் வழங்கும்படி 19 பிராந்தியங்களில் உள்ள 114 சங்கங்களுக்கும் அறிவுறுத்தியுள்ளார் DG N மணிமாறன், RID 2981. இதுவரை, அரசு மருத்துவமனைகளில் உள்ள மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பிற ஊழியர்களுக்கு நாங்கள் 10,000 N-95 முகமூடிகளை விநியோகித்திருப்போம், சாலையோர மற்றும் காய்கறி விற்பனையாளர்கள் உள்ளிட்ட பொதுமக்களுக்கு 50,000 அடிப்படை முகமூடிகளை விநியோகித்திருப்போம்'' என்கிறார் மணிமாறன்.

தூய்மைப் பணியாளர்கள், உள்ளூர்ச் சந்தைகளில் உள்ள விற்பனையாளர்கள், நலத்



*RC விருதாச்சலம் தலைவர் A தீபக் சந்த் மற்றும் சங்கத்தினர் போலீஸ் அதிகாரிகளுக்கு உடல் வெப்பநிலையை பரிசோதனை செய்கின்றனர்.*

தன்னார்வலர்கள் மற்றும் சுகாதார ஊழியர்களுக்கு 10,000க்கும் மேற்பட்ட கை தூய்மைப்படுத்திகள் வழங்கப்பட்டுள்ளன.

இன்னும் பெரிய அளவில், காவல்துறையினர், கூலித் தொழிலாளர்கள், நலப்பராமரிப்பு பணியாளர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் விநியோகிக்கப் பட்டன, ஊரடங்கு நீக்கப்படும்வரை இது தொடரும் என்றார் அவர்.

### வீட்டு வாசலில் மளிகைச்சாமான்

தமிழ்நாடு முழுவதுமுள்ள ரோட்டரியன்கள் தன்னார்வலர் குழுக்களுடன் கை கோத்து காய்கறிகளையும் நியாயவிலைக் கடைகளில் கிடைக்கும் உணவு தானியங்களையும் குடிமக்களுடைய வீட்டு வாசலுக்கே கொண்டுபோய்ச் சேர்க்கிறார்கள்.

15 வென்டிலேட்டர்களை (செயற்கை மூச்சுவிடல் கருவிகளை) வாங்குவதற்காக ஒரு பன்னாட்டு நல்கைக்கு விண்ணப்பித்துள்ளது RID 2981. இவை எங்களுக்குக் கிடைத்ததும் மாவட்ட மருத்துவமனைகளுக்கு வழங்கப்படும்.

RC மன்னார்குடி, RID 2981, வட இந்தியாவைச் சேர்ந்த, இரும்பு வேலை செய்கிற தொழிலாளர்களுடைய 15 குடும்பங்களை ஒரு திருமண மண்டபத்தில் தங்கவைத்துள்ளது, அவர்களுக்கு நாள்தோறும் மூன்று வேளையும் உணவு வழங்கப்படுகிறது என்றார் DGE பாலாஜி பாபு.

ராஜஸ்தானைச் சேர்ந்த ஐம்பத்தாறு கலைஞர்கள் பிளாஸ்டர் ஆஃப் பாரிஸில் சிலைகள், பிற பொருட்களைத் தயாரித்துவந்தார்கள். இவர்களில் பெண்கள், குழந்தைகளும் உண்டு, ஊரடங்குக்குப்பிறகு, இவர்கள் சாலையோரத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். அவர்கள் இப்போது ஒரு கோயிலில் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள்; RC விருத்தாசலம் அவர்களுக்கு உணவளிக்கிறது'' என்கிறார் பாபு.

COVID-19 பெருந்தொற்றுக்கு எதிரான போரில் சேலத்திலுள்ள 20 சங்கங்களும் ஒன்றாகச் செயல்படுகின்றன என்கிறார் DG A K நடேசன், RID 2982. இவர்கள் அரசு மருத்துவமனையிலுள்ள 400க்கும் மேற்பட்ட நோயாளிகளுக்கு உணவளிக்கிறார்கள்; மக்களுடைய வீடுகளில் முகமூடிகளை விநியோகிக்கிறார்கள்; இந்த வைரஸ் தொற்றியிருப்பதாக ஐயம் எழுந்துள்ளவர்களுடைய தரவுத் தளமொன்றைத் தயாரிக்கிறார்கள்; இவர்கள் திரட்டும் தகவல்கள் அரசுக்கு வழங்கப்படும்'' என்கிறார் DG.

டாக்டர் மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவ மனையின் கண்காணிப்பாளர் டாக்டர் தனபால் அவர்களுடைய ஒரு கோரிக்கையைத் தொடர்ந்து, ரூ.7 லட்சம் மதிப்புள்ள, மின்சாரப் பேட்டரியால் இயங்கும் மருத்துவ உதவி வண்டி (ஆம்புலன்ஸ்) ஒன்றை ரோட்டரி நன்கொடையாக வழங்கும், இது DDFலிருந்து வழங்கப்படும்.

பல மாவட்டங்களைச் சேர்ந்த ஏழு அரசு மருத்துவமனைகளுக்கு 1,000 PPE பொதிகளை (COVID-19க்கு எதிரான பாதுகாப்பு ஆடைகளை) RID 2982 வழங்கும். இத்துடன், மருத்துவர்கள், துணை மருத்துவ வல்லுனர்களுக்கு 500 N-95 முகமூடிகள், தூய்மைப் பணியாளர்கள், நலத் தன்னார்வலர்கள், விற்பனையாளர்கள் மற்றும் பிறருக்கு 10,000 மூன்றடுக்கு முகமூடிகள் வழங்கப்படும்.

RC கொமாரப்பாளையம் நகராட்சி அலுவலர்கள் மற்றும் பாதுகாவல் குழுவினருக்கு 1,000 முகமூடிகளை நன்கொடையாக வழங்கியுள்ளது. கொரோனா நோயாளிகளுக்கான தனிமைப் பகுதிகளில் வென்டிலேட்டர்கள் தேவைப்படுகின்றன என்று மாநில நலத் துறையைச் சேர்ந்த மூத்த அலுவலர் ஒருவர் கோரினார்; இதைத் தொடர்ந்து நாங்கள் 10



RID 3000, DG A *ஜமீர் பாஷா,* PDG R *சண்முக சுந்தரம் (இடதிலிருந்து 2வது) மற்றும் மாவட்ட செயலாளர்* D *திருநாவுக்கரசு (வலதிலிருந்து 3வது) மதுரை ராஜாஜி மருத்துவமனைத் தலைவர்* J *சங்குமணியிடம் பாதுகாப்பு கவசங்களை வழங்குகின்றனர்.*

# பழங்குடியினர், இடம் பெயர்ந்த பணியாளர்களுடைய பசியை விரட்டிய RC பாண்டிச்சேரி காஸ்மோஸ்

கிரண் ஜெஹ்ரா



மார்ச் 25ல் முடக்கம் அறிவிக்கப்பட்டவுடன், RC பாண்டிச்சேரி காஸ்மோஸ், RID 2982, செயலில் இறங்கியது, இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மகள், நலிந்த பின்னணியிலிருந்து வருகிற கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள், கவனிக்கப்படாத முதியவர்கள், மாற்றுத் திறனாளிகளைத் தேடிக் கண்டறியத் தொடங்கியது. ஆபத்துக்கு ஆளாகிற, ஊட்டச்சத்துக் குறைபாடு கொண்ட சமூகங்களுக்குக் கொரோனாவைரஸ் தொற்றுகிற ஆபத்து மேலும் கூடுதலாக உள்ளது'' என்றார் சங்கத் தலைவர் A செந்தில்.

தூய்மைப் பணியாளர்கள், ரோந்துக் கடமையில் ஈடுபட்டிருந்த காவல்துறை ஊழியர்கள், உணவு வழங்கல் மையங்களில் உணவுப் பொட்டலங்களைப் பெறுவதற்காக வரும் மக்களுக்கு ரோட்டரியன்கள் முகமூடிகள், தூய்மைப்படுத்திகளை விநியோகித்தார்கள்.

உணவுப் பொட்டலங்களுக்கான வரிசையில் நரிக்குறவர் ஒருவர் நிற்பதைக் கண்ட சில ரோட்டரியன்கள், அவர் எங்கிருந்து வருகிறார், அவருடைய சமூகத்தைச் சேர்ந்த மற்றவர்கள் எங்கு உள்ளார்கள் என்று விசாரித்தார்கள். இரண்டு பொட்டலம் உணவை அவர் 12 பேர் கொண்ட ஒரு குடும்பத்துடன் பகிர்ந்துகொள்ளப்போகிறார் என்று கேள்விப்பட்டு நாங்கள் அதிர்ந்தோம்.

உடனடியாக, அவருடைய சமூகத்தினருக்கு உணவு வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன; ECR பாண்டிச்சேரி நெடுஞ்சாலைக்கு அருகில் வாழும் இந்தப் பழங்குடிச் சமூகத்துக்கு இந்தச் சங்கம் தொடர்ந்து உணவுப் பொட்டலங்களை வழங்கிவருகிறது. இப்போது, இவர்களுக்கு உணவுப் பொட்டலங்களைக் கொண்டுவரும் தன்னார்வலரான அசோக்கைப் பழங்குடியினக் குழந்தைகள் "முகமூடி மாமா" என்று அழைத்து மகிழ்கிறார்கள்.

சங்க மேலாளர் சிவக்குமாருடைய வீட்டில் சமூகச் சமையலறை அமைக்கப் பட்டுள்ளது. ராஜீவ் காந்தி அரசுப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் சிக்கித்தவித்த சுமார் 150 பேருக்கு, எங்கள் சங்க உறுப்பினர்கள் தயாரித்த வீட்டு உணவை நாங்கள் வழங்கினோம். அவர்களில் பெரும்பாலானோர் அக்கம்பக்கத்து மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள், ரயில் வண்டிகள், பேருந்துகள் ஓடாததால் அவர்களால் தங்கள் இல்லங்களுக்குத் திரும்பிச்செல்ல இயலவில்லை.

இடம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கு வெறுமனே முகமூடிகள், உணவுப் பொட்டலங்களை வழங்குவதைத் தாண்டித் தன்னுடைய சங்கத்தால் வேறு ஏதேனும் செய்ய இயன்றால் நன்றாக இருக்குமே என்று விரும்புகிறார் செந்தில். இவர்களுக்கான தங்குமிடம் ஏற்பாடு செய்யப்படாததால், இவர்களில் பலர், தங்களுடைய வீடுகளுக்கு நடந்தே செல்லத் திட்டமிட்டுள்ளார்கள். இது அவர்களுடைய உயிருக்குப் பெரிய ஆபத்தாகிறது.

முடக்கம் நிறைவடையும்வரை, தூய்மைப் பணியாளர்களுக்குக் காலை உணவு மற்றும் முகமூடிகளை வழங்க இந்தச் சங்கம் திட்டமிட்டுள்ளது. மற்ற ரோட்டரி, ரோட்ராக்ட் சங்கங்களும் இந்த முயற்சியில் இணைந்துள்ளன. RC பாண்டிச்சேரி மிட்-டவுன் CMன் உதவி நிதிக்கு ரூ.1 லட்சத்துக்குமேல் வழங்கியுள்ளது.

வென்டிலேட்டர்களைப் பெறுவதற்கு முயன்றுகொண்டிருக்கிறோம்'' என்கிறார் டாக்டர் நடேசன். வைரஸுக்கு எதிரான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, மால்கள், பேருந்து முனையங்கள், ரயில்வே நிலையங்கள், காய்கறிச் சந்தைகள், பிற கூட்டமான இடங்களில் குறைந்தது 200 கை கழுவுகிற, தூய்மைப்படுத்துகிற நிலையங்களையும் இவர்கள் நிறுவுவார்கள்.

12 பிராந்தியங்களில் 68 சங்கங்களைக் கொண்ட இந்த மாவட்டத்தின் கொரோனாவைரஸுக்கு எதிரான நிவாரணப் பணிகளை வழக்கமான பிராந்தியக் கூட்டங்கள் கண்காணிக்கின்றன. சூழ்நிலையை ஆராய்வதற்காக நடத்தப்படும் இந்தக் கூட்டங்கள் வீடியோ கருத்தரங்கு முறையில் நடத்தப்படுகின்றன.

நான் ஏற்கெனவே என்னுடைய அளக்களுடன் மூன்று வீடியோ கருத்தரங்குகளை நடத்தியுள்ளேன்; இதன்மூலம், பெருந்தொற்றுக்கு



RC விருதாச்சலம் தலைவர் A தீபக் சந்த் மற்றும் சங்கச் செயலாளர் மணிகண்டன் ராஜஸ்தானிலிருந்து வந்துள்ள தொழிலாளர்களுக்கு உணவு பொட்டலங்கள் வழங்குகின்றனர்.

எதிரான நிவாரண முயற்சிகள் செயலுக்கு வந்துள்ளன; பரப்புரைகள், நிவாரணப் பொருட்களை வழங்குதல் உள்ளிட்ட இன்னும் பல படிநிலைகள் எடுக்கப்படவுள்ளன'' என்கிறார் டாக்டர் நடேசன்.

ஓசூர் பகுதியில் சில தொழிற் சாலைகள் மூடப்பட்டுள்ளன; ஆனால், அங்கு பணிபுரிந்துவந்த வெளியூர்த் தொழிலாளர்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் அந்தத் தொழிற் சாலை வளாகங்களிலேயே தங்கிக் கொள்ளலாம் என்று அந்தத் தொழிற் சாலைகளின் உரிமையாளர்கள் அனுமதித்துள்ளார்கள். இந்தத் தொழிலாளர்களில் சிலருக்கு ஓசூரிலுள்ள சங்கங்கள் முகமூடிகள், கை தூய்மைப்படுத்திகள் மற்றும் அன்றாட உணவை அளிக்கின்றன என்று தொடர்ந்து குறிப்பிட்டார் அவர்.

ஊரடங்கால் மிகக் கடுமையாகப் பாதிப்புக்குள்ளாகியுள்ள வெளியூர் ஊழியர்களுக்கு உணவுப் பொட்டலங் களை வழங்கும்படி சங்கங்கள், ரோட்டரியன்களுக்கு அறிவுறுத்தி யுள்ளார் DG டாக்டர் A ஜமீர் பாஷா, RID 3000. சேரிகள், வெளியூர் மக்கள் வாழும் பகுதிகளில் உணவுப் பொட்டலங்களை வழங்குவதற்காக 100க்கும் மேற்பட்ட ரோட்டரியன்கள் களத்தில் உள்ளார்கள். அவர்களுடைய பணியை 28 அளக்கள் கண்காணிக் கிறார்கள், இவர்கள் இந்தச் செயல்பாடுகளைப் பகுதி ஒருங்கிணைப்பாளர்கள் ஏழு பேருக்கு அறிக்கைமூலம் தெரிவிக்கிறார்கள். சராசரியாக, நாங்கள் எட்டு வருவாய் மாவட்டங்களில் 2,500 உணவுப் பொட்டலங்களை விநியோகிக்கிறோம்'' என்றார் மாவட்டப் பொதுச் செயலாளர் D திருநாவுக்கரசு.

## PPE பொதிகள், தூய்மைப்படுத்திகள், முகமூடிகள்

இந்தப் பகுதியில் உள்ள எட்டு அரசு மருத்துவமனைகளுக்கும் தலா 10 ஐந்து-லிட்டர் தூய்மைப்படுத்தி கேன்கள் மற்றும் 5,000 முகமூடிகளை மாவட்டச் சங்கங்கள் வழங்குகின்றன. திருச்சி மற்றும் மதுரையில் உள்ள 10 தனிமைப்படுத்தல் பிரிவுகளுக்கும் 500 PPE பாதுகாப்பு ஆடைகளையும் நாங்கள் வழங்குகிறோம்'' என்கிறார் DG பாஷா. மாவட்டச் சங்கங்கள் நாள்தோறும் செய்கிற நிவாரணப் பணிகளைப்பற்றி, மாவட்டப் பொதுச் செயலாளர், நிர்வாகச் செயலாளரான ஜஸ்பெர்ட் சிங் சோனு ஆகிய இருவரும் DG பாஷாவுக்குத் தெரிவிக்கிறார்கள்.

இத்துடன், TRFஇடமிருந்து ரோட்டரி பேரிடர் எதிர்வினை நல்கையின்கீழ் 25,000 பன்னாட்டு நல்கையொன்றுக்கும் விண்ணப்பம் செய்துள்ளார் DG பாஷா. இந்தத் தொகை வழங்கப்பட்டதும், நாங்கள் 25 வென்டிலேட்டர்கள், கூடுதல் PPE பொதிகளை வாங்குவோம், இந்தப் பகுதியில் அவற்றுக்கு மிகப்பெரிய தேவை உள்ளது'' என்கிறார் டாக்டர் பாஷா.

## ஒலிச் செய்தி

DG பாஷா தன்னுடைய ஒலிப்பதிவுச் செய்தியொன்றைக் குழுவினருக்கு அனுப்பிவைத்துள் ளார்; நகராட்சி கள் மற்றும் பஞ்சாயத்துகளில் குப்பை அகற்றுவதற்காகப் பயன்படுத்தப்படும் மினி-ட்ரக்குகளில் பொருத்தப் பட்டுள்ள பொது அறிவிப்பு அமைப்புகளின்வழியாக இது ஒலிபரப்பப்படுகிறது.

கொரோனாவைரஸுக்கு எதிரான ஒலிச் செய்தியானது, தனித்திருத்தலை, சமூக விலகலைப் பராமரித்தல், மக்களைப் பாதுகாப்பாகக் கவனித்துக் கொள்வதற்காக வலியுறுத்தப்படும். இது 150 பென் டிரைவ்களின்வழியாகச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது'' என்கிறார் DG.■

# இடம் பெயர்ந்தவர்களுடைய குடும்பங்களுக்கு உணவளித்து ஊக்கப்படுத்தும் ரோட்டரி சங்கங்கள்

கிரண் ஜெஹ்ரா



RC ஜபல்பூர் சவுத் உறுப்பினர்கள் வீடு வீடாகச் சென்று உணவு வழங்குகின்றனர்.

பெண் உழைப்பாளர் ஒருவர் தன்னுடைய ஆறு மாதக் குழந்தையைத் தூக்கிக்கொண்டு தில்லியிலிருந்து மதுரா அருகிலிருக்கும் தன்னுடைய கிராமத்தை நோக்கி நடக்கின்ற காட்சியைக் கண்டார்கள் RC ஃபரீதாபாத் சன்ஸ்கார், RID 3011 தலைவர் ரஜித் குப்தாவும் அவருடைய குழுவினரும். நெகிழ்ந்துபோன அவர்கள், முடக்கத்தின் போது ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்குச் செல்லும் இடம்பெயரும் தொழிலாளர்களுக்கு உணவளிப்பதற்காக ஒரு சமூகச் சமையலறையை அமைத்தார்கள்.

தேவையான அனைத்து முன்னெச்சரிக்கைகளுடன் தூய்மையான முறையில் உணவு தயாரிக்கப்பட்டது, பொட்டலமாக்கப்பட்டது. இந்தச் சமையலறைக்காகச் சுமார் ரூ.7 லட்சம் செலவிடப்பட்டது. இடம் பெயரும் தொழிலாளர்கள் அனைவரும் ஃபரீதாபாதிலிருந்து செல்லும்வரை நான்கு நாட்களுக்கு உணவுப் பொட்டலங்கள், ரொட்டி ஆகியவை வழங்கப்பட்டன, என்கிறார் குப்தா

உணவைப் பெற்றுக்கொண்ட ஒருவர் நன்றியுணர்வுடன் இவ்வாறு கூறினார்: ஒருவேளை எங்கள் உயிர் போகப்போகிறது என்றால், அது சொந்த ஊரில் போகட்டும், அப்போது அழுவதற்காவது அருகில் யாராவது இருப்பார்கள்.

இப்போது, முடக்க நேரப் பணியில் ஈடுபட்டுள்ள காவல்துறையினருக்கான நொறுக்குத்தீனிகளை இந்தச் சங்கம் வழங்கிவருகிறது.

RC தில்லி ஹெரிடேஜ், RID 3011 மற்றும் இதழ்த் தகவல் பணியகம் ஆகியவை இணைந்து, நலன் மற்றும் தூய்மைப் பணியாளர்கள், காவல்துறையினர் மற்றும் ஆபத்துக்கு ஆளாகக்கூடிய பிற குழுக்களுக்கு 50,000 மீண்டும் பயன்படுத்தக்கூடிய முகமூடிகளை வழங்கியது, நல அமைச்சகம், பிற அரசு அமைப்புகளின்வழியாக இவை வழங்கப்பட்டன.

### மன நலனில் கவனம்

மத்தியப் பிரதேசத்தில், RC ஜபல்பூர் சவுத், RID 3261 காவல்துறையினர், நலப் பராமரிப்பு ஊழியர்களுக்கு மதிய உணவுப் பொட்டலங்களை வழங்குகிறது. ஜெயின் பன்னாட்டு வர்த்தக அமைப்பு, ஜெயின் இளைஞர் சங்கம் மற்றும் மதர்ஹூட் போன்ற பிற NGOக்களும் உணவு வழங்கலில் இந்தச் சங்கத்துடன் இணைந்தன.

ஜபல்பூர் அரசு மருத்து வமனையில் உள்ள நல ஊழியர்கள் மற்றும் துணை மருத்துவ ஊழியர்களுக்குப் பாதுகாப்புப் பொதிகளையும் ரோட்டரியன்கள் வழங்கினார்கள். இந்த மருத்துவமனையில் உணவு, முகமூடி, தூய்மைப்படுத்திகள், கையுறைகளுக்குப் பற்றாக்குறை இருப்பதால், மருத்துவமனை ஊழியர்கள், முதியோர் இல்லங்கள், காவல்துறையினருக்கு நாங்கள் தூய்மைப் பொதிகளை வழங்குகிறோம்'' என்கிறார் சங்கத் தலைவர் அகில் மிஷ்ரா. இப்படி

500க்கும் மேற்பட்ட பொதிகள் வழங்கப்பட்டன, செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் இன்னும் 50 பொதிகள் வழங்கப்படும்.

இந்தச் சங்கத்தின் இன்னொரு முயற்சி, "மனிதத்தன்மையுடன் ஒரு தொலைபேசி அழைப்பு". வீட்டுக்குள்ளேயே இருக்கும் மக்களுடைய மன நலப் பிரச்னைகளைத் தீர்க்க இது உதவுகிறது, சமூகங்களில் இந்த நோய்ப் பரவல்பற்றிய விழிப்புணர்வைப் பரப்புகிறது, தூய்மை, சமூக விலகலைப் பராமரிக்க உதவுகிறது.

எங்களுடைய உறுப்பினர்களில் பதினோரு பேர் சேர்ந்து, மன நலன், வீட்டிலேயே தங்கவேண்டிய தேவைபற்றி ஒரு சிறு உரையாடலை எழுதியுள்ளார்கள். நாங்கள் எங்களுடைய தொலைபேசிப் புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு தொடர்பு நபரையும் அழைத்தோம், ஆலோசனை வழங்கினோம், எங்களுடைய பாதுகாப்புத் தூதுவர்களாகும்படி கேட்டுக்கொண்டோம், அதாவது, தங்களுடைய தொடர்பு நபர்களை அழைத்து இதேபோல் பேசும்படி கேட்டுக்கொண்டோம்.

### உணவு தானிய வங்கி

RC ராய்கட் ஸ்டீல் சிட்டி, RID 3261 உருவாக்கிய தானிய வங்கியிலிருந்து, சேரிப்பகுதியில் வாழும் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. அரிசி, கோதுமை, பருப்பு, உலர் மசாலாக் கலவை மற்றும் காய்கறிகளை நாங்கள் திரட்டினோம், ஏழைக் குடும்பங்களுக்கு 400 உலர் உணவுப் பங்கீட்டுப் பொதிகளை வழங்கினோம். முடக்கம் நீக்கப்படும்வரை நாங்கள் இதைத் தொடர்வோம்'' என்கிறார் சங்கத்தின் முன்னாள் தலைவர் ஓம் பிரகாஷ் மோடி.

அரசு மருத்துவமனையில் 1,200 நலிந்த மற்றும் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்காக COVID-19 பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி யொன்றுக்கு ஏற்பாடு செய்தது RC அம்ரித்சர் நார்த், RID 3070, பின்னர், அவர்களுக்கு உணவுப் பொருள் பொதிகள், உணவுப் பொட்டலங்களை வழங்கியது.■

---

TRF உதவியுடன் நன்மை செய்தல்

# ராய்கட்டில் ரோட்டரி புதிய டயாலிசிஸ் வசதியைத் தொடங்குகிறது

ரோட்டரி செய்திக்குழு




Dr *ரஞ்சித் சிங் (வலதிலிருந்து 4வது) சங்கத்தினருடன் டயாலிஸிஸ் மையத்தில்.*

RC ராய்கர் ஸ்டீல் சிட்டி RID 3261, ராய்காட் பாலாஜி மெட்ரோ மருத்துவ மனையில் RC ஆப்பிள் வேலி, RID 5300, அமெரிக்கா மற்றும் TRFஇன் உலகளாவிய மானிய திட்ட உதவியுடன் அதிநவீன டயாலிசிஸ் இயந்திரத்தை நிறுவி யுள்ளது. DG ரஞ்சித் சிங் சைனி மற்றும் கிளப் உறுப்பினர்கள் முன்னிலையில் சத்தீஸ்கரின் உயர்கல்வி அமைச்சர் உமேஷ் நந்த்குமார் படேல், மருத்துவ மனையில் இந்த வசதியை திறந்து வைத்தார். கிளப் தலைவர் பிரீத்பால் சிங் துடேஜா நோயாளிகளுக்கு டயாலிசிஸ் வசதி மானிய விலையில் கிடைக்கும் என தெரிவித்தார்.■

# COVID-19 எதிர்வினை அவசியமான பொருட்களை வழங்கும் ரோட்டராக்ட் குடும்பம்

V முத்துக்குமரன்



COVID-19 பெருந்தொற்றின் சங்கிலியை உடைப்பதற்காக PM நரேந்திர மோடி தேசிய ஊரடங்கை அறிவித்ததிலிருந்து, ஜலந்தர் ஆஸ்டின் கல்வியமைப்புகளின் ரோடராக்ட் சங்கம், RID 3070ன் வழிகாட்டியும் சங்கப் பொறுப்பாளருமான Rtn அஜீத் பால் சிங் நஃப்ரேயும் அவருடைய இரு மகன்களான Rtrகள் ரஞ்சித் சிங் மற்றும் ஜஸ்ஜித் சிங் ஆகியோரும் அதிகாலையிலேயே எழுந்து விடுகிறார்கள், தன்னார்வலர்கள், சமூகப் பணியாளர்களைக் கொண்ட ஒரு குழுவுடன் இணைந்து, ரூப்நகரில் உள்ள வீடுகளுக்குக் காய்கறிகள், பிற அத்தியாவசியப் பொருட்களை வழங்குகிறார்கள்.

இந்தப் பட்டயக் கல்விநிறுவனம் ஏப்ரல் 14வரை மூடப்பட்டுள்ளதால், இங்குள்ள ரோடராக்டர்கள் அனைவரும் வீட்டுக்குச் சென்று விட்டார்கள். எனினும், அதன் இயக்குநரான நஃப்ரே, அவருடைய மகன்கள் சண்டிகருக்கு அருகிலிருக்கும் ரூப்நகரிலுள்ள தங்கள் வீட்டில் சும்மா உட்கார்ந்துவிடவில்லை. நாங்கள் இன்னும் பெரிய தன்னார்வலர்கள் குழுவின் ஒரு பகுதியாகச் செயல்படுகிறோம்; இவர்கள் ஊரடங்கை அமல்படுத்துவதில் மாவட்ட நிர்வாகம், உள்ளூர்க் காவல் துறைக்கு உதவுகிறார்கள். ஏழைக் குடும்பங்கள், வீடில்லாத மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. அதே நேரம், பணம் செலுத்தும் வசதியுள்ளவர்களுக்கு இவை கட்டுப்படியாகக்கூடிய விலையில் வழங்கப்படுகின்றன. ரூப்நகர் குக (தலைமையகம்) சர்தார் ஜக்ஜீத் சிங் ஜல்ஹா எங்களுக்கு ஆதரவளிக்கிறார், வேண்டிய தளவாடங்களுக்கு ஏற்பாடு செய்து ஊக்கப்படுத்துகிறார்'' என்கிறார் RC ஜலந்தர் சிவில் லைன்ஸ் உறுப்பினரான நஃப்ரே.



இதுவரை, இவரே ரூ.11,000 நன்கொடையளித்திருக்கிறார், பல நன்கொடையாளர்கள், ரோட்டரியன்கள் உதவ முன்வந்திருப்பதால், பாதிக்கப்பட்ட குடும்பங்களுடைய தேவைகளை நிறைவு செய்வதற்கான பணத்துக்கோ பொருள்களுக்கோ தட்டுப்பாடு இல்லை என்கிறார்.

## முன்கூட்டியே மேற்கொள்ளப்பட்ட எச்சரிக்கை நடவடிக்கைகள்

ரூப்நகரிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் ஊரடங்கால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள, தேவையிருக்கும் மக்களுக்கு இந்தத் தன்னார்வலர் குழுவினர் நாள்தோறும் 1,000க்கும் மேற்பட்ட தயார்நிலை உணவுப் பொட்டலங்களை வழங்குகிறார்கள்.

ஜனவரி மாதத்தில், அதாவது, வைரஸ் பரவலின் தொடக்கத்தில், சிறப்புத்திறனற்ற பணியாளர்கள், சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் நடைபாதை வியாபாரிகள் உள்ளிட்ட பொதுமக்களுக்கு 1,600க்கும் மேற்பட்ட அறுவைச்சிகிச்சை முகமூடிகளை இந்த ரோடராக்டர்கள் விநியோகித்தார்கள்.

முகமூடிகளை வழங்குவதில் பதினெட்டு ரோடராக்டர்கள் பங்கேற்றார்கள்; நாங்கள் மக்களைச் சந்தித்துப் பேசினோம், அவர்கள் தூய்மைப்படுத்திகளைக் கொண்டு அடிக்கடி கை கழுவவேண்டும், பெருந்தொற்றுக்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று அறிவுறுத்தினோம்'' என்கிறார் இச்சங்கத்தின் பயிற்சியாளரும் இந்தக் கல்வி நிறுவனத்தின் நிர்வாகியுமான தீபிகா சர்மா.■

# ஜிம்பாப்வேயில் ரோட்டரி இந்தியாவின் மருத்துவச் சேவை!

**ரோட்டரி செய்திக்குழு**

நீங்களும் உங்களது இந்திய ரோட்டரி குழுவினரும் ஜிம்பாப்வேயில் உள்ள யுடரே நகரில் (Mutare என்ற ஆங்கிலப் பெயரை இப்படித்தான் உச்சரிக்க வேண்டுமாம்.) செய்த மருத்துவப் பணி மகத்தானது. 3000த்துக்கும் மேலானவர்கள் மருத்துவப் பரிசோதனை செய்து கொண்டுள்ளனர். 1,400க்கும் மேலானவர்கள்பல், காது, மூக்கு, தொண்டை பிரச்னைக்காக சிகிச்சை பெற்றுள்ளனர். 500க்கும் மேலான அறுவைச் சிகிச்சைகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளன. மணிக்காலாண்ட்மாதூ காண மக்களுக்கும கத்தான மருத்துவச் சேவை புரிந்துள்ளீர்கள். அவர்கள் உங்களை வாழ்நாள் முழுக்க மறக்க மாட்டார்கள் இவை ரோட்டரி இண்டர் நேஷனல் தலைவர் மார்க் மலோனி, PRIP ராஜேந்திர சாபூவுக்கு தனிப்பட்ட முறையில் எழுதிய கடிதத்தில் பாராட்டிச் சொன்ன வார்த்தைகள்.

ரோட்டரி இந்தியா, கடந்த பிப்ரவரி மாதம் ஜிம்பாப்வேயில் ஒரு மருத்துவ முகாமை நடத்தியது. 10 நாட்கள் நடைபெற்ற இந்த முகாமுக்கு VTT MEDICAL MISSION என்ற மருத்துவக் குழு அனுப்பி வைக்கப்பட்டது. 20 பேர்கொண்ட மருத்துவக்குழுவில் ரோட்டரி இயக்குநர் டாக்டர் பரத் பாண்ட்யாவும் இடம் பெற்றிருந்தார்.

இந்த மருத்துவ முகாமைப் பார்வையிட ரோட்டரி இண்டர் நேஷனல் தலைவர் மார்க் மலோனி, தமது மனைவி கே உடன் சென்றிருந்தார். 3 நாட்கள் மலோனி தங்கியிருந்தபோது நோயாளிகளைச் சக்கர நாற்காலியில் அறுவைச் சிகிச்சை அரங்கிற்கு அழைத்துச் சென்றது, அறுவைச் சிகிச்சை நடந்து முடிந்தவர்களை வார்டுக்கு அழைத்து வந்தது, அவர்களுக்கு ஆறுதலான வார்த்தை களைக் கூறியது மறக்க முடியாதது என்கிறார் PDG மதுகர் மல்ஹோத்ரா. இவரும்



*PRIP ராஜேந்திர சாபூ அறுவை சிகிச்சை செய்த ஒரு நோயாளியிற்கு உதவுகிறார்.*

அந்த மருத்துவக் குழுவில் இடம் பெற்றவர் தான்.

ஜிம்பாப்வேயில், மணிக்காலாண்ட் மாகாணத்தில் உள்ள யுடரே நகரை கடந்த பிப்ரவரி 26ஆம் தேதி சென்றடைந்தது ரோட்டரி இந்தியா மருத்துவக்குழு. இவர்களை சிடங்விஸா ரோட்டரி சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ரோஸெட்ரோஸ் பீட்டர்ஸ் விமான நிலையத்தில் வரவேற்றார். மருத்துவ உபகரணங்கள், மருந்துப் பொருள்களை சுங்கப் பரிசோதனை முடிந்து துரிதமாக கிடைக்க ஜிம்பாப்வே நாட்டின் சுகாதாரம் மற்றும் குழந்தைகள் நலத்துறை அமைச்சர் டாக்டர் ஜான் மங்க்விரோ பெரிதும் உதவினார்.

இந்த முகாம் நடப்பதற்கு முன்னதாகவே அதாவது, கடந்த ஆண்டு நவம்பர் மாதமே சண்டீகர் ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர் டாக்டர் கரன் சிங், யுடரே நகருக்குச் சென்று அங்குள்ள மருத்துவமனைகள், அவற்றில் உள்ள வசதிகள், அவர்களுக்கு என்ன தேவை என்பது பற்றி துல்லியமாக ஆய்வு செய்தார். அதுமட்டுமல்ல, மருத்துவக் கருவிகளையும் மருந்துப்பொருள்களையும் வரியில்லாமல் கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகளையும் செய்து விட்டுவந்தார்.

யுடரேயில் உள்ள மாகாண மருத்துவமனையில் பொதுவான அறுவைச் சிகிச்சைகளுக்காக இரண்டு டேபிள்கள் போடப்பட்டிருந்தன. இது தவிர காது, மூக்கு, தொண்டை மற்றும் பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சைக்காக ஒருடேபிள் தனியாக போடப்பட்டிருந்தது. மகப்பேறு

*ஜிம்பாவே நாட்டைச் சேர்ந்த 10 சிறுவர்களுக்கு இலவசமாக இதய அறுவைச் சிகிச்சை செய்யத் தயாராக இருப்பதாக ராஜேந்திர சாபூ தெரிவித்ததும், டாக்டர் எல்லன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.*



*RI தலைவர் மார்க் மலோனி ஸ்டரெச்சரை தள்ளுகிறார்.*

மருத்துவக்குழுவினர் செயின்ட் ஜோசப் மிஷன் மருத்துவமனையைப் பயன்படுத்திக் கொண்டனர். டாக்டர்கள் குல்தீப் தாவன் மற்றும் மனோஜ் சர்மா தலைமையிலான குழுவினர் அறுவைச் சிகிச்சை களை நடத்தினர். சில அரிய சிகிச்சைகள் இங்கு முதன்முறையாக நடத்தப்பட்டன.

PDG டாக்டர் G K தக்ரால், அவரது மனைவி டாக்டர் ராஷ்மி தக்ரால் பல் சிகிச்சை நிபுணர்கள் இவர்கள் இருவரும் 1229 பேருக்கு பல் சிகிச்சை அளித்தனர்.

தோல் சிகிச்சை நிபுணரான டாக்டர் வினய் சங்கர், 500க்கும் மேலானவர்களைப் பரிசோதித்து அவர்களுக்குத் தேவையான மருந்து, மாத்திரைகளை இலவசமாக வழங்கினர். தோல் அரிப்பு உள்ளிட்ட பிரச்னைகள் உள்ளவர்களுக்கு ராணுவத்தைச் சேர்ந்த டாக்டர் டொனால்டு, கிரையோஜனிக் தெரபி மூலம் 50 பேருக்கு சிகிச்சை அளித்தார்.

டாக்டர் ஜெகதீப் தாகுர் (ENT), டாக்டர் வி.டி.சிங் (Plastic), டாக்டர் ராஜ்வத் சிங், டாக்டர் தாரங்கைனார் (Orthopaedic), டாக்டர் சுஷில் சைனி, டாக்டர் நிவேதிதா, டாக்டர் பங்கஜ் ஷா (Ophthalmic), டாக்டர் மணீஷா தமானி, டாக்டர் என்.எஸ். சாந்து இருவரும் மகப்பேறு (Gynaecology) மருத்துவர்கள். இவர்களுக்கு மயக்கவியல் மருத்துவ நிபுணர்களான டாக்டர் விகாஸ் தியாகி, டாக்டர் கியான்சந்த், டாக்டர் தாராசிங் மற்றும் டாக்டர் சுரீந்தர்



RID *பரத் பாண்ட்யா, பல் மருத்துவர்* PDG G K *தக்ராலுடன்.*

VTT *குழுவினர்.*



சிங் ஆகியோர் உறுதுணையாக இருந்தனர்.

யுடரே நகர மாகாண மருத்துவமனை டாக்டர்களும் இந்த மருத்துவக் குழுவினருடன் இணைந்து பணியாற்றியதும், அவர்களுக்கு இந்திய மருத்துவர்கள் பலபுதிய தொழில்நுட்பங்களையும், அறுவைச் சிகிச்சை முறைகளையும் சொல்லிக்கொடுத்ததும் இந்த முகாமின் சிறப்பு அம்சமாகும்.

மருத்துவ முகாம் குறித்து கேள்விப்பட்டு பலரும் சிகிச்சைக் காக குவிந்த போதிலும் போதிய மருத்துவ வசதிகள், உபகரணங்கள், மற்றும் நேரமின்மை காரணமாக அவர்களில் பலரை திருப்பியனுப்ப நேர்ந்தது.

இங்குள்ள சகுபா கண் மருத்துவமனையில் உள்ளூர் நிர்வாகத்தினர் புதிய கட்டடம் கட்டிக்கொடுத்தால் மருத்துவ மனைக்குத் தேவையான நவீன கருவிகளை வழங்கத் தயார் என்று டாக்டர் ராஜேந்திர சாபூ அறிவித்தார். இதற்கு மணிக்காலாண்ட் மாகாண விவகாரங்கள் துறை அமைச்சர் டாக்டர் எல்லன் க்வாராட்ஜிம்பா நன்றி தெரிவித்துக் கொண்டார்.



**இடதிலிருந்து:** Dr *குல்தீப் தாவன்,* Dr N S *சத்து,* RID *பரத் பாண்ட்யா,* Dr B D *சிங் மற்றும்* Dr *கரண் சிங்.*

இது தவிர ஜிம்பாவே நாட்டைச் சேர்ந்த 10 சிறுவர்களுக்கு இலவசமாக இதய அறுவைச் சிகிச்சை செய்யத் தயாராக இருப்பதாக ராஜேந்திர சாபூ தெரிவித்ததும், Dr எல்லன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. முகாமில் 500-க்கும் மேலானவர்கள் இலவசமாக அறுவைச் சிகிச்சை பெற உதவியதற்காக மருத்துவக் குழுவினருக்கு தனது பாராட்டுகளையும் அவர் தெரிவித்துக் கொண்டார்.



### VTT மருத்துவக்குழு

ஆப்பிரிக்க நாடுகளில் மருத்துவச் சேவை அளிப்பதற்கான ஏற்பாடு களை 1998 முதலே டாக்டர் ராஜேந்திர சாபூ செய்து வருகிறார். ஒவ்வொரு ஆண்டு ஒன்று அல்லது இரண்டு மருத்துவக் குழுக்கள் ஆப்பிரிக்க நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மறைந்த RIPE ஸாம் ஓவரிக்கு அளித்த உறுதி மொழியின் பேரில் சாபூ இதைச் செய்து வருகிறார். ரோட்டரி இண்டர்நேஷனல் தலைவராக இருந்த பாரி ரஸ்ஸின் ஒருமுறை, ராஜ், மறைந்த ஸாம் கனவை நம்மால் நிறைவேற்ற முடியுமா என்று கேட்டார். அவருக்கு அளித்த வாக்குறுதியை காப்பாற்றுவது நமது கடமை அல்லவா என்று அதற்கு பதில் கூறினார் சாபூ. இப்போது ஆப்பிரிக்காவில் உள்ள ஒவ்வொரு ரோட்டரி மாவட்டத்துக்கும். மருத்துவக் குழுவை அனுப்பத் தயாராகி வருகிறோம் என்கிறார் டாக்டர் ராஜேந்திர சாபூ. அவரின் மருத்துவச் சேவை தொடரட்டும்.■

# RID 3170ல் COVID மீட்புதவியை வழங்கும் TRF நல்கை

கிரண் ஜெஹ்ரா

TRFஇடமிருந்து பேரழிவு எதிர்வினை நல்கையான $25,000ஐப் பெற்ற முதல் மாவட்டங்களில் ஒன்று RID 3170, நல்கைக்கான விண்ணப்பம் செய்து மூன்று நாட்களுக்குள் இந்தத் தொகை இவர்களுக்குக் கிடைத்துவிட்டது.

நல்கை அங்கீகரிக்கப்படுவதற்கு முன்பாகவே, இந்த மாவட்டம் செயலில் இறங்கிவிட்டது, ஹூப்ளியில் உள்ள, COVID-19 சிறப்பு மருத்துவமனையாக மாற்றப்பட்டிருந்த கர்நாடக மருத்துவ அறிவியல் கல்விக்கழகத்துக்கு (KIMS), பட்கலில் வாங்கப்பட்ட ரூ.80,000 மதிப்புள்ள 40 PPE பொதிகளை ரோட்டரி ஹூப்ளி தார்வாட் பேரழிவு மீட்புதவிப் பணிக் குழு மூலமாகக் கிடைக்கச்செய்தது.

TRFன் நல்கை நிதியானது, அரசு மருத்துவமனைகளில் முகமூடிகள், PPEகள், கையுறைகள், தூய்மைப்படுத்திகள், தூய குடிநீர் வழங்குவதற்கும், திருமண மண்டபங்களைத் தாற்காலிக மருத்துவமனைகளாக மாற்றுவதற்கும் பயன்படுத்தப்படும்.

DG கிரீஷ் மசூர்கர், நல்கைத் தொகையை விரைவாக வழங்கி எங்களுக்கு உதவியதற்காக'' RIPN சேகர் மேத்தா, அறங்காவலர் குலாம் வாஹன்வடி, RI இயக்குநர்கள் பரத் பாண்ட்யா மற்றும் கமல் சாங்க்விக்கு நன்றி தெரிவிக்கிறார்.

RC கோல்ஹாபூரின் தலைவரான சூர்யகாந்த் படீல் மற்றும் AG பிரகாஷ் ஜக்டாலே, நகரில் அமைக்கப்பட்டிருந்த முகாம்களில் சிக்கித்தவித்த பொதுமக்கள் மற்றும் இடம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கு உள்ளூர் அலுவலர்களுடைய ஆலோசனையின்படி உணவு மற்றும் அவசியமான பொருட்களை வழங்கினார்கள்.



*கோவாவில் மாவட்ட சுகாதார மையத்திற்கு PPE மற்றும் முக கவசங்கள் RC பனாஜி ரிவியேரா உறுப்பினர்கள் அளிக்கின்றனர்.*




RC *பனாஜி ரிவியேரா அளித்த உணவு பொருட்களுடன் பயனாளிகள்.*

RC பனாஜி ரிவெய்ரா-வைச் சேர்ந்த ரோட்டரியன்கள், பனாஜியில் வசிப்போருக்கு மளிகைப் பொருட்களை வழங்குவதற்காக நகராட்சி அமைப்புடன் பணியாற்றுவதற்குத் தன்னார்வத்துடன் முன்வந்தார்கள், அத்துடன், இடம்பெயர்ந்த உழைப்பாளர்கள், சேரிகளில் வாழ்வோர், HIV பாசிட்டிவ் குழந்தைகள், தெருவில் வாழும் குழந்தைகளைக் கவனித்துக்கொள்ளும் NGOக்கள் மற்றும் முதியோர் இல்லங்களுக்கும் மளிகைப் பொருட்களை வழங்கினார்கள்.

ஒவ்வொரு பெட்டியிலும் 5 கிலோ அரிசி, 4 கிலோ கோதுமை மாவு, பருப்பு, வெங்காயம், உருளைக்கிழங்கு தலா 1 கிலோ, எண்ணெய் 1லிட்டர் கொண்ட மளிகைப் பொருள் பங்கீட்டுப் பெட்டிகள் பனாஜியில் உள்ள 850 குப்பைத் தொழிற்கூடத் தொழிலாளர்களிடையே வழங்கப்பட்டன. ஐக்கிய நாடுகள் முன்னேற்றத் திட்டத்தின் இந்திய அலுவலகம் இந்தச் சங்கத்தின் முயற்சிகளைப் பாராட்டி ட்வீட் வெளியிட்டுள்ளது.

இந்தியச் செஞ்சிலுவை அமைப்பின் கோவா பிரிவுடன் இணைந்து அடுத்த 10 நாட்களில் 5,000 தேவையுள்ள மக்களுக்கு இதேபோன்ற பெட்டிகள் வழங்கப்பட்டன. இனிவரும் நாட்களில் தேவையுள்ளவர்களுக்கு மளிகைப் பொருட்களை வழங்குவதற்காக இந்தச் சங்கம் மேலும் ரூ.5 லட்சம் திரட்டியுள்ளது. கோவா மருத்துவக் கல்லூரி மற்றும் நலச் சேவைகள் பிரிவில் உள்ள மருத்துவர்களுக்கு இவர்கள் 50 PPE பொதிகளையும் நன்கொடையாக வழங்கியுள்ளார்கள்.

சங்க உறுப்பினர்கள் PM CARES நிதிக்கான பங்களிப்பாகத் தலா ரூ.1,000 வழங்கியுள்ளார்கள்.■

# போலியோவை ஒழிக்க ரோட்டரியுடன் இணைந்து செயலாற்றுவோம்!



பில் கேட்ஸ்

சர்வதேச அளவில் போலியோவை ஒழிக்கும் முயற்சியில் எங்கள் அறக்கட்டளை ஈடுபட முக்கிய காரணமாக இருந்தது ரோட்டரிதான். போலியோ இல்லாத உலகை ஏற்படுத்துவது அவ்வளவு எளிதான காரியமல்ல. அதற்கு ரோட்டரியின் உதவி எங்களுக்குத் தேவை. அவர்களின் உதவியுடன் போலியோ இல்லாத உலக உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது என்கிறார் பில்கேட்ஸ் மற்றும் மெலின்டா அறக்கட்டளையின் இணை தலைவர் பில் கேட்ஸ். அவரது பேட்டியின் சாராம்சத்தை இங்கு கொடுத்திருக்கிறோம்.

**கேள்வி:** போலியோ ஒழிப்பில் முனைப்புடன் செயல்பட வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு எப்படி ஏற்பட்டது?

**பதில்:** நான் பிறப்பதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்னால், அதாவது 1952-இல் அமெரிக்காவில் போலியோ வரலாற்றிலேயே இல்லாத அளவு அதிகரித்து இருந்தது. ஆயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்தனர். பலர் போலியோவால் கை, கால்களில் செயலிழந்தனர். போலியோ நோயிலிருந்து மக்களைக் காப்பாற்ற மருந்து கண்டுபிடிக்கப்பட்ட சில மாதங்களில் நான் பிறந்தேன். நான் மிகவும் அதிர்ஷ்டசாலி என்பது எனக்கு அப்போது தெரியாது. பின்னர் எங்கள் அறக்கட்டளை மூலம் சில பணிகளை மேற்கொண்டபோதுதான், போலியோ நோய் குழந்தைகளைத் தாக்குவதையும், அதன் விளைவுகளையும் நான் முழுமையாகத் தெரி்ந்துகொண்டேன்.

போலியோ தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டதன் மூலம் 1979-ல் அமெரிக்காவில் அந்நோய் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டது. ஆனால், அதன் பிறகு 25 ஆண்டுகள் கழிந்தும் அதாவது, 2004-ல் ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் ஆயிரக்கணக்கான குழந்தைகள் போலியோ நோயால் பாதிக்கப்பட்டதை பார்த்தபோது மனம் வேதனை அடைந்தது.

2007-ம் ஆண்டில் போலியோ நோயை எதிர்த்துப் போராடும் பணியில் எங்கள் அறக்கட்டளை இணைந்து செயல்படுவதற்கு முன்பு, போலியோவை முற்றிலுமாக ஒழிப்பது தொடர்பாக நான், நிபுணர்களுடன் கலந்து ஆலோசித்தேன். சர்வதேச அளவில் போலியோவுக்கு எதிரான நடவடிக்கைகளில் முன்னேற்றம் ஏற்பட்டபோது, உலகில் போலியோவை முற்றிலும் ஒழித்துவிட முடியும் என்கிற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டது. 1980-களில் தட்டம்மையை ஒழித்தது போல இதையும் ஒழித்துவிட முடியும் என்று நினைத்தேன்.

**கேள்வி:** 2019-ல் போலியோ தாக்குதலுக்கு ஆளானவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வந்ததே. அப்படியிருக்கையில் போலியோவை எப்படி முற்றிலும் ஒழிக்க முடியும் என்று நம்பினீர்கள்?

**பதில்:** 2019-ல் போலியோவால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை அதிகரித்தது உண்மைதான். ஆனால், கடந்த 30 ஆண்டுகளில் என்ன நடந்தது என்று பார்த்தோம். 1980-களில் சராசரியாக தினமும் 1000 குழந்தைகள் போலியோவால் பாதிக்கப்பட்டனர். இன்று அந்த எண்ணிக்கை 99.9 சதவீதம் குறைந்து விட்டது. ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானில் மட்டும் நோயின் தீவிரம் உள்ளது.

போலியோ முற்றிய நிலையிலிருக்கும் ஒருவரை அதிலிருந்து மீட்க முடியுமா என்பது சந்தேகமே. ஆனால், போலியோ ஒழிப்பு நடவடிக்கை பல்வேறு சவால்களைக் கடந்து முன்னேற்றம் அடைந்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் போலியோவை ஒழிக்க புதிய, புதிய உத்திகளைக் கடைப்பிடித்து வருகிறோம். ரோட்டரி இயக்கத்தின் துணையுடன் போலியோவை முற்றிலும் ஒழித்துவிட முடியும் என நம்புகிறேன்.

**கேள்வி:** கேட்ஸ் அறக்கட்டளையின் 2-க்கு 1-என்ற நிதியுதவி திட்டத்தை ஏன் தொடருகிறீர்கள்?

**பதில்:** போலியோவை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும் என்று போராடி வரும் ரோட்டரியுடன் கேட்ஸ் அறக்கட்டளை நீண்டகாலமாக தொடர்புகொண்டு செயலாற்றி, நிதியுதவி அளித்து வருகிறது. இதன் மூலம் ஆண்டுக்கு 150 மில்லியன் டாலர் நிதி திரட்டி வருகிறோம். போலியோ ஒழிப்புக்கு அதிக நிதி தேவை என்பதால் நிதி திரட்டுகிறோம். அதனால் ரோட்டரியுடன் இணைந்து செயலாற்றுகிறோம்.

ரோட்டரிக்கு நிதியுதவி அளிப்பதில் ஒரு விஷயம் இருக்கிறது. போலியோவை ஒழிக்க மட்டும் பணம் செலிவிடப்படுவதில்லை. மக்கள் சமூகத்திற்கு நோய்த் தடுப்பூசிகள் வழங்கவும் இந்த நிதியை பயன்படுத்துகிறோம். மேலும் சில வகை தடுப்பூசிகள் போடவும், மக்களுக்கு நல்ல குடிநீர் கிடைக்கவும் பயன்படுத்துகிறோம். நாங்கள் திரட்டும் ஒவ்வொரு டாலரும் சரியான முறையில் செலவிடப்படுவதை உறுதிசெய்கிறோம்.

**கேள்வி:** போலியோவை முற்றிலும் ஒழிப்பதில் தீவிரம் காட்டி வரும் ரோட்டரிக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

**பதில்:** எங்கள் அறக்கட்டளையில் உள்ள ஒவ்வொருவரும் ரோட்டரியின் சேவையால் ஈர்க்கப்பட்டவர்கள். ரோட்டரியுடன் இணைந்து செயலாற்றுவதில் நாங்கள் பெருமையடைகிறோம்.

போலியோ இல்லாத உலகை உருவாக்கவேண்டும் என்று செயல்படத் தொடங்கிய முதல் சேவை நிறுவனம் ரோட்டரிதான். கடந்த 30 வருடங்களாக ரோட்டரி சங்கங்கள் பலவும் இதற்காக நிதிதிரட்டி குழந்தைகளுக்கு போலியோ வராமல் தடுக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன. அதனால்தான் போலியோ இல்லாத பூஜ்ய நிலையை உருவாக்க முடிகிறது.

போலியோ இல்லாத உலகை ஏற்படுத்துவது அவ்வளவு எளிதான காரியமல்ல. அதற்கு ரோட்டரியின் உதவி எங்களுக்குத் தேவை. ■

# பெங்களூரின் காஃபித் தாகத்தைத் தீர்க்கும் முயற்சி

அனுபா ஜெய்ன்

பெங்களூரிலிருக்கும் சங்கராபுரத்தில் சின்னஞ் சிறிய பகுதிக்குள் ஓர் 50 ஆண்டுகாலப் பண்பாடும் மரபும் அக்கறையுடன் பின்பற்றப்படுகிறது. ‘தி பிராமின்’ஸ் காஃபி பார்’ என்னும் அந்தக் கடை, பெங்களூர்வாசிகளால் மிகவும் விரும்பப்படும் காஃபி மையங்களில் ஒன்றாகும்.


பெங்களூரின் தெருக்களில் ஒவ்வொரு மூலையிலும் இது போன்ற சிறிய காஃபிக் கடைகளைக் காணலாம், ஆனால், பிராமின்’ஸ் காஃபி பார் தென்னிந்திய உணவுப் பண்டங்களில் தன்னுடைய பழங்காலப் பண்பாட்டுச் சுவைக்காகவும் மரபைப் பின் பற்றுவதற்காகவும் புகழ் பெற்றுள்ளது. பல நாடுகளைச் சேர்ந்த விரைவுணவுகளை வழங்கும் கடைகள் நிறைந்த இந்தக் காலத்தில், இந்த டிஃபன் (நொறுக்குத் தீனி) மற்றும் காஃபி மையம் அதன் அடையாளப் பண்டமான ‘ஒன்-பை-டூ’ காஃபி, இட்லி-வடை-காரா பாத்-கேசரி பாத், சுவையான சட்னி ஆகிய வற்றின் கூட்டணிக்காகப் புகழ் பெற்றுள்ளது.

இந்த மாறுபட்ட காஃபிக் கடைக்குள் நுழையும்போதே, அங்கு கூட்டம் நிறைந்திருப் பதைக் காண்கிறேன்; மக்கள் தங்களுடைய ஃபில்டர் காஃபியை ருசிக்கிறார்கள்; காஃபி போடுபவர் பாலை நுரைபொங்க ஆற்றுவதும், சிறந்த காஃபி டிகாஷனை அதில் சேர்ப்பதும் ஒரு சுவையான காட்சி. தொலைவில் ஒரு மூலையில் ஊழியர் ஒருவர் அமர்ந்திருக்கிறார்; அவருடைய வேலை, சட்னி ஊற்றுவது. மற்ற தென் இந்திய உணவுக்கடைகளைப்போல் இங்கு டிஃபனுடன் சாம்பார் அல்லது ரசம் பரிமாறப்படுவதில்லை என்பதையும் நான் கவனிக்கிறேன்.

இது சுய சேவை அமைப்பில் இயங்குகிறது; உட்கார்ந்து சாப்பிட வசதி இல்லை. அதற்குப்பதிலாக, இந்தச் சிறு கூடத்தில் மேசை கள் உள்ளன; வாடிக்கையாளர்கள் அவற்றின்மீது தங்களுடைய தட்டுகளை வைத்துவிட்டு நின்றபடி உண்கிறார்கள்; பல மக்கள் தெருவிலும் நின்றும் சாப்பிடுகிறார்கள்.

கடையின் உரிமையாளரான ராதாகிருஷ்ண அடிகா, இந்தக் கடை அமைக்கப்படக் காரணமான தொடக்க நாட்களை நினைவு கூர்கிறார். பிராமின்’ஸ் சொல்கிறார், என்னுடைய தந்தை K V நாகேஸ்வர ராவும், என்னுடைய தாய் K N சரஸ்வதியும் கர்நாடகத்தின் உடுப்பி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள், 1930களில், தங்களுடைய பிழைப்புக்காகப் பெங்களூரு வீதிகளில் சில தென்னிந்திய உணவுப்பொருட்களைத் தயாரித்து விற்கத் தொடங்கினார்கள்.

1965ல், ராவ் மற்றும் அவருடைய மூத்த மகனான N ஷங்கர்நாராயண் இருவரும் ‘பிராமின்’ஸ் காஃபி பார்’ என்ற பெயரில் ஒரு சிறு கடையைத் தொடங்கினார்கள். ராவுடைய மனைவி காரா பாத் (உப்புமா) மற்றும் சட்னியைத் தயாரிக்கத் தொடங்கினார்,



*பாலை நுரை ததும்ப ஆத்தும் காபி மாஸ்டர்*

வாடிக்கையாளர்களிடையே அது உடனடி வெற்றியடைந்தது.

1970களில் இந்தக் கடையின் புகழ் மிகுதியானதால், வடை, இட்லி மற்றும் கேசரி பாத் என்கிற இனிப்பு ஆகியவையும் உணவுப்பட்டியலில் சேர்க்கப்பட்டன. 1972லிருந்து, ராவுடைய இன்னொரு மகனான ராதா கிருஷ்ணா அடிகா இந்தக் கடைக்குப் பொறுப்பேற்றார்.

இன்று, 14க்கும் மேற்பட்ட ஊழியர்களைக் கொண்ட இந்தக் காஃபிக் கடை, இந்த நகரத்தின் ஓர் அடையாளமாகிவிட்டது. இந்தக் கடை அதிகாலை 6 மணியிலிருந்து நண்பகல் 12 மணிவரையும், பின்னர் மாலை 3 மணியிலிருந்து இரவு 7 மணிவரையும் செயல்படுகிறது. நாள்தோறும் அதிகாலை 4 மணிக்கே ஊழியர்கள் சமையலைத் தொடங்குகிறார்கள்.

இந்தச் சிறிய கடையின் தனித்துவம், 1965ல் இந்தக் கடை வீட்டுத் தயாரிப்புக்காகப் புகழ்பெற்றிருந்த காலத்திலிருந்து இன்றுவரை அதன் சுவை ஒரேமாதிரி உள்ளது என்பதுதான். இன்று, சங்கராபுரம், பசவங்குடி, சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள பல வாடிக்கையாளர்கள் உணவைப் பொட்டலம் கட்டி வாங்கிச் செல்கிறார்கள், கூடவே நிறைய சட்னியும் வழங்கப்படுகிறது.




ஒரு பழங்காலப் பண்பாட்டைப் பராமரிப்பதற்காகவும், மரபைப் பின்பற்றுவதற்காகவும் நாங்கள் நிலைத்தன்மைத் தத்துவத்தை நம்புகிறோம். என்னுடைய வாடிக்கையாளர்களில் பலர் தொடக்கக் காலத்திலிருந்து இங்கு வருகிறவர்கள், அவர்களுடைய பெயர்களையும் முகங்களையும் நான் அறிவேன்'' என்கிறார் அடிகா. 1995முதல் IT தொழில்துறை பெரிதாக வளர்ந்ததால் பெங்களூருக்குப் பலர் குடிபெயர்ந்திருபப்தாகவும், எங்களுடைய உணவுப் பொருட்களில் உள்ள மிகச் சிறந்த சுவையும் நிலைத்தன்மையும்'' இந்த உணவகத்துக்கு மேலும் கூடுதலான வாடிக்கையாளர்களை ஈர்த்திருப்பதாகவும் தொடர்ந்து கூறுகிறார் அவர்.

பிராமின்'ஸ் கடையின் வெற்றியைத் தொடர்ந்து, இதே போன்ற பெயர்களில் வேறு தென்னிந்திய உணவகங்கள் இயங்குகின்றன; ஆனால், பிராமின்'ஸின் பழைமையான மற்றும் உண்மையான சுவையை அறிந்த வாடிக்கையாளர்களை யாராலும் ஏமாற்ற இயலாது. தொடர்ந்த தரம் மற்றும் சுவையினால் இந்த உணவகம் இதேபோன்ற தென்னிந்திய உணவகங்களுக்குக் கடும் போட்டியை வழங்கி வருகிறது. பல பத்தாண்டு களாக இங்கு சாப் பிடுகிற விசுவாசமான வாடிக்கையாளர்கள், அவர்களுக்குப் பிடித்த பிராமின்'ஸின் ஃபில்டர் காஃபி, சட்னிக்காகவே சனி, ஞாயிறுகளில் நெடுந்தூரம் வண்டி ஓட்டிக்கொண்டு இங்கு வருகிறார்கள்.



கட்டுரையாளர்
RC ஜெய்ப்பூர்
RID 3054ன் உறுப்பினர்.

# நினைவில் நிற்கும் தைவான் விடுமுறைப் பயணம்

நீனா சோந்தி



*வண்ணமிகு பௌத்த கோவில்*





சில ஆண்டுகளுக்குமுன்னால், நாங்கள் தைவானுக்கு அழைக்கப்பட்டோம். அப்போது அந்த இடத்தைப்பற்றி எங்களுக்குப் பெரிதாக எதுவும் தெரிந்திருக்கவில்லை.

எங்களுக்கு அங்கு சில அலுவல் கூட்டங்கள் இருந்தன, ஆனால், எங்களுடைய 4 நாள் தங்கலின் போது, வடக்குப் பகுதிகள் சிலவற்றைக் காண்பதற்கு எங்களுக்குச் சிறிது கூடுதல் நேரம் இருந்தது. எங்களை அழைத்திருந்தவர்கள், தைவான் விளையாட்டுப் பொருள்கள் உற்பத் தியாளர்கள் சங்கம். இவர்கள் எங்களுக்கு மிக உதவியாகவும் அன்போடும் நடந்துகொண்டார்கள், ஆகவே, நாங்கள் பல இடங்களை மகிழ்ச்சியாகக் கண்டோம்.

நாங்கள் தலைநகரமான தாய்பாயில் (மான்டரின் மொழியில் "பாய்" என்றால் வடக்கு) தங்கியிருந்தோம், எங்கள் பயணங்களைச் சுருக்கமாக அமைத்துக் கொள்ளவும், அந்தப் பகுதியில் ஆர்வமூட்டுகிறவையாக நாங்கள் உணர்கிறவற்றைமட்டும் காணவும் தீர்மானித்தோம்.

எங்களுடைய முதல் பயணம், வடகிழக்குக் கடற்கரைக்குச் சென்று சில கிராமங்களைக் காண்பது. நாங்கள் ஒரு சிறிய குழு, எங்களுக்கு மிகச்சிறந்த உள்ளூர் வழிகாட்டிகள் கிடைத்தார்கள்.

வழியில், நாங்கள் முதலில் ஒரு சிறிய புத்த ஆலயத்தில் நின்றோம். இது கடற்கரைக்கு அருகில் அமைந்திருந்தது, உண்மையிலேயே மிகவும் வண்ணமயமாக இருந்தது.

தொடர்ந்து சென்ற நாங்கள் கடற்கரையில் தனித்துவமான பாறை உருவாக்கங்களைக் கண்டு ரசிப்பதற்காக மீண்டும் நின்றோம். ஒரு பாறை, மனித மூக்கைப்போன்ற வடிவத்தில் இருந்தது, இன்னொரு பாறை கருத்துக்குப் புலனாகாத ஒரு வடிவில் இருந்தது; இன்னொன்று ஒரு மீன் வடிவத்தில் இருந்தது, அது பாறையில் பதிக்கப்பட்டது போல் தோன்றியது. நெடுங்காலமாகக் காற்றிலும் மழையிலும் நனைந்த அந்தப் பாறைகள் பலவிதமான பழுப்பு வண்ணங்களில் இருந்தன.

அடுத்து, ஒரு சந்தில் இருந்த சில சிறு கடைகளில் நாங்கள் நின்றோம். அது கிட்டத்தட்ட ஒரு சந்தையைப்போல் தோன்றியது. இந்தக் கடைகளில் தைவானின் தனித்துவமான பொருட்கள் விற்கப்பட்டன. இங்குதான் எங்களுக்குச் சேனைக்கிழங்குச் சூப் அறிமுகமானது, அந்தச் சுவை எனக்குப் பிடித்திருந்தது. அதேபோல், உலரவைக்கப்பட்ட பழங்கள் (சிறு ஆரஞ்சுகள், பிளம்கள்) மற்றும் உள்ளூர் கேக்குகளையும் இங்கு ருசிக்கலாம், நாங்கள் சிலவற்றை வீட்டுக்கு வாங்கி வந்தோம். இந்தச் சந்தையில் வாங்கக்கூடிய நல்ல நினைவுப் பொருட்கள், குழந்தைகளுக்கான செருப்புகள், பீங்கானில் செய்யப்பட்ட, விலங்கு வடிவத்திலான புல்லாங்குழல்கள்.

இங்கிருந்து, ஒரு செங்குத்தான மலையின் உச்சியில் அமைந்துள்ள, அதனால் ஏறுவதற்குக் கடினமான ஒரு சிறு கிராமத்தை நோக்கி நாங்கள் நடந்தோம். இந்தப் பகுதியில் தங்கம் வெட்டியெடுக்கப்படுகிறது என்று நாங்கள் ஏற்கெனவே கேள்விப்பட்டிருந்தோம், ஆகவே, அருகருகில் அமைந்த வீடுகள் செங்குத்தான மலைப் பக்கத்தை ஒட்டியபடி கட்டப்பட்டிருந்தன. இப்போது, அங்கு தங்கம் இல்லை, ஆனால், மாறுபட்ட வீடுகள் இன்னும் உள்ளன, நடுவில் கடைகள், கோயில்கள் அமைந்துள்ளன.



*சுங்க்ஷன் ஹாலின் கூரையில் வேலைபாடுகள்.*

அடுத்த நாள், நாங்கள் தாய்பாயின் வடக்கில் சென்றோம், அழகான யங்மிங்ஷான் தேசியப் பூங்காவைக் கண்டோம். அது ஒரு பெரிய பகுதியில் பரந்து விரிந்துள்ளது, அங்கு ஆர்வமூட்டும் பல இடங்கள் உள்ளன.

முதலில், நாங்கள் சுங்ஷான் கூடத்துக்குச் சென்றோம், 40 ஆண்டுகளுக்குமுன் கட்டப்பட்ட இந்தக் கூடம் முதலில் தேசியச் சட்டசபையின் இல்லமாகச் செயலாற்றியது (இப்போது அது செயலில் இல்லை).

அது ஓர் அழகிய கட்டடம், நவீன தைவானியக் கட்டக்கலையையும் உட்புறங்களில் அமைக்கப்பட்ட பழங்காலச் சீனக் கலைப்பொருட்கள் மற்றும் வடிவமைப்புகளையும் ஒருங்கிணைத்தது. அது மலைப்பகுதியில் அமைந்துள்ளது, அதன் வெளிப்பகுதியின் பிரமாண்டம், அதைச் சுற்றியிருக்கும் இடங்களுடன் அழகாகக் கலந்து காணப்படுகிறது.

ஆர்வமூட்டும் விஷயம், இது கந்தக நீரூற்றுகளுடைய மென்மையான மற்றும் கடினமான அடித்தளமொன்றின் மீது கட்டப்பட்டுள்ளது. சில நேரங்களில், நாம் சமமாக இல்லாத தளங்களைக் காணலாம், கந்தக மணத்தை (அழுகிய முட்டையைப்போன்றது) முகரலாம்.

பல மாநில வருகைகள், விருந்துகள் இங்கு நடைபெற்றுள்ளன, தைவானுடைய சமகால வரலாற்று நிகழ்வுகளின் கண்காட்சியொன்றும் இங்கு உள்ளது.

ஓர் அழகிய பூங்காவைப் பார்த்த பிறகு, நாங்கள் வெந்நீரூற்றுகளுக்குச் சென்றோம். நாங்கள் இருந்த பகுதியான டாடுன் மலைத் தொடரில்தான் மிகக் கூடுதலான எண்ணிக்கையில் வெந்நீர் ஊற்றுகள் உள்ளன. இவற்றுள் யங்மின்ஷான் வெந்நீர் ஊற்றுகளை தான் நாங்கள் கண்டோம், இவை மிதமான காரத்தன்மை கொண்ட கந்தக வகையிலானவை. இங்கு நாங்கள் இரண்டு குளியல் வகைகளில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கலாம்: திறந்தது (ஆடை இல்லாமல்) மற்றும் தனியார்.



*நார்த் வெஸ்ட் கோஸ்டில் பாறை வடிவமைப்பு.*

வெந்நீர் ஊற்றுகளில் குளிப்பது பல உடல்நலப் பிரச்னைகளைக் குணமாக்கும், மனத்தை இதமாக்கும் என்கிறார்கள். அதே நேரம், எங்கள் குழுவில் இருந்த 10 பேரில் இருவர்தான் வெந்நீர் ஊற்றில் குளித்தோம்.

நாங்கள் ஒரு தனியார் குளியலறைக்குள் குளித்தோம், அது ஒரு புத்துணர்வூட்டும் அனுபவமாக இருந்தது, ஆனால், மற்ற பலன்கள் நேரடியாகத் தெரியவில்லை!

முதல் இரு பயணங்களும் எங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டன, அதே நேரம், கால அட்டவணையெல்லாம் அமைத்துக் கொள்ளாமல் நாங்களே கொஞ்சம் சுற்றித்திரிந்தோம். எங்களுடைய விடுதி ஒரு பொருள் வாங்கல் மாலுக்கு அருகில் இருந்தது, ஆகவே, நாங்கள் அந்த மாலிலும் அதைச் சுற்றியும் சிலமுறை நடந்தோம். அது நன்கு வடிவமைக்கப்பட்டிருந்தது, அழகிய கடைகளால் நிறைந்திருந்தது.

நாங்கள் சென்ற இன்னொரு பயணம், ஒருகாலத்தில் உலகின் மிக உயரமான கட்டடமாக இருந்த தாய்பாய் 101க்கு. இந்தச் சுற்றுலாத் தலத்தில் ஏராளமான மக்கள் குவிந்திருந்தார்கள். நாங்கள் வரிசையில் நின்றோம், ஓர் அதிவிரைவு மின்னுயர்த்தியில் இந்தக் கோபுரத்தின் உச்சிக்குச் சென்றோம், அங்கிருந்து தாய்பாயைப் பரவலாகப் பார்த்தோம். அங்கு பல நினைவுப் பொருட்களையும் வாங்கலாம், உண்பதற்கும் அருந்துவதற்கும் நல்ல இடங்கள் உண்டு.

நிறைவு நாளில் நாங்கள் பீங்கான் தொழிற்சாலைகளுக்குச் சென்றோம், அங்கு அழகிய கலைப்பொருட்கள் நிறைந்திருந்தன, ஆனால், வீட்டுக்குக் கொண்டுசெல்ல இயலாத அளவுக்கு அவை மிகப் பெரியவை, கனமானவ. ஆனாலும், நாங்கள் சில சிறிய நினைவுப் பொருட்கள், தேநீர் போன்றவற்றை வாங்கினோம்.

அதே நேரம், இந்தப் பயணத்தை நினைவில் நிற்கச்செய்த மிகச் சிறந்த விஷயங்கள், தைவான் மக்களுடைய கதகதப்பான பழகுமுறையும் விருந்தோம்பலும் தான். இந்த விஷயத்தில் அவர்கள் இந்தியர்களைப் போன்றவர்களே தான், கலை மற்றும் இயற்கை அழகில் அவர்களுக்கு மிகுந்த விருப்பம்.

விடுதியின் லாபிகளில் இருந்த அழகிய கலைப்பொருட்கள், பேரழகான பூக்கள் ஆகியவை கண்ணுக்கு விருந்துகள். நாங்கள் பல வண்ணமயமான ஆர்க்கிட்களைக் கண்டோம்… அவற்றின் அளவும் வண்ணமும் வகைகளும் மலர் விரும்பிகளுக்கு ஒரு விருந்துதான்.

கட்டுரையாளர் RC ஜலந்தர் தெற்கு, RID 3070ன் முன்னாள் தலைவர்.

வடிவமைப்பு:
S. கிருஷ்ணப்ரதீஷ்

# உறவை வலுப்படுத்திய சமன்வயா மாநாடு!

ரோட்டரி செய்திக்குழு

RID 3170 சார்பில் அண்மையில் ஹுப்ளியில் சமன்வயா மாவட்ட மாநாடு நடைபெற்றது. ரோட்டரி உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் 1500 பேர் இதில் கலந்துகொண்டனர். மூன்று நாள் நடைபெற்ற இந்த மாநாட்டில் பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. ஹுப்ளி, பாகல்கோட், விஜயபூர் ரோட்டரி சங்கங்கள் இந்த மாநாட்டிற்கு ஏற்பாடு செய்திருந்தன. சமன்வயா என்றால் நல்லிணக்கம் என்று அர்த்தம். ரோட்டரி உறுப்பினர்கள் அவர்களின் குடும்பத்தினரிடையே உறவை புதுப்பிக்கும், வலுப்படுத்தும் வகையில் இந்த மநாடு இருந்ததாக மாவட்ட ஆளுநர் கௌரீஷ் மசூர்கர் தெரிவித்தார். ரஷியாவில் உள்ள ரோட்டரி உறுப்பினர்கள் 7 பேர் இதில் கலந்துகொண்டது சிறப்பு அம்சமாகும்.

மாநாட்டுக்கு வந்திருந்த அனைவரையும் தலைவர் எஸ்.கே.யாதஹள்ளி வரவேற்றார். மனைவி திவ்யாவுடன் பங்கேற்ற ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவரின் பிரதிநிதி காஎ நிதின் டாஃப்ரியா (RID 3040), சர்வதேச அளவில் கடந்த 114 ஆண்டுகளில் ரோட்டரி செய்து வந்த சாதனைகளைப் பட்டியலிட்டார். அதுமட்டுமல்ல, ரோட்டரி இந்தியாவின் நூறாவது ஆண்டு பயணத்தையும் விவரி்த்தார்.

மாவட்ட ஆளுநர் கிரீஷ் மசூர்கர் பேசுகையில், ரோட்டரியின் எழுச்சியையும், ஐக்கிய நாடுகள் சபை உருவானதில் ரோட்டரியின் பங்கு பற்றியும் எடுத்துரைத்தார். ஐ.நா.வின் பொருளாதார சமூக குழுவுக்கு ஆலோசனை வழங்கும் உரிமையை ரோட்டரி பெற்றிருப்பதையும், பல்வேறு கூட்டங்களில் RI சார்பிலான பிரதிநிதிகள் பார்வையாளர்களாக



*மாவட்ட கருத்தரங்கில் ஒரு கலை நிகழ்ச்சி.*



*DG கிரிஷ் மசூர்கர் மற்றும் மனைவி சந்தியா RIPR நிதின் தஃப்ரியா மற்றும் அவர் மனைவி திவ்யா ஆகியோரை கௌரவிக்கின்றனர்.*



பங்கேற்று வருவதையும் பெருமையாகக் குறிப்பிட்டார். போலியோ ஒழிப்பு, எழுத்தறிவு இயக்கம், குடிநீர், சுகாதாரத் திட்டங்களில் ஐ.நா.வுடன் ரோட்டரி இணைந்து செயலாற்றியதையும் குறிப்பிட்டார். உலகில் கலாசார பரிவர்த்தனைகளை மேற்கொள்ளவும், அமைதியை நிலைநாட்டவும் ஐ.நா. வுக்கு ரோட்டரி உறுதுணையாக செயல்பட்டுவருவதையும் சுட்டிக் காட்ட அவர் தவறவில்லை.

1945-ஆம் ஆண்டு அக்டோபரில் PRIP T A வாரன் ஐக்கிய நாடுகள் சபை வாரவிழாவைக் கொண்டாடினார். பின்னர் அது 1953ல் ஐ.நா. பொதுச் சபையால் ரோட்டரி ஐ.நா. தினமாக மாற்றியமைக்கப்பட்டது. இத்தகைய பெருமைவாய்ந்த ரோட்டரியில் நாம் உறுப்பினர்களாக இருப்பதுடன், ரோட்டரி இயக்கத்தின் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை கட்டிக்காக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

ரோட்டரியின் பல்வேறு திட்டங்களை எடுத்துரைக்கும் முகமாக 10 கி.மீ. சைக்கிள் பந்தயமும் நடைபெற்றது.

இஸ்ரோ முன்னாள் தலைவர் கிரண்குமார், சந்திரயான் மற்றும் மங்கள்யான் திட்டங்களை விவரித்தார். இஸ்கான் அமைப்பைச் சேர்ந்த பிரபு ராஜீவ் லோசன் தாஸ், அர்த்தமுள்ள வாழ்க்கை பற்றி பேசினார். மத்திய வேளாண்துறை கூடுதல் செயலர் அசோக் தால்வாய் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கும் திட்டம், ஜலசக்தி அப்யான் திட்டம் உள்ளிட்ட மத்திய அரசின் நலத்திட்டங்களளை எடுத்துரைத்தார். அவரது உரை அனைவரையும் ஈர்த்ததால் அடுத்த நாள் விவசாயிகள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் 200-க்கும் மேலான விவசாயிகள் பங்கேற்றனர் என்றார் மாநட்டுச் செயலர் வாசுகி சஞ்சி.

RIPR நிதின் டாஃப்ரியா, PRFC அவிநாஷ் போட்தர், DRFC பிரானேஷ் ஜஹாகிர்தர் ரோட்டரி அறக்கட்டளையின் நோக்கம், அவற்றிலிருந்து ரோட்டரிக்கு கிடைக்கும் நிதியுதவிகள், அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்குவது எப்படி என்பது குறித்து தெளிவாக எடுத்துக்கூறினர்.

IPDG ரவிகிரண் குல்கர்னி, கடந்த ஆண்டு சிறப்பாக சேவையாற்றிய ரோட்டரி உறுப்பினர்களுக்கு விருதுகளை வழங்கி கௌரவித்தார்.■

# வடோதரா மாணவர்கள் உயரப் பறக்க உதவும் உடான்

V முத்துக்குமரன்

முடக்கக் காலகட்டத்தின்போது, RC படோரா மெட்ரோ, RID 3060, 'தி எடு கிளப்' அமைப்புடன் இணைந்து, தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு அவர்களுடைய பெற்றோரின் தொலைபேசிகளில் உள்ள வாட்ஸாப் வழியாகப் பணித்தாள்களை அனுப்பிவைத்தது. இதன்மூலம், அவர்கள் இந்த ஓய்வு நேரத்தைப் பயனுள்ளவகையில் பயன்படுத்திக்கொண்டு சில கற்றல் திறன்களைப் பெறலாம் என்றார் 'உடான்' திட்டத்தின் தலைவரான கல்பா ரச்ச், நலிந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுடைய ஒளிமயமான எதிர்காலத்துக்காக, அவர்களுக்கு 'நான்கு மைய அடித்தளத் திறன்களில்' பயிற்சியளிக்கும் நோக்கத்தைக் கொண்ட ஒரு தொடக்க வயதுக் கல்வித் திட்டம் இது.

இந்தத் திட்டத்துக்காகப் பள்ளி அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட 700 மொபைல் எண்களுக்கும் அன்றாடப் பயிற்சிகள் அனுப்பப்படுகின்றன, இவற்றில் 75-80 பேர் நிறைவுசெய்யப்பட்ட பணித்தாள்களுடன் பதிலளித்தார்கள், திட்டத் தன்னார்வலர்களை இது மகிழ்ச்சிப்படுத்தியது.

உடான் திட்டம் என்பது, மூன்றாண்டுகளாக இயங்கிவருகிற ஒரு ரோட்டரி திட்டமாகும்; அரசுப் பள்ளிகளில் UKG முதல் 4ம் வகுப்புவரை பயில்கிற மாணவர்களை இது இலக்காகக் கொண்டுள்ளது.

இந்த மாணவர்கள் கீழ் நடுத்தர வகுப்புக் குடும்பங்களிலிருந்து வருகிறார்கள், இவர்களுடைய பெற்றோர் பல அன்றாடச் சிரமங்களைச் சந்தித்தபோதும், தங்கள் குழந்தைகளுக்குத் தரமான கல்வியை அளிக்க விரும்புகிறார்கள். தனியார் பள்ளிகளில் பயிலும் ஏழை மாணவர்களும் இதில் சேர்க்கப்படுகிறார்கள்'' என்றார் கல்பா. இவரும் பிரேயா தேசாயும் சேர்ந்து, ஆறு ஆண்டுகளுக்குமுன் 'தி எடு கிளப்'பைத் தோற்றுவித்தார்கள். மூன்று ஆண்டுகளுக்குமுன்னர் ரோட்டரியும் இந்தப் பணியில் இணைந்துகொண்டது, ஆகவே, அவர்கள் திட்டத்தின் வியூகத்தை நுணுக்கமாக மேம்படுத்தினார்கள். இதன் முதன்மையான அம்சம், தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகளில் கல்வியாண்டு முழுவதும் ஒவ்வொரு வாரமும் ஓர் உடான் பாடவகுப்பை (அல்லது நிகழ்வை) நடத்துவது.

இந்த ஆண்டு, வடோதராவில் ஆறு தனியார் மற்றும் இரண்டு அரசுப் பள்ளிகளில் 2,200 மாணவர்களுக்கு வகுப்புகள் நடத்தப்படுகின்றன. கடந்த ஆறு ஆண்டுகளில், 8,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் எங்கள் திட்டத்தால் பலன் பெற்றுள்ளார்கள். முன்பு இந்தத் திட்டம் 1ம் வகுப்பிலிருந்து 6ம் வகுப்புவரை பயில்பவர்களுக்காக நடத்தப்பட்டது, ஆனால், இந்த ஆண்டிலிருந்து நாங்கள் UKG முதல் 4ம் வகுப்புவரை பயில்கிற குழந்தைகளில் கவனம் செலுத்துகிறோம், மூன்று ஆண்டுகளில் 5,000 மாணவர்களைச் சென்று சேர்ந்துள்ளோம்'' என்று விளக்குகிறார் கல்பா, பாடங்கள் ஹிந்தி மற்றும் குஜராத்தியிலும் கிடைப்பதாகத் தொடர்ந்து கூறுகிறார்.

**அடிப்படைதான் முதன்மையானது**

ஏழைச் சமூகப் பொருளாதாரப் பின்னணியிலிருந்து வருகிற மாணவர்கள் மேல் வகுப்புகளுக்குச்

*வினாடி வினா நிகழ்ச்சியில் வெற்றி பெற்ற பள்ளி குழந்தைகளுடன் RC பரோடா மெட்ரோ உறுப்பினர்கள்.*



செல்லச் செல்ல, பாடங்களைச் சமாளிக்க இயலாமல் சிரம்பப்படுகிறார்கள்; ஆகவே, இளம் வயதிலேயே அடிப்படைக் கற்றல் திறன்களை வலுப்படுத்தும் தேவை உள்ளது, இதன்மூலம் அவர்கள் உயர்கல்விக்கு இன்னும் நன்கு தயாராவார்கள்'' என்றார் அவர்.

இதில் கற்றுத்தரப்படும் நான்கு அடிப்படைத் திறன்கள், ஆங்கிலம் படித்தல், எழுதுதல் (ஒலியியல்); கணக்கு (எண்ணறிவு); மூளைப் பயிற்சிகள் (தர்க்கப் பகுத்தறிவு); மற்றும் சமூக-உணர்வுத் திறன்கள் (ஊக்கம் மற்றும் சிரமமான சூழ்நிலைகளைக் கையாளுதல்).

ஏழைக் குழந்தைகளுடைய மூளையை ஸ்கான் செய்து பார்த்தபோது, அவற்றில் இருக்கும் பழுப்புப் பொருள், மேற்பரப்பு ஆகியவற்றின் அளவு ஆறு சதவிகிதம் குறைவாக இருப்பது தெரியவருகிறது; இதனால், அவர்கள் 6ம் வகுப்புக்கு வரும் நேரத்தில் கற்றல் குறைபாடு உண்டாகிறது. ஆனால், மூளை மிகவும் நெகிழ்வுத்தன்மை கொண்டது; சரியான உள்ளீடுகள் மற்றும் மனப் பயிற்சிகளை வழங்கினால் அதை மேம்படுத்தலாம்'' என்றார் அவர்.

கல்வித்துறையில் திறன் கொண்ட ஆறு ரோட்டரியன்கள் மையப் பாடத்திட்டத்தை வடிவமைக்க உதவுகிறார்கள், இன்னும் 20 பேர் இந்தத் திட்டத்தை ஆதரிக்கிறார்கள்.

SSG மருத்துவக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற பள்ளிகளுக் கிடையிலான விநாடி வினாப் போட்டியில் இந்த மாணவர்கள் மிகச்சிறப்பாகச் செயல்பட்டார்கள், ஆகவே, ஆண்டு விழாவில் ரோட்டரியன்களுக்குப் பெற்றோர் நன்றி தெரிவித்தார்கள்.

எங்களுடைய நோக்கம், மாணவர்களை அவர்களுடைய ஆளுமையின் முழுமையான முன்னேற்றத்துடன் மாற்றியமைப்பது. நிகழ்வுகளின் நிறைவில், தங்களுடைய யோசனைகளைத் துணிவோடு தெரிவிக்கும் திறன், பகுப்பாய்வு மனநிலை ஆகியவற்றால் அவர்கள்



*உடான் திட்டத் தலைவர் கல்பா ராச் ஒரு குழந்தை மற்றும் தாயுடன்.*

தன்னம்பிக்கை பெறுகிறார்கள் என்றார் சங்கத் தலைவர் சுபாஷ் சர்மா.

## பெற்றோர், ஆசிரியர்கள் மகிழ்ச்சி

சிறுமலர்கள் பள்ளியில் படிக்கும் ஹன்ஷித்-தின் தந்தையான பரத் ரோஹித், உடான் ஒருங்கிணைப்பாளர்கள் அனுப்பும் பணித்தாள்களை மிகவும் பாராட்டுகிறார். நாங்கள் புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்ள அது எங்களுக்கு உதவுகிறது. ஒலியியல் பணித்தாள்களின்வழியாக நான் பல புதிய ஆங்கிலச் சொற்களைக் கற்றுக்கொண்டுள்ளேன் என்கிறார் அவர்.

டாக்டர் ஹோமிபாபா பிராத்மிக் ஷாலாவைச் சேர்ந்த நவ்யா பகத்-தின் தாய், தன்னுடைய மகள் மேடையில் ஏறிப் போட்டிகளில் தன்னம்பிக்கையுடன் கலந்து கொள்வதைக் கண்டு மிகவும் மகிழ்ந்தார். இதுபோன்ற ஒரு பெரிய நிகழ்வில் பெரிய மேடையில் என்னுடைய மகளைக் காணும்போது நான் மிகவும் பெருமையாக உணர்கிறேன்.

உமா வித்யாலயாவைச் சேர்ந்த குன்ஜ் ஜோஷி உடான் வகுப்புகளில் கலந்து கொள்வதை ஆர்வத்துடன் எதிர்நோக்குகிறார், அவை அவனுடைய தன்னம்பிக்கையைப் பெருக்குவதால், அவன் எப்போதும் உடான் வகுப்புகளை விடுவதே இல்லை என்கிறார் இந்த மாணவருடைய தந்தையான விஷால் ஜோஷி.

ஆசிரியர்களும் இந்த வகுப்புகளைக் கவனிக்கிறார்கள், இந்த நிகழ்வுகள் ஆர்வ மூட்டுவதாகச் சொல்கிறார்கள் என்கிறார் பள்ளி முதல்வர் கீதா காந்தி. இதுவரை இந்த வகுப்புகளுக்கு மாணவர்கள் வராமலிருப்பதே இல்லை.

சிறுமலர்கள் பள்ளியில் ஓர் ஆசிரியரான தர்ஷனா, எங்களுடைய வழக்கமான பாடங்களைக் கற்றுத்தருவதற்கும் நாங்கள் உடான் உத்திகளைப் பின்பற்றத் தொடங்கிவிட்டோம்; இந்த முறை மிகச்சிறப்பாக உள்ளது, ஏனெனில், மாணவர்கள் இந்த விஷயங்களை எளிதில் புரிந்துகொண்டு, கருத்துகளைப் பின்பற்றுகிறார்கள் என்றார். அடுத்த 4–5 ஆண்டுகளில், உடான் வகுப்புகள் மாணவர்களில் ஒரு மிகச்சிறந்த தாக்கத்தை உண்டாக்கும் என்றார் அதிதி வித்யாலயா முதல்வர் கௌசிக் அமின்.

இந்தத் திட்டத்தால் கவரப்பட்ட DG அனீஷ் ஷா, அடுத்த ரோட்டரி ஆண்டிலிருந்து உடான் திட்டம் மாவட்டம் முழுவதும் நடத்தப்படும் என்று உறுதியளித்துள்ளார். RC பரோடா மெட்ரோ உறுப்பினர்களான PRID மனோஜ் தேசாய் மற்றும் அவருடைய துணைவர் ஷர்மிஷ்தா இந்தத் திட்டத்தில் மிகுந்த ஆர்வம் காட்டுகிறார்கள், ஒரு வழிகாட்டும் ஆற்றலாகச் செயல்படுகிறார்கள், குஜராத்முழுவதும் இந்தக் கல்வித் திட்டத்தைப் பெரிய அளவில் கொண்டுசெல்வதற்கு அவர்கள் எங்களுக்கு உதவுகிறார்கள்'' என்றார் கல்பா.■

Rotary PEOPLE OF ACTION

# தொலைதூர கிராமத்திற்கு ஹாப்பி ஸ்கூல் கிடைக்கிறது

ரோட்டரி செய்திக்குழு



Dr *தேபாஷிஷ் தாஸ் பள்ளிக் குழந்தைகளுடன்*

RC சிலிகுரி கிரீன், RID 3240 இன் ரோட்டேரியன்களின் முயற்சி களால் மேற்கு வங்காளத்தின் சிலிகுரியிலிருந்து சுமார் 20 கி.மீ தொலைவில் அமைந்துள்ள லஹாரு பஸ்தி தொடக்கப்பள்ளி ஒரு ஹாப்பி ஸ்கூலாக மாற்றப்பட்டுள்ளது. 1,850 சதுர அடி பரப்பளவுள்ள பழங்குடி பள்ளியில் இப்போது வகுப்பறைகள், வலுவான கலவை சுவர், விசிறிகள் கரும்பலகைகள், விளையாட்டு மைதானம் ஆகியவை உள்ளன. புதுப்பிக்கப்பட்ட பள்ளியைத் துவக்கிய ராஜ்குஞ்சின் எம்.எல்.ஏ காகேஷ்வர் ராய், கிளப் உறுப்பினர்களின் முயற்சியைப் பாராட்டினார்.

DG தேபாஷிஷ் தாஸ் பள்ளியில் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுடன் உரையாடி குழந்தைகளுக்கு டி-ஷர்ட்டுகள் மற்றும் புத்தகங்களை விநியோகித்தார். 4 லட்சம் செலவில் பள்ளியை மேம்படுத்தியதற்காக பாராட்டிய மாவட்ட கல்வி அதிகாரி ராஜீப் சக்ரபொர்த்தி ரோட்டரியர்கள் கல்வித் துறையிலும் அர்ப்பணிப்புடன் உள்ளதாகக் கூறினார். திட்ட தலைவர் அபிஷேக் கார்க் மாணவர் சேர்க்கை இன்னும் அதிகரிக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.■

# மும்பை பள்ளியிற்கு ரோபோடிக் மையம்

ராஜேந்திரா மற்றும் சுபலக்ஷ்மி சாப்வாலே எண்டோவ்மென்ட் நிதி மூலம் RC மும்பை நார்த் ஐலாண்ட், RID 3141, சியோன்-தாராவி, T S உயர் நிலைப் பள்ளியில் ஒரு ரோபோடிக்ஸ் ஆய்வகம் அமைக்கப்பட்டுள்ளது.

ரோபோடிக்ஸ், IoT மற்றும் 3-டி பிரிண்டிங் ஆகியவற்றின் அதிநவீன கண்டுபிடிப்பு மையம் முதன் முதலில் AKS உறுப்பினரான Rtn ராஜேந்திர சாப்வாலே என்பவரால் உருவாக்கப்பட்டதை, கிளப் தலைவர் ஊர்மிளா பிரபு பாராட்டினார். அவர், திட்டத் தலைவர் பூபேந்திர ஷாவுடன் சேர்ந்து பள்ளியில் இந்த வச தியை அமைக்க பணியாற்றினார்.

ரோபோ மையம் பின்னணிப் பாடகர் சங்கர் மகாதேவன் மற்றும் ரோட்டேரியன்கள் முன்னிலையில் DG ஹர்ஜித் சிங் தல்வாரினால் திறந்து வைக்கப்பட்டது. 3,500க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர் களைக் கொண்டுள்ள D S உயர்நிலைப்பள்ளி மகாராஷ்டிராவின் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஒன்றாகும். இந்த மையம் அவர்களுக்கு ஒரு பெரிய வரம் என்றார் ஊர்மிளா.



DG *ஹர்ஜித் சிங் தல்வார்,* Rtn *ராஜேந்திர சாப்வாலே மற்றும் பாடகர் சங்கர் மகாதேவன் ரோபோடிக் மையத்தில்.*

வெற்றிகரமாக படிப்பை முடித்த மாணவர்களுக்கு கொடுக்கப்படும் சான்றிதழ் அவர்களுக்கு வேலை கிடைக்க உதவுகிறது.■

# இதயத்தை நெகிழவைக்கும் குழந்தைகளுக்கான திட்டம்

ஜெய்ஸ்ரீ

ஒரு குழந்தை அமைதியான ஆழ்ந்த தூக்கத்தில் இருப்பதை பார்க்கும் போது நாம் அடையும் மகிழ்ச்சிக்கு அளவ இல்லை. எல்லா குழந்தைகளுக்கும் இத்தகைய சொகுசான தூக்கம் கிடைப்பதில்லை.

நாம் சில நேரங்களில் சுகாதாரமற்ற இடங்களிலும், பிளாட்பாரங்களிலும் ஒரு போர்வைகூட இல்லாமல் கந்தலான துணிக்குள் உடலை குறுக்கிக்கொண்டு தூங்கும் குழந்தைகளைப் பார்க்கும்போது மனது வேதனைப்படுகிறது என்கிறார் RID 3131, RC புனே கன்டோன்மென்ட் தலைவர் சர்ஃபிராஸ் பொஷியா.



*பள்ளியில் படுக்கை பொதிகள் வழங்கும் நிகழ்ச்சி.*


இந்த காட்சிதான் ஏழை குழந்தைகளுக்கு நல்ல ஆழ்ந்த அமைதியான தூக்கத்தைத் தரும் ஒரு திட்டத்தைச் செயல்படுத்த இந்த ரோட்டரி சங்கத்தினருக்குத் தூண்டுகோலாக இருந்தது. கடந்த 25 ஆண்டுகளாக ஏழை குழந்தைகளுக்கு Childrens's Blisண் திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றனர். ஸ்லீப்பிங் சில்ரன்ஸ் அரவுண்ட் தி வேர்ல்டு- (SCAW) என்ற அமைப்பு இத்திட்டத்திற்கு உதவி வருகிறது. இதற்கான பயனாளிகளை சங்கம் தேர்வு செய்கிறது. ஒவ்வொரு குழந்தைக்கும் பாய், கொசுவலை, குழந்தைகளுக்கான உடை,செருப்பு, கல்வி கற்பதற்கான உபகரணங்கள் என 28 பொருள்கள் கொண்ட கிட் வழங்கப்படுகிறது. ரோட்டரி சங்கம் இவற்றை உள்ளூரிலேயே குறைந்த விலைக்கு வாங்குகின்றன. நாங்கள் இதுவரை புனே மற்றும் சாங்லியை சுற்றியுள்ள பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளுக்கு ரூ.1.52 கோடி மதிப்பில் 8 ஆயிரம் கிட் களை வழங்கியுள்ளோம் என்று பெருமையுடன் கூறுகிறார் பொஷியா. SCAW அமைப்பைச் சேர்ந்த தொண்டர்கள் கனடா நாட்டின் டொரன்டோ நகரிலிருந்து இங்குவந்து குழந்தைகளுடன் உரையாடி அவர்களுக்கு என்ன தேவை என்பதைப் புரிந்துகொண்டு செயல்படுகின்றனர் என்றார் பொஷியா.

> நாங்கள் இதுவரை புனே மற்றும் சாங்லியை சுற்றியுள்ள பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளுக்கு ரூ.1.52 கோடி மதிப்பில் 8 ஆயிரம் கிட்களை வழங்கியுள்ளோம்.
>
> **சர் ஃ பிராஸ் பொஷியா**
> RC புனே கன்டோன்மென்ட் தலைவர்.

SCAW அமைப்பின் நிறுவனர் முர்ரே டிரைடெனுக்கு புனே என்றால் தனி பிரியம் உண்டு. ஏனெனில் குழந்தைகளுக்கான இந்த செயல்திட்டத்தை முதல் முதல் உருவாக்கியதே புனே தானே என்கிறார் பொஷியா.

செங்கல் விற்கும் தொழிலில் ஈடுபட்டிருந்த முர்ரே டிரைடென் 1970-களில் ஒருமுறை தனது மனைவி மார்கரெட்டுடன் பாகிஸ்தான் சென்றிந்த போது அங்கு குழந்தைகள் தெருவோர நடைமேடைகளில் எந்த பாதுகாப்பும் இல்லாமல் தூங்குவது கண்டு மனம் கலங்கிவிட்டார். பின்னர் குழந்தைகள் நல்ல முறையில் தூங்கவேண்டும் என்பதற்காக சர்வதேச அளவில் ஓர் இயக்கத்தைத் தொடங்கினார். முதன் முதலாக புனே நகருக்கு வந்து, பாய், போர்வை, கொசுவலை உள்ளிட்ட 28 பொருள்களை வாங்கி அவற்றை ஒரு பையில் போட்டு தெருவோர குழந்தைகள் 50 பேருக்கு வழங்கினார். இன்று அந்த இயக்கத்தைச் சேர்ந்த 2000 தொண்டர்கள் குழந்தைகள் நன்றாக தூங்கவேண்டும் என்பதற்காக தங்கள் நேரத்தையும், சக்தியையும் செலவிட்டு வருகின்றனர்.

இத்திட்டம் ரோட்டரி உறுப்பினர்களின் இதயத்தை நெகிழவைத்து விட்டது. நாங்களும் இப்போது முர்ரே டிரைடெனின் கனவை நனவாக்குகிறோம் என்கிறார் பொஷியா.■




# நம்பிக்கைதான் வாழ்க்கை!

சந்தியா ராவ்

*Baking cakes in Kigali என்ற புத்தகத்தின் கதையிற்கும் இன்றைய கொரோனா வைரஸ் தாக்குதலுக்கும் உள்ள ஒரு ஒற்றுமை...*


ருவாண்டாவில் இனப்படுகொலை நடைபெற்றதன் பின்னணியில் எழுதப் பட்டது Baking Cakes in Kigali என்னும் நாவல். இதை எழுதியவர் கெயில் பார்கின். ஜாம்பியாவில் பிறந்த கெயில் பார்கின், ருவாண்டாவில் தங்கியிருந்து அங்கு இனப்படுகொலையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஆறுதல் கூறி, அவர்கள் வாழ்வில் ஒளியேற்றியவர். உலகமே ஊரடங்கால் கட்டுண்டு கிடக்கும் இன்றைய சூழலில் இந்த நாவல் பொருத்தமானது. ஒருவருக்கு ஒருவர் ஆறுதலாக இருக்க வேண்டும். எச்சரிக்கையுடன் செயல்பட்டால் எதையும் வெற்றிகொள்ள முடியும் என்பதுதான் கெயிலின் நாவலின் முக்கிய அம்சம்.

தான்ஸானியாவை பிறப்பிடமாகக் கொண்ட ஏஞ்சல் துங்கரஸா, தனது கணவர் பயஸ் உடன் ருவாண்டாவில் குடியேறுகிறார். எய்ட்ஸ் நோயால் மகனும், மகளும் இறந்துவிட 5 பேரக்குழந்தைகளை தனது கண்காணிப்பில் வளர்த்து வருகிறார். திருமணம், பிறந்தநாள் உள்ளிட்ட நிகழ்ச்சிகளுக்கு கேக் தயாரித்து விற்றுவரும் ஏஞ்சல், தன்னைச் சுற்றியிருப்பவர்களின் சோகக் கதைகளைக் கேட்டறிந்து அதற்கான தீர்வுகளையும் சொல்லி வருகிறார். ஏஞ்சல், ஒருதாய், கேக் தயாரிப்பாளர் என்பதற்கும் மேலாக தன்னுடைய சமுதாயத்தினடம் எழுச்சியை ஏற்படுத்தி வருகிறார். ஏஞ்சலைத் தேடி வருபவர்கள் கேக் மட்டும் ஆர்டர் செய்வதில்லை. தங்களின் சோகக் கதைகளையும் இவரிடம் சொல்வார்கள். ஆனால், ஏஞ்சல் அவர்களை ஒருமுகப்படுத்தி அவர்களின் வாழ்வில் நம்பிக்கை ஒளியை ஏற்றுகிறார். வறுமை, எய்ட்ஸ், HIV நோய்கள், பழங்குடியினருக்குள் அடிக்கடி நடைபெறும் சண்டை என ஆப்பிரிக்காவைச் சுற்றி நடைபெறும் பல்வேறு விஷயங்களை மையப்படுத்தி எழுதப்பட்டது இந்த புத்தகம்.

*உலகமே ஊரடங்கால் கட்டுண்டு கிடக்கும் இன்றைய சூழலில் இந்த நாவல் பொருத்தமானது.*

தூதர் ஒருவரின் மனைவி கேக் ஆர்டர் செய்ய வரும்போது அவரிடம் தனது குடும்ப சூழ்நிலையை விவரிக்கிறார் ஏஞ்சல். எங்கள் குழந்தைகளை இறைவன் எடுத்துக்கொண்டுவிட்டான். பேரக்குழந்தைகளுக்குத்தான் நாங்கள் இப்போது பெற்றோராக இருக்கிறோம். வாழ்க்கையில் இறப்பு எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். துப்பாக்கிக் குண்டுக்கும் பலியாகலாம், இரத்தக்கொதிப்பு ஏற்பட்டும் உயிரிழக்கலாம். ஆனால், பெரும்பாலும் வைரஸ் நோய் தாக்குதல் காரணமாகவே பலரும் உயிரிழக்கின்றனர். எனது இரு பேரக் குழந்தைகளையும் சரியாக கவனித்து வளர்க்கா விட்டால் அவர்களும் வைரஸ் நோய் தாக்குதலுக்கு பலியாகிவிடுவார்களோ என்கிற கவலை எனக்கு இருக்கிறது என்று தெரிவித்துள்ளார்.

இந்தச் சூழ்நிலையில் எதிர்பாராமல் ஒருநாள், நோய்களால் தாக்கப் பட்டவர்களை வைத்துப் பாதுகாக்கும் மையத்தில் நர்ஸாக பணிபுரியும் ஒடிலி என்ற பெண், தனது சகோதரனுக்காக கேக் ஆர்டர் செய்ய வருகிறார். அப்போது ஏஞ்சல் அவரிடம், தனது இரு பேத்திகளின் நிலை குறித்த கவலைகளை வெளியிடுகிறார். உடனே அந்தப் பெண், தான் வேலை பார்க்கும் மையத்துக்கு குழந்தைகள் இருவரையும் அனுப்புமாறும், அவர்களை தான் பார்த்துக் கொள்வதாகவும் கூறுகிறார். மேலும் அக்குழந்தைகளிடம்




*நாம்கூட மன அழுத்தம், மனவேதனையுடன் இருக்கும்போது அதிலிருந்துவிடுபட சமைப்பதில், அதாவது கேக் தயாரிப்பது, ரொட்டி செய்வது அல்லது வெங்காயம் நறுக்குவது போன்ற வேலைகளில் ஈடுபடலாம்.*

HIV, எய்ட்ஸ் நோய் குறித்து எடுத்துக்கூறி, அவர்களின் பல சந்தேகங்களுக்கு பதிலளிப்பதாகவும் உறுதியளிக்கிறார்.

ஏஞ்சலிடம் கேக் ஆர்டர் செய்யவரும் பலரும் அவரிடம் தங்களின் சோகக் கதைகளை பகிர்ந்துகொள்வதுண்டு. ஏஞ்சலும் அவர்கள் பேசு வதிலிருந்து அவர்களின் மனநிலையை அறிந்து அதற்கு ஏற்ற வகையில் கேக் தயார் செய்து கொடுப்பதுண்டு. தாம் தயாரித்த கேக் பற்றி வாடிக்கையாளர்களிடம் ஏஞ்சல் விவரிப்பதே புதுமையானதாக இருக்கும்.

நாம் கூட மன அழுத்தம், மனவேதனையுடன் இருக்கும்போது அதிலிருந்து விடுபட சமைப்பதில், அதாவது கேக் தயாரிப்பது, ரொட்டி செய்வது அல்லது வெங்காயம் நறுக்குவது போன்ற வேலைகளில் ஈடுபடலாம். புதிதாக ஏதாவது சமைக்க விரும்பினால் சமூக வலைத்தளங்களுக்குள் சென்று பார்த்தால் இவற்றை எப்படிச் செய்வது என்பது நமக்குப் புரியவரும். கொவிட்-19 என்னும் கொடிய அரக்கன் உலகையே அச்சுறுத்திவரும் இந்த நெருக்கடியான நேரத்தில் வீட்டிலேயே முடங்கிக் கிடக்கும் நாம், சமூக வலைத்தளங்கள் மூலம் விதவிதமான உணவுகளை எப்படித் தயாரிப்பது என தெரிந்துகொண்டு அதை செய்து பார்க்கலாம். கேக் தயாரிப்பதும் அது போன்றது தான்.

இரண்டாவதாக நாம் இருக்குமிடத்திலேயே நிஜ வாழ்க்கையின் பல்வேறு முகங்களைப் பார்க்கலாம். இவற்றின் ஒருங்கிணைப்புதான் ஏஞ்சல். லியோகாடி என்பவர் மளிகைக்கடை வைத்துள்ளார். தனது ஆண் நண்பருடன் அவருக்கு அடிக்கடி பிர்ச்னை ஏற்படுவதுண்டு. அதற்குக் காரணம், அந்த நண்பருக்கு வேறு ஒருபெண் நண்பராக இருப்பதுதான். பிரச்னைகள் எதுவாக இருந்தாலும் அதற்கு தீர்வு இருக்கிறது. இங்குள்ள பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் பிள்ளை என்பவர் வகுப்பில் மாணவர்களுக்கு தொழில்முனைவோராவது எப்படி என்பதுபற்றி வகுப்பு எடுப்பார். ஆனாலும் செய்முறை விளக்கம் அளிக்க அவர் ஏஞ்சலை அழைப்பதுண்டு.

ருவாண்டாவில், கிகோன்கோரோ என்ற இடத்தில் பாதுகாப்பு அளிப்பதாகக் கூறி அழைத்துச் செல்லப்பட்ட பல பெண்கள் திட்டமிட்டு படுகொலை செய்யப் பட்டனர். இந்தஇடத்தை ஏஞ்சல், அவரது கணவர் பயஸ் உள்ளிட்ட சிலர் பார்த்துவிட்டு மீண்டும் இந்த இடத்துக்கு வரவேண்டாம் என பார்வையாளர்கள் புத்தகத்தில் எழுதிவிட்டு வந்தனர். இதுபோன்ற சம்பவங்களை வாழ்நாளில் மீண்டும் பார்க்கக்கூடாது என்பதுதான் அனைவரின் விருப்பமும்.

ருவாண்டாவில் வாழ்ந்த காலத்தில் இருள் சூழ்ந்த பலரின் சோகக் கதைகளையும் தமது சொந்த அனுபவங் களையும் செம்மைப்படுத்தி உண்மை நிகழ்ச்சிகளை நாவலாகத் தந்துள்ளார் பார்கின்ஸ் என்கிறார் அலெக்ஸாண்டர் மெக்கால் ஸ்மித். பார்கின்ஸ் நாவல், இன்றைய நிலைக்கும் பொருத்தமானது தான்.

இன்று நாம் சமூக இடைவெளி பற்றி பேசி வருகிறோம். இது தொடர்பான பல கேள்விகள் நம்முள் எழுகின்றன. ஆப்பிரிக்கா எப்படி என்பதை கெயில் 2009-ல் ஒரு பேட்டியில் உபுன்டு என்ற தென்னாப்பிரிக்க மொழியில் விவரிக்கிறார். மனிதநேயத்துடன் எப்படிச் செயல்படுவது, ஒருவர் மற்றொருவரிடம் எப்படி பெருந்தன்மையுடன் நடந்துகொள்ள வேண்டும், மற்றவர்களுக்கு உதவி செய்வதன் மூலம் நம்மை நாமே மேம்படுத்திக்கொள்வது, அனைவரிடமும் எப்படி தொடர்பு ஏற்படுத்திக் கொள்வது என பல விஷங்களை அலசுகிறார். இறுதியில் சுயநலம் இல்லாமல், தனித்திருக்காமல் பொது சேவையில் ஈடுபடுவதன் முக்கியத்தை உலகிற்கு உணர்த்துகிறார். அந்தவகையில் பார்த்தால் Baking Cakes in Kigali வாசகர்களை புதிய திசையை நோக்கி அழைத்துச் செல்கிறது என்று தான் சொல்லவேண்டும்.

*கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.*

# ரவி வட்லாமணி இயக்குநராக நியமனம்

ரோட்டரி செய்திக்குழு



RID 3150ன் PDG ரவி வட்லாமணியை 4 மற்றும் 7வது மண்டலங்களுக்கு 2021–23-ம் ஆண்டுகளுக்கு இயக்குநராக நியமிப்பதாக RI தலைவர் மார்க் மலோனி அறிவித்துள்ளார்.

வாத்லாமணி, ஆந்திர மாநிலம், குண்டூர் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர். 2001–02-இல் இவர் மாவட்ட ஆளுநராகவும் பணியாற்றியுள்ளார். இவரது மனைவி ராஜ்யலட்சுமி குண்டூர் ஆதர்ஷ் ரோட்டரி சங்க உறுப்பினர். இவரும் 2010–11ல் மாவட்ட ஆளுநராக செயலாற்றியுள்ளார். வட்லாமணி, தமது மாவட்டத்தில் பொறுப்பில் இருந்தபோது குடிநீர் திட்டங்களைச் செயல்படுத்துவது, பள்ளிகளுக்கு அடிப்படை வசதி களைச் செய்து கொடுப்பது, மகளிர்க்கு அதிகாரம் கிடைப்பதை உறுதிப்படுத்துவது என பல்வேறு பணிகளை நிறைவேற்றியுள்ளார். தனது சிறப்பான பணிக்காக ரோட்டரி சங்கத்தின் பல்வேறு விருதுகளையும் பாராட்டுகளையும் பெற்றவர்.

வட்லாமணி, அவரது மனைவி இருவரும் சாண்டியாகோவில் நடைபெற்ற சர்வதேச கூட்டத்தில் பயிற்சியாளர்களாக செயலாற்றியவர்கள். AKS உறுப்பினர்களாகவும் உள்ளனர்.■

---

Rotary PEOPLE OF ACTION

# ரோட்டரி உதவியால் புதுப்பொலிவு பெற்ற அரசுப் பள்ளி!

மத்தியப்பிரதேச மாநிலம், பர்கேடா போந்தர் என்ற இடத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளி இப்போது புதுப்பொலிவுடன் விளங்குகிறது. ரோட்டரி மாவட்டம் 3040-க்கு உட்பட்ட போபால் ஹில்ஸ் ரோட்டரி சங்கத்தினர், ரோட்டரி இந்தியா எழுத்தறிவு இயக்கத்திட்டத்தின் கீழ் இந்தப் பள்ளியை தங்களின் முயற்சியால் ஹாப்பி பள்ளியாக மாற்றியமைத்துள்ளனர்.

தங்கள் பள்ளியை சீரமைத்து புதுப்பித்துத் தருமாறு அந்த அரசுப் பள்ளியின் முதல்வர் ரோட்டரி சங்கத் தலைவர் சர்மாவிடம் முன்னதாக வேண்டுகோள் விடுத்திருந்தார்.

நானும், சங்கத்தின் இதர உறுப்பினர்கள் சிலரும் அந்தப் பள்ளிக்குச் சென்று பார்த்தபோது, பள்ளியின் தோற்றம் நாங்கள் எதிர்பார்த்த அளவு இல்லை. உடனே பள்ளியைச் சீரமைத்து புதுப்பொலிவுடன் திகழ்வதற்கான நடவடிக்கையில் இறங்கினோம் என்றார் சர்மா.

முதலில் பள்ளிக்கு மின் இணைப்பும், குடிநீர் இணைப்பும் கிடைக்க ஏற்பாடு செய்தோம். அடுத்து



DG *தீரன் த்தரா புதுப்பித்த பள்ளியை திறந்து வைக்கிறார்.*

வகுப்பறைகளில் மின்விசிறி, LED விளக்குகள் பொருத்தப்பட்டன. பள்ளி மாணவர்களுக்கு கைகழுவும் இடம், தண்ணீர் குடிக்கும் இடம், ஆடவர், மகளிர்க்கு என தனித்தனியாக கழிப்பறைகள் கட்டித்தந்தோம். வயதுக்கு வந்த மாணவிகளுக்காக சானிடரி நாப்கின் வசதியும் செய்துதரப் பட்டது. வகுப்பறையின் தரைகளும், சுற்றுச்சுவர்களும் புதுப்பிக்கப் பட்டன. புதிதாக வர்ணம் பூசப்பட்டன. வகுப்பறைகளில் காற்றோட்ட வசதிக்காக ஜன்னல்களும் அமைக்கப்பட்டன. பள்ளியின் பர்பிரதான வாயிலில் பாதுகாப்பு கருதி இரும்புக் கதவுகள் பொருத்தப்பட்டன. இவ்வளவும் 20 நாள்களில் முடிவடைந்தன என்றார் சர்மா.

புதுப்பொலிவு பெற்ற மகிழ்ச்சிப் பள்ளியை DGN M K மிஸ்ரா மற்றும் பர்கேடா போந்தர் கிராமப் பஞ்சாயத்துத் தலைவர் பிரேம்பாய் மீனா முன்னிலையில் DG திரன்தத்தா திறந்துவைத்தார்.■

## Rotary News Subscription Remittances

You can pay the **Rotary News / Rotary Samachar** subscription online

### Our Bank details:

Bank : HDFC Bank SB Account

Branch : Montieth Road Egmore, Chennai

A/c Name : Rotary News Trust

A/c No. : 50100213133460

IFSC Code : HDFC0003820

### E mail us following details:

Name of Club

President/Secretary's name

Amount/Date of transfer/UTR Number

For physical payment by cheque or cash in bank, write **Club Name only** without prefixing "Rotary club of". Eg. Rotary Club of Delhi Central should be written: Delhi Central.

## Rotary at a glance

| | | |
|---|---|---|
| Rotarians | : | 1,217,072 |
| Clubs | : | 36,118 |
| Districts | : | 525 |
| Rotaractors | : | 174,030 |
| Clubs | : | 10,495 |
| Interactors | : | 336,421 |
| Clubs | : | 14,627 |
| RCC | : | 10,996 |

As on April 17, 2020

*Please note Interact clubs that have not reported Interact Adviser in the past two Rotary years, are placed in "Suspended" status effective Oct 1, 2019.

## Membership Summary

As on April 1, 2020

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians | Rotaract Clubs | *Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|
| 2981 | 114 | 4,924 | 267 | 48 | 38 | 223 |
| 2982 | 68 | 3,134 | 181 | 85 | 87 | 55 |
| 3000 | 130 | 5,510 | 523 | 188 | 253 | 211 |
| 3011 | 88 | 3,704 | 940 | 51 | 87 | 26 |
| 3012 | 102 | 3,765 | 946 | 53 | 69 | 59 |
| 3020 | 73 | 4,279 | 246 | 54 | 57 | 350 |
| 3030 | 94 | 5,098 | 688 | 102 | 161 | 287 |
| 3040 | 90 | 2,137 | 252 | 37 | 45 | 144 |
| 3053 | 64 | 2,826 | 489 | 19 | 39 | 103 |
| 3054 | 128 | 6,195 | 1,150 | 79 | 137 | 523 |
| 3060 | 96 | 4,532 | 668 | 56 | 60 | 143 |
| 3070 | 106 | 3,178 | 448 | 45 | 20 | 58 |
| 3080 | 84 | 3,489 | 324 | 90 | 138 | 115 |
| 3090 | 79 | 2,082 | 56 | 37 | 0 | 122 |
| 3100 | 100 | 2,688 | 382 | 13 | 14 | 146 |
| 3110 | 128 | 3,811 | 333 | 28 | 0 | 105 |
| 3120 | 79 | 3,348 | 470 | 43 | 18 | 53 |
| 3131 | 137 | 5,602 | 1,247 | 104 | 174 | 116 |
| 3132 | 85 | 3,569 | 383 | 33 | 81 | 158 |
| 3141 | 103 | 5,811 | 1,413 | 118 | 130 | 87 |
| 3142 | 93 | 3,403 | 713 | 79 | 118 | 65 |
| 3150 | 93 | 3,675 | 385 | 58 | 122 | 116 |
| 3160 | 72 | 2,511 | 171 | 28 | 3 | 83 |
| 3170 | 129 | 5,808 | 766 | 76 | 192 | 169 |
| 3181 | 81 | 3,593 | 347 | 63 | 192 | 118 |
| 3182 | 83 | 3,225 | 272 | 49 | 90 | 97 |
| 3190 | 129 | 5,145 | 758 | 137 | 133 | 60 |
| 3201 | 145 | 5,693 | 463 | 104 | 72 | 50 |
| 3202 | 130 | 5,319 | 329 | 86 | 243 | 46 |
| 3211 | 143 | 4,669 | 350 | 8 | 23 | 132 |
| 3212 | 103 | 4,224 | 333 | 101 | 187 | 146 |
| 3231 | 93 | 3,829 | 459 | 52 | 71 | 357 |
| 3232 | 127 | 5,192 | 903 | 129 | 185 | 92 |
| 3240 | 91 | 3,150 | 426 | 51 | 365 | 190 |
| 3250 | 102 | 3,954 | 709 | 62 | 63 | 182 |
| 3261 | 72 | 2,654 | 380 | 16 | 18 | 43 |
| 3262 | 106 | 3,737 | 449 | 46 | 36 | 77 |
| 3291 | 155 | 3,853 | 806 | 88 | 86 | 617 |
| **India Total** | **3,895** | **153,316** | **20,425** | **2,516** | **3,807** | **5,724** |
| 3220 | 71 | 1,994 | 285 | 83 | 123 | 73 |
| 3271 | 94 | 1,523 | 279 | 65 | 19 | 22 |
| 3272 | 150 | 1,821 | 313 | 52 | 15 | 43 |
| 3281 | 221 | 5,971 | 932 | 232 | 45 | 196 |
| 3282 | 165 | 4,460 | 529 | 186 | 39 | 44 |
| 3292 | 123 | 5,007 | 802 | 132 | 111 | 115 |
| **S Asia Total** | **4,719** | **174,092** | **23,565** | **3,266** | **4,159** | **6,217** |

*Source: RI South Asia Office*

# போலியோப்ளஸ்ஸுக்கான மின்-ஏலம் மற்றும் கையால் செய்யப்பட்ட நகைகள்

ரோட்டரி செய்திக்குழு



சமீபத்திய முடக்கத்தின்போது, மானவ்தா கா கஹ்னா (மனிதத்தன்மை ரத்தினம்) என்ற ஒரு தனித்துவமான இணைய நிதி திரட்டல் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது உலகின் மிகச் சிறந்த உணவுக் குழு. தேசிய ஒருங்கிணைப்பாளரான ஆபா ஜா சௌதரி, RID 3011, இதை வழிநடத்தினார், ஏப்ரலில் அவர் நடத்திய 'இளம்பிள்ளைவாதத்தை முடித்துவைப்போம்' என்ற பரப்புரையின் ஒரு பகுதியாக இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

போலியோப்ளஸ்-ஸுக்கு நிதி திரட்டுவதற்காக ஆபா உருவாக்கியிருந்த கைவினைப்பொருள் நகைகள் இந்த முகில் ஏலத்தின்மூலம் ரூ.11.2 லட்சம் திரட்டுவதற்கு உதவின; கேட்ஸ் அறக்கட்டளை இதற்கு 1:2 விகிதத்தில் நன்கொடையளிப்பதால், இந்தத் தொகை ரூ.33.5 லட்சத்துக்கு மேல் செல்லும்'' என்றார் அவர்.

பல மாவட்டங்களில் நடைபெறும் ஒரு திட்டம் என்றமுறையில், WGM (www.wgmeal.com) 83 நாடுகளில் நடத்தப்படுகிறது, போலியோப்ளஸ்-ஸுக்கு நிதி திரட்டியபடி ரோட்டரியின் பொதுத் தோற்றத்தைக் கட்டமைக்கிறது.

**தனித்துவமான தளம்**

TV நிகழ்ச்சித் தொகுப்பாளரும் சமூகச் செயல்பாட்டாளருமான ஆபா, முடக்கத்தின்போது தன்னுடைய ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி நகைகளைச் செய்ய விரும்பினார். அவர் இந்தப் பணியைத் தொடங்கியபோது, நகைகள் மிகவும் நேர்த்தியாக வருவதை உணர்ந்தார், அவற்றை ஏலம் விட்டால் என்ன, அதன்மூலம், WGM பதாகையின் கீழ் இளம் பிள்ளைவாதத்தை நீக்குவதற்காக நிதி திரட்டினால் என்ன என்ற யோசனை வந்தது.

RIPN சேகர் மேத்தா, ராசி, RIDகள் கமல் சாங்க்வி (சோனலுடன்), பரத் பாண்ட்யா (மாதவியுடன்), அறங்காவலர் குலாம் வாஹன்வடி, RID டேவிட் ஸ்டோவல், RRFC நான்சி பார்பீ மற்றும் அறங்காவலர் வேட்பாளர் அஜீஜ் மேமன் உள்ளிட்ட பல ரோட்டரி பன்னாட்டுத் தலைவர்கள் இந்த ஜூம் ஏலத்தில் பங்கேற்றார்கள். முடக்கத்தின்போது இப்படியொரு புதுமைச்சிந்தனை கொண்ட யோசனையைச் செயல்படுத்தியதற்காக அவர்கள் WGM குழுவை நன்றாகப் புகழ்ந்தார்கள்.

இணையத்தில் குழுமிய இந்தத் தலைவர்களிடையில் RIPN மேத்தா பேசுகையில், இது ஒரு படைப்பூக்கம் மிக்க முயற்சி என்றார், COVID-19 பரவுகிறபோதும், இளம்பிள்ளைவாதத்தை நீக்கும் நம்முடைய பணியை நாம் மறந்து விடவில்லை.

ராசி மேத்தா தொடர்ந்து பேசுகையில், மனிதத்தன்மையுடன் சேர்ந்து படைப்பூக்கத்துக்கு ஒரு மாறுபட்ட பொருள் கிடைத்துள்ளது'' என்றார்.

WGMன் நிறுவனர் உறுப்பினர், சுசன்னெ ரியா, RID 9550, ஆஸ்திரேலியா. அவரை மேத்தா பாராட்டினார், பங்கேற்பாளர்களை மேலும் நகைகளை வாங்கும்படி ஊக்குவித்தார்.

20 நாடுகளைச் சேர்ந்த ரோட்டரியன்கள் இந்த மின்-ஏலத்தில் கலந்துகொண்டார்கள், மேலும், சாதகமற்ற சூழ்நிலையிலும், ரோட்டரியன்கள் இந்த நோக்கத்துக்காக (இளம்பிள்ளைவாதத்தை ஒழித்தல்) ஒன்றுகூடிப் பணம் திரட்டலாம் என்று கற்றுக் கொண்டார்கள். இந்த ஏலத்தின் மூலம், முதல் இரண்டு மணிநேரங்களில் 14,966 திரட்டப்பட்டது, இதில் பில் கேட்ஸ் அறக்கட்டளை பங்கேற்றபிறகு, இந்தத் தொகை 44,898ஆக உயர்ந்தது, இந்த எண் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டிருக்கிறது. விரைவில், இன்னும் பெரிய ஓர் இலக்குடன் இதேபோன்ற ஒரு நிகழ்ச்சியை நாங்கள் உருவாக்குவோம்'' என்றார் ஆபா. ■

**வாசகர்களுக்கு**

*மாவட்ட ரோட்டரி மற்றும் ரோட்டரி சங்கங்கள் சில* rotarynews@rosaonline.org *என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைத்த திட்ட அறிக்கைகளும், அதற்கான படங்களுக்கும் தொழில்நுட்ப மற்றும் நிர்வாகக் கோளாறுகளால் எங்களுக்கு சரிவர கிடைக்கவில்லை.*

*எனவே ரோட்டரி சங்கத்தினர் இவற்றை அனுப்பிவைக்க* rotarynewsmagazine@gmail.com *என்ற புதிய மின்னஞ்சல் முகவரியை ஏற்படுத்தியுள்ளோம். இனி அதிலேயே தங்கள் திட்ட அறிக்கைகள் மற்றும் படங்களை அனுப்பிவைக்கலாம்.*

*ஆசிரியர்.*

# மாதவிலக்குபற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி

ரோட்டரி செய்திக்குழு



R3 *பேட்களைத் தயாரிப்பது பற்றிய பயிலரங்கம்.*

மாதவிலக்குபற்றிய பொது மனநிலையை மாற்றவேண்டுமென்றால், பல பூதங்களை விரட்டவேண்டும், இதுபற்றிய களங்கவுணர்வு, சமூக, பண்பாட்டுப் பேசாப்பொருட்களை நேரடியாகச் சந்திக்கவேண்டும். இதைத்தான் RC ஜாம்நகர், RID 3060ன் உறுப்பினர்கள் உணர்ந்தார்கள். பெண்களிடையே மனநிலை மாற்றத்தைக் கொண்டுவந்து முன்னேற்றத்தை உறுதிசெய்வதற்காக, இவர்கள் பல பயிலகங்களை, MHM விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தினார்கள்.

நலிந்த பின்னணியைச் சேர்ந்த பெரும்பாலான பெண்களுக்கு அடிப்படைத் தேவைகளான கீழ் உள்ளாடை, முறையான ஆடைகள் போன்றவை இல்லை; அவர்கள் மிகவும் ஊட்டச்சத்துக் குறைபாட்டுடனும் இருந்தார்கள்.

மாதவிலக்கின்போது அவர்கள் ஏன் பள்ளிக்கு வருவதில்லை என்று கேட்கப்பட்டபோது, “மாதவிலக்கு நேரத்தில் வெளியில் செல்லக்கூடாது என்று எங்கள் தாய்மார்கள் கூறுகிறார்கள்; அது கெட்ட பூதங்களை ஈர்க்குமாம்; அவை எங்களைப் பிடித்துக்கொண்டுவிடுமாம்” என்று ஒரு பெண் சொன்னதாகச் சொல்கிறார் MHM திட்டத் தலைவர் ரக்ஷா ஜெயின்.

இதுபோன்ற மூட நம்பிக்கைகள் சமூகத்தட்டு சார்ந்தவை இல்லை. நகர்ப்புறக் குடும்பங்களிலும் இவை காணப்படுகின்றன. இர்வின் மருத்துவமனையில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஓர் MHM நிகழ்வை நடத்தியது இச்சங்கம்,

## சுற்றுச்சூழலுக்குக் கேடு விளைவிக்காத தீர்வு

ஆனால், தவறான நம்பிக்கைகளை, பிழையான கருத்துகளை உடைத்தபின், அவர்கள் போரில் பாதியைத்தான் வென்றிருப்பதாக உணரப்பட்டது. இன்னொரு பாதி, அவர்களுக்கு ஒரு நலமான, முறையான தீர்வை வழங்குவது; சானிட்டரி பேட்களின் பயன்பாடு சில முக்கியமான கேள்விகளை எழுப்புவதால், இந்தப் பாதியில் நாம் பின் தங்கியிருந்தோம்.

இந்தியாவில் சானிட்டரி பேட்களைத் தொடர்ந்து பயன் படுத்துகிறவர்கள் 43.3 கோடி பயன் படுத்தப்பட்ட பேட்களைத் தூக்கி எறிகிறார்கள்; இவற்றின் எடை, ஒன்பது லட்சம் டன். இவர்கள் தங்களுடைய வாழ்நாளில் தூக்கி எறியும் சானிட்டரி பேட்கள், 240 ஹெக்டேர் பரப்புள்ள நிலத்தை நிரப்பி விடக்கூடும்.

உண்மையான பிரச்னை, இந்தப் பேட்களில் உள்ள இயற்கையல்லாத பொருட்கள் சிதைவதற்கு 500 ஆண்டுகளாகின்றன. மிகவும் தொந்தரவு தரும் விஷயம், இவற்றில் புற்றுநோயை உண்டாக்கக்கூடிய டையாக்ஸின்கள் உள்ளன; இவை பெண்ணுறுப்புத் திசுக்களைப் படிப்படியாகக் காயப்படுத்துகின்றன என்றார் ரக்ஷா. இவருடைய MHM குழு இப்போது நலமான, விலை குறைவான, சுற்றுச்சூழலுக்குக் கேடு விளைவிக்காத பேட்களைக் கண்டறிந்துள்ளது.

RID 3060 முதல் பெண்மணி ஸ்வாதி ஷா வழங்கிய தாராளமான உதவியால் பெரும் அளவில் உற்பத்தி சாத்தியமானதால், விரைவில், இந்தச் சங்கத்தினர் குறைப்போம், மீண்டும் பயன்படுத்துவோம், மறுசுழற்சி செய்வோம் (R3) வகைப் பேட்களைப் பெரிய அளவில் வழங்கத்தொடங்கினார்கள். இந்தப் பேட்கள் சுற்றுச்சூழலுக்குக் கேடு விளைவிக்காதவை என்பதால், உண்டாகும் குப்பையைக் குறைக் கின்றன; இவற்றைப் பாதுகாப் பாக மீண்டும் பயன்படுத்தலாம்; மறுசுழற்சி செய்யப்பட்ட துணியிலிருந்து செய்யப்படுவதால், பொருளாதாரரீதியில் இவை கட்டுப்படியாகின்றன என்றார் ரக்ஷா.

## R3 பயிலரங்கம்

R3 பேட்களைத் தயாரிப்பதுபற்றி இந்தச் சங்கம் எட்டுப் பயிலரங்குகளை நடத்தியுள்ளது; ரூ.140,000 மதிப்புள்ள 2250 R3 பேட்கள் பலன் பெறு வோருக்கு வழங்கப்பட்டுள்ளன. ஒன்பது மாதங்களில், R3 திட்டங்கள் ஜாம்நகர் மாவட்டத்தில்மட்டும் 6,000க்கும் மேற்பட்ட பெண்களுக்குப் பலன் வழங்கியுள்ளன.

எங்கள் திட்டம் கென்யாபோன்ற நாடுகளையும் எட்டியுள்ளது; நாங்கள் எதிர்காலத்துக்காகப் பெரிய இலக்கு களை வைத்திருப்பதால், இது வெறும் தொடக்கம்தான் என்றார் அவர்.■

# COVID-19ன் போது, சமூக இணைப்புகள்

ஷீலா நம்பியார்

கொரோனா பரவிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில், நம்முடைய சொந்தப் பாதுகாப்புக்காகச் "சமூக விலகலை"ப் பின்பற்றவேண்டும் என்று நம் அனைவருக்கும் அறிவுறுத்தப்படுகிறது. ஒரு வேளை நாம் பிற மனிதர்களைச் சந்தித்தாலும், குறைந்தது 6 அடி விலகியிருக்கவேண்டும்.

வழக்கத்துக்கு மாறான இந்தச் சூழல், அநேகமாக இந்த ஆண்டின் மீதமுள்ள பகுதி முழுவதும் தொடரும், அல்லது, இந்த வைரஸை தடுக்கிற மற்றும் குணப்படுத்துகிற நல்ல மருந்துகள் கிடைக்கும் வரையாவது தொடரும்.

கேள்வி என்னவென்றால், சமூக விலகல் நம்மை நோய்ப்பரவலிலிருந்து தடுக்கிற அதே நேரத்தில், தொலை நோக்கில் பார்க்கிறபோது, இந்தப் பகுதியளவு தனிமைப்படுத்தல் மனத்தளவில் மற்றும் உணர்வளவில் நம்மை எப்படிப் பாதிக்கப்போகிறது?

நம்மில் சிலர் ஏற்கெனவே "கேபின் ஃபீவர்" எனப்படும் பிரச்னையில் சிக்கித் தருமாறுகிறோம், நம்முடைய சொந்த வீட்டிலேயே அடைபட்டிருப்பதை நினைத்து அஞ்சுகிறோம்

உண்மை என்னவென்றால், மனிதர்களுக்குச் சமூக இணைப்பு தேவை, அப்போதுதான் அவர்கள் நலத்துடன் இருப்பார்கள். நமக்கு நல்ல சமூக உறவுகள், உரையாடல்கள், மனிதத் தொடுகை, அன்பு மற்றும் நேயம் தேவை.

ஒப்பீட்டளவில், மெய்நிகர் வழிகளைப் பயன்படுத்திப் பிறருடன் தொடர்பு கொள்கிற அதிர்ஷ்டம் நமக்கு உள்ளதுதான், ஆனால், அது உண்மையான இணைப்பாகாது. ஒரு மெய்நிகர் அரட்டையில் பேசுவதும், நிஜ வாழ்க்கையில் நண்பர்களைச் சந்திப்பதும் ஒன்றில்லை.



## உணரப்படும் சமூகத் தனிமை - PSI

உணரப்படும் சமூகத் தனிமை என்பது, தனிமையாகவும் தனிமைப் படுத்தப்பட்டிருப்பதாகவும் எண்ணுகிற உணர்ச்சி ஆகும். எடுத்துக்காட்டாக, ஒரு கூட்டத்திலும் ஒருவர் தனியாக இருக்கலாம். எதார்த்தத்தில் பிறருடன் பழகுவதில் உண்மையான பிரச்னை கொண்ட மக்கள், இன்றைய சூழ்நிலையில் இன்னும் பெரிய சவாலைச் சந்திக்கலாம்.

இன்றைக்குப் பலர் அனுபவிக்கக் கூடிய இந்தத் தனிமை உணர்வின் விளைவுகளைக் குறைத்து மதிப்பிட இயலாது; கொரோனாவுக்குப்பிறகு நம்மை விழுங்கப்போகும் அடுத்த

சுனாமி, மனச்சோர்வு மற்றும் பதற்றம் போன்ற மனநல மற்றும் உணர்வுப் பிரச்னைகளாகதான் இருக்கும் என்று நான் ஐயப்படுகிறேன்.

**நல்ல தரமான உணர்வுகள் முக்கியம்**

உங்களுக்கு எத்தனை நண்பர்கள் உள்ளார்கள் என்பதைவிட, உறவுகளின் தரம்தான் உண்மையில் முக்கியம். ஒரே ஒரு நல்ல உறவு/நட்பு இருந்தாலும் போதும், உங்கள் வாழ்க்கைத் தரத்தில் அது ஒரு மிகப்பெரிய மாற்றத்தை உண்டாக்குகிறது. குடும்பம், நண்பர்கள் மற்றும் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களுடன் சமூக ரீதியில் நன்கு இணைந்திருப்பவர்கள் நீண்ட நாள் வாழ்கிறார்கள், கூடுதல் மகிழ்ச்சியுடன் உள்ளார்கள்.

நேரடியான மற்றும் மறைமுகமான வழிமுறைகளில் PSI நலனைப் பாதிக்கிறது, அவை ஹார்மோன் சார்ந்து, நரம்பியல் சார்ந்து, நடத்தை சார்ந்து, உணர்வு சார்ந்து அல்லது மரபு சார்ந்து அமையலாம். உடல் சார்ந்த தனிமைப்படுத்தல், ரத்த அழுத்த மாற்றங்கள், அறிவாற்றல் நலன் குறைதல் (குறிப்பாக முதியவர்களில்), தூக்கப் பிரச்னைகள், மனச் சோர்வு, தற்கொலை மற்றும் தற்கொலை எண்ணம் வரும் ஆபத்து மிகுதியாதல், மோசமான உணவுப் பழக்கங்கள் மற்றும் சில பழக்கங்களுக்கு அடிமையாதல் போன்ற பல கவலைகளுக்கு வழிவகுக்கலாம்.

**"சமூக அளவில் விலகியிருக்கிற" இந்த உலகில், தொடர்ந்து இணைந்திருப்பதற்கு நாம் என்ன செய்யலாம்?**

— இப்போதைய சூழ்நிலை உங்கள் கட்டுப்பாட்டைத் தாண்டிவிட்டது என்பதைப் புரிந்துகொள்ளுங்கள் மற்றும் ஏற்றுக்கொள்ளுங்கள். இப்போதைய சூழ்நிலையை எண்ணிப் பதற்றப்படுவது எந்த விதத்திலும் உதவப் போவதில்லை.

— உங்களுக்கென்று ஓர் அன்றாட ஒழுங்கை உண்டாக்குங்கள். வீட்டு வேலைகள், சமையல், வீட்டிலிருந்து பணியாற்றுதல், மளிகைப் பொருட்களை வாங்குதல், மெய்நிகர் தளங்களில் சமூக ஊடாடல், மெய்நிகர் உடற்பயிற்சி வகுப்புகள், இணையக் கருத்தரங்குகள் மற்றும் பணிக் கூட்டங்கள் போன்றவை இதில் இடம்பெறலாம்.

— எதார்த்தத்தை உணர்ந்திருங்கள். இவ்விதமான முடக்கம் மற்றும் தனிமைப்படுத்தல் பதற்ற உணர்வுகளை உண்டாக்குவது இயல்புதான். இதுபோன்ற வழக்கத்துக்கு மாறான ஒரு நேரத்துக்கு இது ஓர் இயல்பான எதிர்வினையாகும். நீங்கள் பதற்றமாக மற்றும் அமைதியற்று இருக்கும்போது, உணவு, மது அல்லது தீய பொருட்களைக் கொண்டு நமக்கு நாமே ஆறுதல் பெறலாம் என்று எண்ணுகிற சாத்தியம் பலமடங்கு மிகுதியாகிவிடுகிறது. இதைத் தவிர்க்க, உடற்பயிற்சி, தியானம், இசை போன்றவற்றைப் பயன்படுத்துங்கள்.

— உடற்பயிற்சி செய்யுங்கள்: உங்கள் வீட்டில் உடற்பயிற்சி கருவி இருந்தால், நாள்தோறும் ஒரு மணி நேரத்தை உடற்பயிற்சிக்காக வழங்குங்கள். இணையத்தில் பல மெய்நிகர் உடற்பயிற்சி வகுப்புகள் உள்ளன. அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

— நேர்வித உணர்ச்சியை வளர்த்துக் கொள்ளுங்கள் நேர்வித உணர்ச்சி என்பது, மூளையில் சரியான வேதியியல் சமநிலை மற்றும் நரம்புகள் சார்ந்த தூண்டுதலால் உண்டாக்கப்படும் ஓர் உணர்வாகும். நல்ல வாழ்க்கைமுறைப் பழக்கங்கள், உடற்பயிற்சி, முறையான ஊட்டச்சத்து, தியானம் போன்றவற்றால் இதைச் செயலுக்குக் கொண்டுவரலாம்.

நேர்வித உணர்ச்சியை மிகுதியாக்குவதன்மூலம், நீங்கள் பிறருடன் ஓர் உண்மையான முறையில் தொடர்பு கொள்கிற, இணைகிற சாத்தியம் மிகுதியாகும்.

— நலம் தரும் உணவுகளை உண்ணுங்கள்: நலம் தரும் உணவுகளை உண்பது வெறுமனே எடையைக் கட்டுப்படுத்துகிற விஷயம் மட்டுமில்லை, உங்கள் குடலை நலமாக வைப்பதற்கு அது முக்கியமாகும்.

— நன்றியுணர்வுடன் இருங்கள்: தொடர்ச்சியாக நன்றியுணர்வை உணர்கிற, வெளிப்படுத்துகிற மக்கள் கூடுதல் மகிழ்ச்சியுடன் உள்ளார்கள் என்று ஆய்வுகள் காண்பித்துள்ளன.

நம் அனைவருக்கும் இது ஒரு சோதனையான நேரமாக இருக்கலாம், எனினும், நாம் இதை நேர்விதமாகவும் பயன்படுத்தலாம்.

இதன் ஆசிரியரை *sheelanambiar@gmail.com* என்ற இணையதளத்தில் தொடர்பு கொள்ளலாம். *Website: www.drsheelanambiar.com*

*உங்களுக்கு எத்தனை நண்பர்கள் உள்ளார்கள் என்பதைவிட, உறவுகளின் தரம்தான் உண்மையில் முக்கியம்.*

# RI தெற்காசிய அலுவலக அறிவிப்பு



**வலதிலிருந்து:** PDG *சாம் பதிபந்த்லா, கணேஷ் பட், ரமேஷ் அகர்வால்,* RC *பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ்* Rtn D *ரவிசங்கர்,* RISAO *நிதி மேம்பாட்டு மேலாளர் சகுந்தலா ராஹா மற்றும் பவோலா ரவிசங்கர்.*

### நல்கை அறிக்கையளித்தல் தேவைகள்

ரோட்டரி (இந்தியா)-இலிருந்து வழங்கப்பட்ட அனைத்துப் பன்னாட்டு நல்கைகளுக்கும் (இயல்பானவை/வழிநடத்தப்பட்ட பரிசு/CSR) மே 31, 2020ல் ஓர் இடைக்கால அறிக்கை வழங்கப்படவேண்டும், இதில் மார்ச் 31, 2020 வரையிலான அனைத்து நடவடிக்கைகளும் இருக்கவேண்டும், திட்டம் நிறைவடைந்து இரண்டு மாதங்களுக்குள் ஒரு நிறைவு அறிக்கை சமர்ப்பிக்கப்படவேண்டும். இணையத்தில் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கும் சங்கங்கள் அவற்றுக்கு ஆதரவளிக்கும் ஆவணங்களையும் (மூலத் தாள் பிரதிகள்) வழங்கவேண்டும், அல்லது, தாள் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கிறவர்கள் ஆதரவளிக்கும் ஆவணங்களுடைய மென் பிரதிகளை வழங்கவேண்டும்.

### COVID-19ற்கு CSR நிதிகளைப் பயன்படுத்துதல்

இந்திய அரசாங்கத்தின் பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம், மார்ச் 23, 2020 தேதியிட்ட தன்னுடைய பொதுச் சுற்றறிக்கை எண்.10/2020ன் வழியாகப் பின்வருமாறு அறிவித்திருக்கிறது: CSR நிதிகளைக் COVID-19க்காகப் பயன்படுத்துவது, தடுத்தல் நலப் பராமரிப்பு, தூய்மை மற்றும் பேரிடர் மேலாண்மை உள்ளிட்ட நலப்பராமரிப்பு மேம்பாட்டுடன் தொடர்புடைய அட்டவணை VII, விஷயங்கள் எண் (டி) மற்றும் (XII) கீழ் CSR செயல்பாடாகத் தகுதி பெறும். CSR பங்களிப்புகளுக்காகச் சங்கங்கள்/மாவட்டங்கள் பெரு நிறுவனங்களை அணுகலாம். ஏதேனும் கேள்விகள் இருந்தால், RISAOல் உள்ள CSR ஊழியர்களுக்கு எழுதுங்கள், அதற்கான மின்னஞ்சல் முகவரி: Bhawna.verma@rotary.org அல்லது reeti.mondal@rotary.org.


**இணைய அறிக்கைச் சமர்ப்பிப்புடன், தேவையான ஆதரவளிக்கும் ஆவணங்களின் மூலப் பிரதிகளை அறக்கட்டளைக்குச் சமர்ப்பிக்கவேண்டும்.**

| அறிக்கையிடல் ஆவணங்கள் | இடைக்கால அறிக்கை | நிறைவு அறிக்கை |
|---|---|---|
| இணையத்தில் அறிக்கையைச் சமர்ப்பியுங்கள் | ஆம் | ஆம் |
| பில்கள்/விலைப்பட்டியல்கள்/ரசீதுகளைத் தரவேற்றுங்கள் | தேவையில்லை | ஆம் |
| பொறுப்பேற்பைத் தரவேற்றுங்கள் | தேவையில்லை | ஆம் |
| பலன் பெறுவோர் தகவல்களைத் தரவேற்றுங்கள் | தேவையில்லை | ஆம் |
| அனைத்து மூலத் தாள் பிரதிகளும் தேவை | | |
| மூலப் பயன்படுத்தல் சான்றிதழ் ரசீதுகள்/பணம் வழங்கிய அறிக்கை | ஆம் | ஆம் |
| வங்கிக் கணக்கு மூலப்பிரதி/சான்றளிக்கப்பட்ட உண்மைப் பிரதி | ஆம் | ஆம் |
| பணத்தைத் திரும்ப வழங்குதல், ஏதும் இருந்தால் | தேவையில்லை | ஆம் |

### நீர் மற்றும் சுகாதாரம் சார்ந்த மிகப்பெரிய பரிசு முயற்சி

சமீபத்தில் பெங்களூரில் TRF மற்றும் DG சமீர் ஹரியானி, D-3190 ஆகியோர் RC பெங்களூர் ரீச் அவுட்-உடன் இணைந்து, நீர், சுகாதாரம் மற்றும் தூய்மையை ஆதரிக்கும் ஒரு மிகப்பெரிய நிகழ்வை நடத்தினார்கள். இந்த நிகழ்ச்சியில் பெருநிறுவன அமைப்புகளுடைய தலைவர்கள், மிகப்பெரிய நன்கொடையாளர்கள், கலந்துகொண்டார்கள், அறங்காவலர் குலாம் வாஹன்வடி தலைமை விருந்தினராகப் பங்கேற்றார். ■


# On the racks




### There's gunpowder in the air

Author : **Manoranjan Bypari**
Translated from Bengali to English by Arunava Sinha
Publisher : **Eka**
Pages : **178; ₹360**

It's the early seventies. The Naxalbari Movement is gathering strength in Bengal. Young men and women have left their homes, picked up arms to free land from the clutches of feudal landlords and the state, and return them to oppressed landless farmers. They are being arrested en masse and thrown into high-security jails. In one such jail, five Naxals are meticulously planning a jailbreak. They must free themselves if the revolution is to continue. But petty thief Bhagoban, much too happy to serve frequent terms for free food and shelter, has been planted by Jailor Bireshwar Mukherjee among them as a mole. Only, Bhagoban seems to be warming up to them. *There's Gunpowder in the Air* is a searing investigation into what deprivation and isolation can do to human idealism. And Manoranjan Byapari is one of the most refreshing voices to emerge from Bengal in recent times.





### The adivasi will not dance

Author : **Hansda Sowendra Shekar**
Publisher : **Speaking Tiger Books**
Pages : **140; ₹237**

In this collection of stories, set in the fecund, mineral-rich hinterland and the ever-expanding, squalid towns of Jharkhand, Hansda Sowvendra Shekhar breathes life into a set of characters as robustly flesh and blood as the soil from which they spring, where they live, and into which they must sometimes bleed.

Troupe-master Mangal Murmu refuses to perform for the President of India and is beaten down; Suren and Gita, a love-blind couple, wait with quiet desperation outside a neonatal ward, hoping—for different reasons—that their blue baby will turn pink; Panmuni and Biram Soren move to Vadodara in the autumn of their lives, only to find that they must stop eating meat to be accepted as citizens; Baso-jhi is the life of the village of Sarjomdih but, when people begin to die for no apparent reason, a ghastly accusation from her past comes back to haunt her; and Talamai Kisku of the Santhal Pargana, migrating to West Bengal in search of work, must sleep with a policeman for ₹50 and two cold bread pakoras.

It is a mature, passionate, intensely political book of stories, made up of the very stuff of life. It establishes the author as one of our most important contemporary writers.




### The Life-Changing Magic of Tidying Up: The Japanese Art of Decluttering and Organizing

Author : **Marie Kond**
Publisher : **Ten Speed Books**
Pages : **258; ₹1,141**

Despite constant efforts to declutter your home, do papers still accumulate like snowdrifts and clothes pile up like a tangled mess of noodles?

Japanese cleaning consultant Marie Kondo takes tidying to a whole new level, promising that if you simplify and organise your home properly once, you'll never have to do it again. Most methods advocate a room-by-room or little-by-little approach, which doom you to pick away at your piles of stuff forever. The KonMari Method, with its revolutionary category-by-category system, leads to lasting results. None of Kondo's clients have lapsed (and she still has a three-month waiting list).

With detailed guidance for determining which items in your house "spark joy" (and which don't), this international best seller featuring Tokyo's newest lifestyle phenomenon will help you clear your clutter and enjoy the unique magic of a tidy home — and the calm, motivated mindset it can inspire.

Compiled by Kiran Zehra
Designed by Krishnapratheesh S



**RC சிதம்பரம் சென்ட்ரல்** — RID 2981

இச்சங்கம் மாவட்ட ஆட்சித் துணைத்தலைவர் அலுவலகத்தில் ஒரு காத்திருப்புக் கூடம், கழிப்பறைத் தொகுதியைக் கட்டியது, அவ்வளாகத்தில் மரங்களை நட்டது. ரூ 1.5 லட்சம் மதிப்புள்ள இத்திட்டம், ரோட்டரியின் பொதுத் தோற்றத்தை மேம்படுத்தியுள்ளது.

**RC புதுக்கோட்டை சிட்டி** — RID 3000

இந்நகருக்கு அருகிலுள்ள கிராமங்களைச் சேர்ந்த அன்றாடக் கூலிகளுடைய வாழ்வாதாரம் முடக்கத்தால் பாதிக்கப்பட்டது; ஆகவே, இச்சங்கத்தின் உறுப்பினர்கள் அக்கிராமங்களுக்குச் சென்று மளிகைப் பொருட்களை வழங்கினார்கள்.





**RC ராஜமுந்திரி ரிவர் சிட்டி** — RID 3020

முடக்கம் தொடங்கியதிலிருந்து நாள்தோறும் சுமார் 3,000 உணவுப் பொட்டலங்கள் தயாரிக்கப்பட்டுத் தேவையுள்ளவர்களுக்கு வழங்கப்படுகின்றன. சங்க உறுப்பினர்களுக்குச் சொந்தமான உணவகங்களில் உணவு தயாராகிறது; இந்தத் திட்டத்தை AKS உறுப்பினரான V பாஸ்கர் ராம் வழிநடத்துகிறார்.

**RC ஃபரீதாபாத் மிட்-டவுன்** — RID 3011

இந்தச் சங்கம் ரோட்டரி ரத்த வங்கியில் ஒரு தலஸ்ஸேமியா பராமரிப்பு மையத்தை அமைத்தது; $33,000 வழங்கிய முன்னாள் தலைவர் சதீஷ் கோஸ்ஸெய்ன் தலைமையில் ஒரு பன்னாட்டு நல்கையுடன் ($61,500) இது அமைக்கப்பட்டது. பன்னாட்டுக் கூட்டுச் சங்கமான RC லடினா $28,500 மதிப்புள்ள ஒரு காலகட்டப் பரிசைப் பங்களித்தது.



# செய்திகள்

**RC சோப்டா** — RID 3030
சோப்டாவைச் சுற்றியுள்ள ஆஷா பணியாளர்களுக்கு வழங்குவதற்காக 300 முகமூடிகளைத் தாசில்தார் அனில் காவிட்-டிடம் வழங்கியது இந்தச் சங்கம். கொரோனாவைரஸ்பற்றிய விழிப்புணர்வை உண்டாக்குவதற்காக இந்தச் சங்கம் ஆறு விளம்பரப் பலகைகளை அமைத்துள்ளது.





**RC இந்தூர் மேக்தூத்** — RID 3040
முகமூடிகளும் தூய்மைப்படுத்திகளும் COVID-19 பற்றிய தகவல்களை, அதைத் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கைகளைக் கொண்ட சிற்றேடுகளும் காவல்துறையினர் ஆதரவுடன் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன.





**RC ஜூனகாத்** — RID 3060
சங்க உறுப்பினர்கள் 500 உணவுப் பொட்டலங்களைத் தயாரித்தார்கள், உணவுக்கு வழியில்லாமல் சிக்கித்தவித்த இடம்பெயர்ந்த குடும்பங்களுக்குப் பெருநகர ஊழியர்களின் உதவியுடன் அவற்றை வழங்கினார்கள்.



**RC அம்ரித்சர் நார்த்** — RID 3070
கட்ரா மோத்தி ராம் காலனியில் ஒரு தூய்மைப் பரப்புரைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது, இதனால் 100க்கும் மேற்பட்ட வீடுகள் பலன் பெற்றன, இதற்கான தொற்றுநீக்கிகளை முன்னாள் தலைவர் சஞ்சய் மாலிக் வழங்கினார். பஞ்சாபின் முன்னாள் நல அமைச்சர் பல்தேவ் ராஜ் சாவ்லா மற்றும் பிற அரசியல் தலைவர்கள் இந்தப் பெரிய பரப்புரையில் பங்கேற்றார்கள்.

**RC ஜோத்பூர் மிட்-டவுன்** — RID 3053
வெப்பம் நிறைந்த வெய்யிலிலிருந்து காவல்துறையினரைப் பாதுகாப்பதற்காக Rtn மகேந்திர ஜெயின் அவர்களுக்கு 300 குடைகளை வழங்கினார்; 20,000க்கும் மேற்பட்ட உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. மருத்துவர்கள் மற்றும் துணை மருத்துவர்களைக் கொரோனாவைரஸிலிருந்து காப்பதற்காக மாவட்ட மருத்துவமனைக்கு PPE பொதிகள் வழங்கப்பட்டன.

**RC முசௌரி — RID 3080**

குடிமையியல் மருத்துவமனையின் CMOவான டாக்டர் பிரதீப் ராணா அவர்களிடம் மருத்துவ மற்றும் மருத்துவ ஊர்தி ஊழியர்கள் பயன்படுத்துவதற்கான நீண்ட பாதுகாப்பு முகமூடிகளை ரோட்டரியன்கள் வழங்கினார்கள். அதேபோன்ற முகமூடிகள் தூய்மைப் பணியாளர்களுடைய பயன்பாட்டுக்காக நகர் பாலிகா அலுவலகத்தில் வழங்கப்பட்டன.



**RC பத்மாபூர் — RID 3090**

சமூகத்தினரைக் கொரோனாவைரஸ் நோய்ப் பரவலிலிருந்து காப்பதற்காக, முகமூடிகள், சோப்புகள், தூய்மைப்படுத்திகள் மற்றும் கையுறைகளைக் கொண்ட சுமார் 250 தூய்மைப் பொதிகள் வழங்கப்பட்டன. இச்சங்கம், சுமார் 220 கடைகள் மற்றும் வணிக நிலையங்களைத் தொற்றுநீக்கிகளால் முழுமையாகத் தூய்மைப்படுத்தியது.



**RC மொராதாபாத் பிராஸ்சிட்டி ஸ்டார்ஸ் — RID 3100**

இந்நகரத்தில் உள்ள சித் மருத்துவமனை வளாகத்தில், மருத்துவர்கள், துணை மருத்துவ ஊழியர்கள், நோயாளிகள் மற்றும் அவர்களைக் கவனித்துக்கொள்பவர்களுடைய நன்மைக்காகத் தொற்று நீக்கிச் சுரங்கமொன்று நிறுவப்பட்டது. இந்த வசதி, COVID-19 நோய்த்தொற்றுக்கு எதிராகப் பாதுகாக்கும்.



**RC பெரெய்லி ஸ்ரீ — RID 3110**

சரஸ்வதி ஷிஷு மந்திரில் ஒரு பொது நலன் முகாமுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது, இதில் 280க்கும் மேற்பட்ட மாணவர்கள் பல நோய்களுக்கு ஆலோசனை பெற்றார்கள். மருத்துவர்கள் குழந்தைகளைப் பரிசோதித்து, மருந்துகளைப் பரிந்துரைத்த இந்நிகழ்ச்சியை ரோட்டரியன்கள் ஒருங்கிணைத்து நடத்தினார்கள்.



**RC வாரணாசி சென்ட்ரல் — RID 3120**

ஹிந்து சேவா சதன் மருத்துவமனையில், RC மும்பை நார்த் என்ட், RID 3141 ஒத்துழைப்புடன் ஓர் இலவசக் கண்புரை அறுவைச்சிகிச்சை முகாம் நடத்தப்பட்டது. இதில் நூறு அறுவைச்சிகிச்சைகள் செய்யப்பட்டன, பெரும்பாலும் சமூகத்தின் நலிந்த பிரிவுகளைச் சேர்ந்த பெண்கள் இதனால் பலன் பெற்றார்கள். அறுவைச்சிகிச்சைக்குப்பிறகு, அனைத்து நோயாளிகளுக்கும் மருந்துகள், மூக்குக்கண்ணாடி ஆகியவை வழங்கப்பட்டன.



# செய்திகள்

## RC பன்வெல் எலைட் — RID 3131

RAC பன்வெல் எலைட் ஒத்துழைப்புடன் 15 குடும்பங்களுக்கு உணவு தானியப் பொதிகள் நன்கொடையாக அளிக்கப்பட்டன. 55 குழந்தைகளைக் கொண்ட ஆஷாலயா ஆதரவற்றோர் நிலையத்துக்குச் சுமார் 1.2 டன் உணவு தானியங்கள் மற்றும் பொருட்கள் வழங்கப்பட்டன. இச்சங்கம் RC பன்வெல் ஹரிசானுடன் சேர்ந்து, முடக்கத்தினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட கைம்பெண்களின் குடும்பங்களை ஆதரிப்பதற்காக உணவு தானியப் பொதிகளை வழங்கியது.



## RC பாம்பே க்வீன் சிட்டி — RID 3141

DG ஹர்ஜித் சிங் தல்வார் ஒரு மிகப்பெரிய மருத்துவ முகாமைத் தொடங்கிவைத்தார், இதனால் 2,500 பேர் பலன் பெற்றார்கள். இந்த முகாம் உள்ளூர் மருத்துவமனைகள், தன்னார்வலர் அமைப்புகள், தனியார் நிறுவனங்கள் மற்றும் ரோடராக்டர்கள் ஆதரவுடன் கடந்த 14 ஆண்டுகளாக நடந்துவருகிறது.






## RC டோம்பிவ்லி தொழிற்பகுதி — RID 3142



நேர்வித நலன் திட்டத்தை முன்னிறுத்துவதற்காக, டோம்பிவ்லியில் உள்ள அனைத்து ரோட்டரி சங்கங்களும் சேர்ந்து ரோட்டரி நல மையத்தில் ஒரு நலப்பரிசோதனை முகாமுக்கு ஏற்பாடு செய்திருந்தன, இதில் DG மோகன் சந்தவர்கர் பங்கேற்றார். 100க்கும் மேற்பட்ட மக்களுக்கு ஆக, சர்க்கரை அளவு மற்றும் BMஐ போன்ற அவசியத் தகவல்கள் பரிசோதிக்கப்பட்டன.

## RC க்ரேட்டர் ஹைதராபாத் — RID 3150

விஜயவாடாவில் உள்ள அன்றாடக் கூலித் தொழிலாளர்கள், போக்குவரத்துக் காவல்துறையினர் மற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு, வாய்வழி ரீஹைட்ரேஷன் உப்புகள் மற்றும் மளிகைப் பொருட்களை வழங்குவதற்காக, Rtn ஸ்ரீனிவாஸ் மற்றும் அவருடைய நண்பர்கள் ரூ.80,000 பங்களித்தார்கள். அத்துடன், PM CARES நிதிக்குச் சங்க உறுப்பினர்கள் ரூ.1.6 லட்சம் நன்கொடையாக வழங்கினார்கள்.



## RC கார்வார் பர்ஷிம் — RID 3170

சுமார் 600 மக்கள் சங்கம் நடத்திய வாக்கத்தான் நிகழ்ச்சியில் பங்கு பெற்றனர். இதிலிருந்து திரட்டி நிதியை இச்சங்கம் தன் தல திட்டங்களுக்கு பயன்படுத்த உள்ளது.

**RC மங்களூர் மெட்ரோ** — RID 3181

டைகோலியில் உள்ள முதியோர் இல்லமான ஸ்ரீ சாய் சேவா பிரதிஸ்தானத்துக்கு ஒரு DDF நல்கையின்கீழ் ஒரு மின்னாக்கிக் கருவி நன்கொடையாக வழங்கப்பட்டது. இத்துடன், அந்த முதியோர் இல்லத்தின் மற்ற பழுதுபார்த்தல் பணிகள், பொதுவான நிர்வாகச் செலவுகளுக்காக இந்தச் சங்கம் ரூ.4.5 லட்சம் வழங்கியது. அங்கு வசிப்பவர்களுக்குக் கம்பளிப் போர்வைகள் மற்றும் தலையணைகள் வழங்கப்பட்டன.




**RC தரிகெரெ** — RID 3182

நாள்தோறும் குறைந்தது 3,000 பேர் கடந்து செல்கிற APMC வாசல் என்கிற ஒரு பரபரப்பான இடத்தில், ரூ.1.5 லட்சம் செலவில் ஒரு தொற்றுநீக்கிச் சுரங்கம் அமைக்கப்பட்டது. அந்தச் சுரங்கத்தை மூன்று மாதங்களுக்கு இந்தச் சங்கமே பராமரிக்கும்.



**RC கோயம்பத்தூர் மெரிடியன்** — RID 3201

இந்தச் சங்கம் தன்னுடைய அடையாளத் திட்டமான முதல் காலடித் திட்டத்தின்கீழ், பிப்ரவரியில் ஒன் கேர் மருத்துவ மையத்தில் நான்கு மாற்றுத்திறனாளிக் குழந்தைகளுக்குத் திருத்த அறுவைச்சிகிச்சைகளை ஆதரித்தது. இதற்குமுன் நடைபெற்ற ஒரு பரிசோதனை முகாமில் 44 குழந்தைகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்கள், அதில் நால்வருக்குதான் இந்த அறுவைச்சிகிச்சைகள் நடைபெற்றன.



**RC திருப்பூர் வெஸ்ட்** — RID 3202

மங்களம் பஞ்சாயத்தில் உள்ள எட்டு PHCக்களுக்கு ரூ.75,000 மதிப்புள்ள அலமாரிகள், சமையலறைப் பொருட்களை DG A கார்த்திகேயன் நன்கொடையாக வழங்கினார். அத்துடன், அறுவைச்சிகிச்சை செய்து கொள்கிற இருவருக்கு உதவித்தொகையாகத் தலா ரூ.10,000 வழங்கப்பட்டது.



**RC ஹரிப்பாத்** — RID 3211

திரிக்குன்னப்புழாவில் கடலுக்கருகில் இடிந்த வீடொன்றில் மூதாட்டி ஒருவர் தன்னுடைய 40 வயது மாற்றுத்திறனாளி மகனுடன் வசித்துவந்தார்; அவர்களுடைய வீட்டை இந்தச் சங்கம் மீண்டும் கட்டித்தந்துள்ளது.




# செய்திகள்

**RC ஸ்ரீவில்லிபுத்தூர் கிரீன் சிட்டி** — RID 3212
விருதுநகரைச் சேர்ந்த பார்வைத்திறன் குறைபாடுள்ள 50 பேருக்கு மளிகைப் பொருட்கள் வழங்கப்பட்டன; முடக்கக் காலகட்டத்தைச் சமாளிக்க இது அவர்களுக்கு உதவும்.



**RC ராய்கர் ஸடீல் சிட்டி** — RID 3261
தேவையுள்ள 400 குடும்பங்களுக்கு அரசு அலுவலர்கள் முன்னிலையில் மளிகைப் பொருள் பைகள், காய்கறிகள் வழங்கப்பட்டன. இந்த முயற்சியில், திட்டத்தின் தலைவர் ஜெயந்தா டெட்வருக்கு உள்ளூர் அவை உறுப்பினர்கள் உதவினார்கள்.






**RC வேலூர் காஸ்மோஸ்** — RID 3231
முடக்கத்தின்போது, உள்ளூர்ச் சந்தையிலுள்ள காய்கறி விற்பனையாளர்களுக்கும் ஒரு முதியோர் இல்லத்துக்கும் ரோட்டரியன்கள் காலை உணவு வழங்கினார்கள். தூய்மைப் பணியாளர்கள், காவல்துறை ஊழியர்களுக்கு அவர்கள் நொறுக்குத்தீனிகளை வழங்கினார்கள், தேவையுள்ளவர்களுக்கு உணவுத் தானியங்களை வழங்கினார்கள்.




**RC பராதீப்** — RID 3262
முடக்கம் தொடங்கியதிலிருந்து, பிச்சைக்காரர்கள், நடைபாதையில் வாழ்கிறவர்கள், இடம் பெயர்ந்த குடும்பங்கள், இன்னும் பல தேவையுள்ள மக்கள் தங்களுடைய வாழ்வாதாரத்தைத் தக்கவைத்துக்கொள்ள இயலாமல் சிரமப்பட்டார்கள், இவர்களுக்கு இந்தச் சங்கத்தின் உறுப்பினர்கள் மதிய உணவுப் பொட்டலங்களை வழங்கினார்கள்.




**RC சென்ட்ரல் கல்கத்தா** — RID 3291
அரிசி, பருப்பு, உருளைக்கிழங்கு, எண்ணெய் உப்பு மற்றும் சோப் கொண்ட 5,000க்கும் மேற்பட்ட பங்கீட்டுப் பொதிகள் கொல்கத்தாவின் பல பகுதிகளில் உள்ள அன்றாடக் கூலித் தொழிலாளர்கள், அவர்களுடைய குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன, இதற்கு உள்ளூர்க் காவல்துறையினர் மற்றும் வார்ட் உறுப்பினர்கள் உதவினார்கள்.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

வடிவமைப்பு: L குணசேகரன்

# ரோட்டரி இன்டர்நேஷனல் பிறரிடமிருந்து,

# COVID-19 ஆல்

## பாதிக்கப்பட்ட சமூகங்களுடன் ஒற்றுமையை வலியுறுத்தும் இணை அறிக்கை

அநேகமாக இந்த உலகிலிருக்கும் ஒவ்வொரு சமூகத்துடனும் பின்னிப் பிணைந்துள்ள கிவானிஸ் இன்டர்நேஷனல், அரிமா சங்கங்கள் இன்டர்நேஷனல், ஆப்டிமிஸ்ட் இன்டர்நேஷனல் மற்றும் ரோட்டரி இன்டர்நேஷனல் ஆகிய சேவை அமைப்புகள் ஒன்றோடொன்றும், நம்முடைய அக்கம்பக்கத் திலுள்ளோருடனும் இணைப்புகளைப் பராமரிப்பதற்காகப் பாது காப்பாகவும் விடாமுயற்சியுடனும் பணியாற்றுகிறார்கள், நாம் COVID-19ஐச் சமாளிப்பதற்கும், அதன் தாக்கங்களை வெல்வதற்கும் உதவுகிறார்கள். நம்முடைய ஒட்டுமொத்த வலைப்பின்னல்களாகிய 3.2 மில்லியன் உறுப்பினர்கள் என்கிற வலிமையை நாம் பயன்படுத் திக்கொள்கிறோம், அதன்மூலம், தனிமைப்படுத்தல் மற்றும் அச்சத்தின் தாக்கங்களை உணர்பவர்களுக்கு வசதியுணர்வையும் நம்பிக்கையையும் வழங்குகிறோம். மேலும், நாம் நம்முடைய ஒட்டுமொத்தத் திறன்களில், வளங்களில், மற்றும் யோசனைகளில் கவனம் செலுத்து கிறோம், இந்த நோயை எதிர்ப்பதற்கும் உயிர்களைக் காப்பதற்கும் முன்னணியில் நின்று போராடும் நலப் பராமரிப்புப் பணியாளர்கள் மற்றும் முதல் எதிர்வினையாளர்களுக்கு ஆதரவளிக்கிறோம்.

நிச்சயமற்ற இந்த நேரங்களில், உலகெங்குமுள்ள சமூகங்கள் குணம் பெறவேண்டும், செழித்து வளரவேண்டும், முன்பு எப்போதையும்விடக் கூடுதல் ஒற்றுமையை உணரவேண்டும், இதில் அவர்களுக்கு உதவுவதற்காக உங்களுடைய உள்ளூர்ச் சேவைச் சங்கங்கள் ஒன்றாகச் செயல்படுகின்றன, புதுமைச்சிந்தனையுள்ள வழிகளைக் கண்டறிகின்றன, சவால்களைச் சமாளிக்கின்றன, இதற்காகத் தொடர்ந்து தங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ளன.

COVID-19க்கு எதிரான பன்னாட்டு முயற்சியானது, ஒவ்வொரு நாட்டிலும் எடுக்கப்படும் செயல்பாடுகளைப் பொறுத்தது. செயல்பாட்டை நம்புகிற மக்களாகிய நாம், ஒருவரோடொருவர் இணைந்து செயல்படவேண்டிய நேரம் இது, தேவையுள்ள மக்களுக்கு உடனடியாக உதவவேண்டிய நேரம் இது — மார்க் டேனியல் மலோனி, ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர், 2019-2020.

உலக அளவில் பரவியிருக்கிற இந்த நோயின் அளவையும் பரிமாணத்தையும் வைத்துப் பார்க்கும்போது, நம்முடைய உலகக் குடிமக்கள் வல்லுனர்களுடைய அறிவுரையையும் எச்சரிக்கைகளையும் கவனிக்கவேண்டும். நம்முடைய ஒட்டுமொத்த உறுப்பினர்கள், தன்னார்வலர்களுடைய பணி, திட்டங்கள் நின்றுவிடக்கூடாது. இந்த நெருக்கடிக்குப்பிறகு வரக்கூடிய பல சமூக, பொருளாதாரச் சவால்களுக்கு எதிர்வினையாற்று வதற்கு உள்ளூர் அரசாங்கங்களுக்கு நாம் உதவவேண்டும், அந்த நேரத்தில் நம்முடைய உடனடி எதிர்வினை தேவையாக இருக்கும் — அட்ரியன் எல்காக், ஆப்டிமிஸ்ட் இன்டர்நேஷனல் தலைவர், 2019-2020.

மிகப்பெரிய சவால்கள் நம்மைப் பரிசோதிக்கின்றன, ஆனால், அவை நம்மை ஒன்றாகவும் இணைக்கின்றன. அரிமாக்கள் பாதுகாப்பான முறையில் சேவை புரிவதற்கான புதிய வழிகளைக் கண்டறிகின்றன. COVID-19ன் தீவிரமான விகிதத்தைச் சந்திக்கும் சமூகங்களுக்கு உதவுவதற்காக நம்முடைய அரிமா சங்கங்கள் இன்டர்நேஷனல் அறக்கட்டளை ஒரு மில்லியன் டாலர்களுக்குமேல் வழங்கியுள்ளது, கூடுதல் நல்கைக் கோரிக்கைகள் நாள்தோறும் வந்து கொண்டிருக்கின்றன. நம்முடைய சமூகங்கள் சேவைச் சங்கங்களைச் சார்ந்திருக்கின்றன, அவர்களுக்காக நாம் அங்கு இருப்போம், எப்போதும் போல் ஒன்றாகச் சேர்ந்து அவர்களை ஆதரிப்போம், வலுவாக்குவோம் — டாக்டர் ஜங்-யுல் சோய், அரிமா சங்கங்கள் இன்டர்நேஷனல் தலைவர், 2019-2020.

இந்தக் கடினமான நேரங்களில், ஒவ்வொரு நாளும், உலகம் முழுக்கப் பல நாயகர்களைக் காண்கிறோம். மனித குலத்தின் நன்மைக்காகத் தங்களுடைய சொந்த உடல்நலனை ஆபத்தில் தள்ளும் நல மற்றும் பாதுகாப்பு வல்லுனர்களை நாம் அனைவரும் அங்கீகரிக்கவேண்டும் என்று நான் ஊக்குவிக்கிறேன். கல்வியாளர்கள், மளிகைக்கடைப் பணியாளர்கள், பொருட்களை வழங்கும் ஓட்டுநர்கள், இப்படி வீட்டில் தங்க இயலாத இன்னும் பலப்பல தொழில் வல்லுனர்கள்... உங்கள் அனைவருக்கும் கிவானிஸ் குடும்பம் நன்றி தெரிவிக்கிறது. நம்முடைய நண்பர்கள், அக்கம் பக்கத்தில் உள்ளோரைப் பாதுகாப்பாக வைப்பதில் நாம் அனைவரும் ஒரு முக்கியமான பங்கை ஆற்றுகிறோம். உலகச் சுகாதார அமைப்பு, உங்களுடைய உள்ளூர் நல அமைப்புகளுடைய அறிவுரையை, உங்களுடைய அரசாங்கத்தின் உதவிக் குறிப்புகளைத் தயவு செய்து பின்பற்றுங்கள். தயவுசெய்து, பாதுகாப்பாக இருங்கள் — டேனியல் விக்னெரோன், கிவானிஸ் இன்டர்நேஷனல் தலைவர், 2019-2020.

# லாக்டவுன் விநோதங்கள்!



**கூலித் தொழிலாளர்களின் அன்பு!**

தேசிய ஊரடங்கு முடிந்து பள்ளிகள் திறக்கப்படும்போது ராஜஸ்தான் மாநிலம், சிகார் மாவட்டம், பல்ஸானாவில் உள்ள அரசுப் பள்ளி மாணவர்களுக்கு இன்ப அதிர்ச்சி காத்திருக்கிறது. ஆம் அந்தப் பள்ளி இப்போது புதுப்பொலிவுடன் காட்சியளிக்கிறது. ஊரடங்கு காலத்தில் இங்கு தங்கியிருந்து வெளிமாநிலத் தொழிலாளர்கள் நேரத்தை வீணடிக்காமல் பள்ளியைச் சீரமைத்து, தூய்மைப்படுத்தி, வர்ணம் பூசி பள்ளிக்கு புதுப்பொலிவை ஏற்படுத்தியுள்ளனர். தங்களுக்கு அடைக்கலம் தந்த பள்ளிக்கு நன்றிக்கடனாக கூலி எதுவும் வாங்காமல் இதைச் செய்துள்ளனர். அன்பிற்கு எல்லை ஏது.




**பெண்ணுக்கு உதவ கூரியராக செயல்பட்ட போலீஸார்!**

தேசிய அளவிலான ஊரடங்கு கடுமையாக அமல்படுத்தப்பட்ட நேரத்தில் மரபணு கோளாறு காரணமாக அவதியுற்ற பெண்ணுக்கு தக்க சமயத்தில் மருந்து கிடைக்கச் செய்து உதவியுள்ளனர் தமிழக-கர்நாடக போலீஸார். தேனி மாவட்டத்தைச் சேர்ந்த அந்தப் பெண் Maple Syrup Urine Disorder என்னும் நோயால் அவதிப்பட்டுவந்தார். (என்ஸைம்கள் குறைபாட்டால் இந்த நோய் ஏற்படுகிறதாம்.) பெங்களூரில் இதற்கான மருந்து கிடைப்பதாக கேள்விப்பட்ட பெண்ணின்தாய், உடனடியாக மாவட்ட அதிகாரி கவிதாவைத் தொடர்பு கொண்டார். அந்த அதிகாரி, பெங்களூரில் உள்ள டீலரிடம் பேசியதுடன், மருந்து கிடைக்க உதவுமாறு மாநகர போலீஸ் கமிஷனரை கேட்டுக்கொண்டார். அவ்வளவுதான். இரண்டு போலீஸார் அந்த மருந்தை ஓசூர் சோதனைச்சாவடியில் கொடுக்க, அதை தேனியிலிருந்து 14 மணி நேரம் பயணம் செய்து ஓசூர் சென்ற போலீஸார் பெற்று பெண்ணின் வீட்டில் ஒப்படைத்துள்ளனர். வீட்டில் உள்ளவர்கள் மருந்துக்காக கொடுத்த பணத்தையும் வாங்க போலீஸார் மறுத்துவிட்டனராம்.



**சமூக இடைவெளிக்குக் குடை!**

கேரள மாநிலம், ஆலப்புழை மாவட்டத்தில் உள்ள தண்ணீர்முக்கோம் கிராமப் பஞ்சாயத்து, 23 வது வார்டில் ஊரடங்கு காலத்தில் மக்கள் சமூக இடைவெளியைப் பின்பற்ற அனைவருக்கும் குடை வழங்கப்பட்டது. மக்கள் அனைவரும் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும். வெளியில் வரும்போது குடை பிடித்து சமூக இடைவெளியை பின்பற்ற வேண்டும் என்றும் உத்தரவிட்டது. மாநில நிதியமைச்சர் தாமஸ் ஐசக், மக்கள் வெளியில் வரும்போது குடையை விரித்தபடி செல்லவேண்டும். இரண்டு குடைகளுக்கு இடையே ஒரு மீட்டர் இடைவெளி இருக்கவேண்டும் என்றும் சுட்டிரையில் (டுவிட்டரில்) பதிவிட்டிருந்தார். இந்த யோசனையை ஒடிஸா மாவட்டம், கஞ்சம் மாவட்ட மக்களும் பின்பற்றத் தொடங்கிவிட்டனராம்.



**மணமகளை கைப்பிடிக்க சைக்கிள் பயணம்!**

நாடு முழுவதும் ஊரடங்கு அமல் படுத்தப்பட்ட நேரத்தில் என்ன செய்வது எனத் தெரியாமல் பலரும் வீட்டிலேயே முடங்கிக் கிடக்கும் போது உத்தரப்பிரதேச மாநிலம், ஹமிர்பூரில் உள்ள பௌதியா கிராமத்தின் கல்குபிரஜாபதி என்ற 23 வயது இளைஞர் மட்டும் மனம் தளராமல், தனக்கு நிச்சயிக்கப்பட்ட பெண்ணைத் திருமணம் செய்துகொள்ள பக்கத்தில் உள்ள மஹோமா மாவட்டம், புனியா கிராமத்துக்கு 100 கி.மீ. சைக்கிள் பயணம் செய்து அவரை கைப்பிடித்துள்ளார். அவர்கள் திருமணம் ஒரு கோவிலில் எளிமையாக நடந்தது. திருமணம் முடிந்த உடனேயே மனைவியை சைக்கிளில் பின்னால் அமரவைத்து வீட்டிற்கு அழைத்து வந்து விட்டார். சுகமான சுமை.



**டாக்டர்களை கௌரவித்த பிரிட்டன் பிரதமர்!**

பிரிட்டிஷ் பிரதமர் போரிஸ் ஜான்ஸனுக்கும் அவரது துணைவியார் கேரி சைமண்ட்ஸுக்கும் அழகான ஆண் குழந்தை பிறந்துள்ளது. அக்குழந்தைக்கு வில்பிரட் லாரி நிக்கோலாஸ் ஜான்ஸன் என மிக நீளமாக பெயரிட்டுள்ளனர். வில்பிரட் என்பது ஜான்ஸனின் தாத்தாவின் பெயர், லாரி என்பது கேரி சை மைண்ட்ஸின் தாத்தாவின் பெயர். கரோனா தொற்று அறிகுறி காரணமாக போரிஸ் ஜான்ஸன், மருத்துவமனையில் ஒருவாரம் தங்கி சிகிச்சை பெற்றார். அப்போது அவருக்கு நிக் பிரின்ஸ், நிக் ஹார்ட் என்ற இரு டாக்டர்கள் சிகிச்சை அளித்தனர். தனது உயிரை காத்த டாக்டர்களை கௌரவிக்கும் வகையில் நிக்கோலாஸ் என்ற பெயரையும் சேர்த்துள்ளார் ஜான்ஸன்.

ஒருங்கிணைப்பு: ஜெய்ஸ்ரீ; வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

Regn. No. TN/CCN/677/2019-2021
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2019-2021
Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹35
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372 Rotary News Tamil Published on the first week of every month

# Renew your Magazine Subscription

It is time to renew your subscription of *Rotary News* or *Rotary Samachar*. Please pay your subscription dues promptly to ensure timely and uninterrupted receipt of your magazine.

Have you moved to another address? Update your address immediately with us so you get your magazine regularly. And make sure you mention the right PINCODE.

Presidents/Secretaries, please inform us immediately when you add a new member to your club or when someone leaves your club. Our Email id is *rotarynews@rosaonline.org*.

Please send your iconic projects in word file and pictures added separately (not embedded) to *rotarynewsmagazine@gmail.com*.

## Rotary News/Rotary Samachar Subscription remittances

Payment – ₹420 per member for 12 months — can be made by cheque or draft favouring 'Rotary News Trust' and sent to us at Rotary News Trust, Dugar Towers, Third Floor, 34 Marshalls Road, Egmore, Chennai 600008.

## Your magazine dues can also be transferred online at

| | | |
|---|---|---|
| Bank | : | HDFC Bank |
| Branch | : | Montieth Road, Egmore, Chennai |
| A/c Name | : | Rotary News Trust |
| A/c No. | : | 50100213133460 (SB Account) |
| IFSC Code | : | HDFC0003820 |

## E mail us following details after online transfer

Name of Club
President/Secretary's name and contact details
Amount/Date of transfer/UTR Number

**For physical payment by cheque or cash in bank, write Club Name only without prefixing "Rotary club of". Eg. Rotary Club of Delhi Central should be written: Delhi Central.**